விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 10 வியாழக்கிழமை (26.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 342

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# இலங்கையுடன் இராணுவ உறவை வலுப்படுத்த அமெரிக்கா ஆர்வம்

## இராஜாங்க திணைக்களம் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கையிடமிருந்து நல்லிணக்க முயற்சிகளை எதிர்பார்ப்பது போல் வலுவான வர்த்தக, முதலீட்டுத் தொடர்புகளையும், இராணுவ உறவுகள்ளைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பையும் அமெரிக்கா ஆவலுடன் எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான பயணத்தின் போது ஐ.நாவுக்கான அமெரிக்கப் பிரதிநிதி சமந்தா பவர் கோடிட்டுக் காண்பித்துள்ளார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாரம் இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண் டிருந்த சமந்தா பவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஏற்கெனவே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் இலங்கை இராணுவத்

24ஆம் பக்கம் பார்க்க

## கோத்தபாயவுக்கு இன்று விசாரணை



## நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

### இன்று சபாநாயகரிடம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தமக்கு எதிராக கொண்டுவரப் படவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானமானது சவாலான ஒரு விடயமல்லவென நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பொய்யான தரவுகளை முன் வைத்து இந்த முறை வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக, ஒன்றிணைந்த

## தங்கப் புதையலை தோண்ட பரு. நீதிமன்றம் அனுமதி

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டில் உள்ள கடற்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் காலத்தில் புதைத்ததாக கருதப்படும் தங்கப் புதையலை தோண்டுவதற்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி

24ஆம் பக்கம் பார்க்க

## எத்தனை தடைகள் வந்தாலும் மாவீரர்களை நினைவு கூருவோம்

### சிவாஜிலிங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எம் மக்கள் வாழ்வதற்காக தமது உயிரினை அர்ப்பணித்த மாவீரர் கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,



(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு, பாரிய நிதி மோசடி குறித்த ஜனா

24ஆம் பக்கம் பார்க்க

கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொட்டாஞ்சேனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன்

திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளதாக, ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் அறிவித்தன.

அந்த வகையில், இந்த நம்பி

24ஆம் பக்கம் பார்க்க

(யாழ்ப்பாணம்)

எம் மக்கள் வாழ்வதற்காக தமது உயிரினை அர்ப்பணித்த மாவீரர்களை எத்தனை தடைகள் வந்தாலும் நினைவு கூருவோம் என வடமாகாண சபை உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

மாவீரர் தினத்தினை அனுஷ்டிக்கக்கூடாதென, நல்லாட்சி அரசாங்கத்திலும்கூட அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவது வேதனையளிப்பதாக உள்ளது.

அரசாங்கத்திற்கு எதிராக போராடிய ஜே.வி.பி கிளர்ச்சியாளர்கள் கார்த்திகை வீரர் தினம் என எந்த தடையுமின்றி கொண்டாடி வருகி

24ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மோல்டா பயணம்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று 26 ஆம் திகதி மோல்டா நாட்டுக்கு புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி, நாளை 27ஆம் திகதி மோல்டா நாட்டில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

மோல்டா நாட்டில் இடம்பெறவு

24ஆம் பக்கம் பார்க்க




# ஜனாதிபதி அதிகாரத்தை குறைக்க அரசியலமைப்பு!


## பிரதமர் ரணில் உரை

(கொழும்பு)

எஞ்சியுள்ள ஜனாதிபதி அதிகாரத்தை குறைப்பதற்காக புதிய அரசியல் அமைப்பு சபையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரை

24ஆம் பக்கம் பார்க்க



## கிளிநொச்சியில் பிரபாவுக்கு வாழ்த்து

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 61ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கிளிநொச்சியில் துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன.

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு 61ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள் என அச்சிடப்

24ஆம் பக்கம் பார்க்க

# மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தினால் நடவடிக்கை

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

மாவீரர் தின நிகழ்வுகள் நடத்தப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பொலிஸ ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகவே காணப்படுகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வகையில் பொது நிகழ்வுகள் நடத்தப்படுவதனை அனுமதிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு

24ஆம் பக்கம் பார்க்க

## ஜனவரியில் பிரதமர் சுவிஸ் பயணம்

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள உலக பொருளாதார அமைப்பின் 45ஆவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு பயணமாகவுள்ளார்.

நான்காம் தொழிற்றுறைப் புரட்சியின் தேர்ச்சி என்ற தலைப்பில்,

24ஆம் பக்கம் பார்க்க

# பட்ஜெட்டை ஆதரிக்குமாறு சி.சு.கவிடம் கோரிக்கை

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை சந்தித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் 25 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வரவுசெலவு திட்டம் குறித்து கடும் அதிருப்தியடைந்துள்ள சிறிலங்கா

24ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மீண்டும் சிங்கள அரச அதிபர் கூட்டமைப்பு கண்டனம்!

## அரசுக்கான ஆதரவை விலக்கவும் கோரிக்கை

(குருமன்காடு)


வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக மறுபடியும் சிங்கள மொழி பேசும் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்துள்ள வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வவுனியா மாவட்ட வடமாகாண சபை உறுப்பினர்கள் புதிய அரசாங்கத்திற்கு அளித்துவரும் நல்லெண்ண அடிப்படையிலான ஆதரவை கூட்டமைப்பின் தலைமைகள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என கோரியிருக்கின்றனர்.

நேற்றுக் காலை வவுனியா சுவர்க்கா தங்ககத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கமளித்த அவர்கள், இது தொடர்பில் கூட்டு அறிக்கையொன்றையும் வெளியிட்டிருக்கின்றனர்.

கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றாகிய ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் சார்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், டாக்டர் சிவமோகன், வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, ஆர்.இந்திரராசா, எம்.பி.நடராசா ஆகியோரும் தமிழரசுக் கட்சியின் சார்பில் வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சத்தியலிங்கம், தமிழீழ மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் ஆகியோர் இந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

முரண்பாட்டுக்கும் சர்ச்சைக்குமுரிய வவுனியா மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபர் நியமனம் தொடர்பில் தாங்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் ஆகியோரை சந்தித்து, தமது ஆட்சேபனையையும் நியாயங்களையும் எடுத்துக்கூறிய போது, தமிழர் ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிப்பதாக உத்தரவாதம் அளித்த பின்னர், மறுபடியும் சிங்கள மொழி பேசும் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர் நியமிக்கப்பட்டுள்ளமையானது, ஜனாதிபதி தேர்தல் மற்றும் ஆட்சி மாற்றத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், வாக்களித்த தமிழ் மக்களையும் ஏமாற்றும் ஒரு நடவடிக்கையாகவே தம்மால் பார்க்க முடிகின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஓர் அரசாங்க அதிபர் நியமனமாகிய சிறிய விடயத்திலேயே நியாயமான தமது கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்போது, ஏனைய விடயங்களில் சாதகமான முடிவுகள் அரசாங்கத்திடம் இருந்து வரும் என்று பொறுமையுடன் தாங்கள் எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என அவர்கள் கேள்வி எழுப்பியிருக்கின்றனர்.



அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனையும், தமிழ் மக்களையும் இந்த அரசாங்கமும் முந்தைய அரசாங்கத்தைப்போலவே ஏமாற்றி வருவதாகவே கருதுவதாகவும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனர்.

ஆகவே, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைமைகள் அரசாங்கத்திற்கு அளித்து வரும் நிபந்தனையற்ற ஆதரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என அவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-250)

## பியர் வகைகளின் வரியை அதிகரிக்க திட்டம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட பியர் வகைகளுக்கான வரியை அதிகரிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.

குறைந்த அல்கஹோல் செறிவினை உடைய இறக்குமதி செய்யப்படும் பியர் வகைகளுக்கான வரியை மேலும் அதிகரிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார்.

அண்மையில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இறக்குமதி செய்யப்படும் பியர் வகைகளுக்கான வரி குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், ஜனாதிபதி இந்த வரியை அதிகரிக்குமாறு நிதி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (எ-11)

## கிணற்றுக்குள் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

கிணற்றுக்குள் தவறி விழுந்ததில் இரண்டு பிள்ளையின் தந்தை ஒருவர் பரிதாபகரமாக மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று வேலணையில் இடம் பெற்றுள்ளது. இதில் அதேஇடத்தினை சேர்ந்த தவச்செல்வம் (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11)

## மீசாலையில் மோட்டார் குண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவகச்சேரி, மீசாலை மேற்கு கண்டி வீதியை அணமித்த பகுதியிலுள்ள வீட்டு வளாகத்தினுள் இருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த மோட் டார் குண்டு நேற்று காலையில் மீட்கப்பட்டதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

குப்பைகளை புதைப்பதற்காக குழி ஒன்றை வெட்டும் போதே குறித்த மோடடார் குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)




கேக் ஐசிங் பயிற்சி வகுப்பு

28.11.2015

சனி பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பம்

திருமண,பிறந்த நாள் மற்றும் சகல வைபவங்களுக்குமான ஐசிங் அலங்கரிப்பினை சுயமாகச் செய்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்

தொழில் புரிவோரும் கலந்து கொள்ளும் வகையில் நேர அட்டவணை அமைக்கப்படும்.



தூரிகை

மத்திய கல்லூரி வீதி,
நெல்லியடி.

(சி-2796)


## பொதிகள் சேவை நிறுவனத்தில் நேற்றிரவு தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

பொதிகள் சேவைகள் நிறுவனம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

அந் நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த கணனிகள்,பொதிகள் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் என்பன எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் யாழ்ப்பாணம் கஸ்தூரியர் வீதியில் அமைந்துள்ள வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவைகள் நிறுவனம் ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் உடனடியாக யாழ்.மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவினருக்கு தகவல் கொடுக்கப்பட்டதனையடுத்து விரைந்து செயற்பட்ட தீயணைப்பு பிரிவினரும் பொது மக்களும் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததோடு தீ அருகில் உள்ள ஏனைய கடைகளுக்கு பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆரம்ப கட்ட மதிப்பில் சேதமான பொருட்களின் பெறுமதி சுமார் 7 இலட்சம் ரூபாய் என கூறப்பட்டது.

நேற்றைய தினம் கார்த்திகை தீபத்திருநாள் கொண்டாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

## தனித் தேசிய இனமாக தமிழினம் இருக்க வேண்டும்

### சிவில் சமூகம் தெரிவிப்பு

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சுய நிர்ணயத்தோடும் தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு சுயமாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய வகையிலான அதிகாரப்பகிர்வு அரசியல் யாப்பில் இடம்பெற வேண்டும். இதுவே நாட்டில் உள்ள அனைத்து மக்களும் சம உரிமையோடு அச்சமற்று வாழ வழிவகுக்கும் என தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான சிவில் சமூக பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அப்ரியல் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் சிவில் அமைப்புக்களின் தேசிய மட்டத்திலான அரசியல்தீர்வு பற்றிய செயலமர்வு கடந்த 23,24.25 ஆகிய தினங்களில் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறறது. குறித்த செயலமர்வின் இறுதிநாளாகிய நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்கால அரசியல் மாற்றத்தின் பின்பு அரசியல் தீர்வு தொடர்பில் பல்வேறு முன்னெடுப்புக்களும் அது தொடர்பான கலந்துரையாடல்களும் கருத்துப்பகிர்வுகளும் கடந்த காலங்களை விட தற்போது அதிகமான காணப்படும் சந்தர்ப்பத்தில் சிவில் சமூகத்தின் பங்களிப்பும் எதிர்பார்ப்புக்களும் உள்வாங்கப்படாத சூழ்நிலை காணப்படுவதை நாங்கள் நன்கு உணர்கிறோம். எனவே எமது கருத்துக்களை முன்வைக்க வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டுள்ளது

மேற்படி விடயம் தொடர்பாக தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய மட்ட சிவில் பிரதிநிதிகள் ஒன்றுகூடி கடந்த மூன்று நாட்களாக தொடர்ச்சியாக ஆராய்ந்தோம். அதன்போது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் அவர்களது கருத்துக்களை எம்மிடம் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தோம். அவர்கள் தமது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் முன்வைத்தனர்.

அத்துடன் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வை நோக்கிய எமது செயறபாட்டினை தொடர்ந்து முன்னெடுப்போம் எனவும் நிரந்தரமான தீர்வை முன்வைக்கும் தீர்மானங்களை எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினத்தன்று அனைத்து கட்சிகளினதும் பிரதிநிதிகளுக்கு முன்மொழியவுள்ளோம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எ-9)


கண்ணீர் அஞ்சலி

அமரர் காசிப்பிள்ளை பத்மநாதன்



S.V.M (Pvt) Ltd கொழும்பு
நிறுவனத்தில் காசாளராக பணிபுரியும்
பத்மநாதன் தயானந்தன் (சிவா)
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் காசிப்பிள்ளை பத்மநாதன்
25.11.2015 புதன்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்
கொள்வதோடு அவரது ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்

S.V.Murugesu
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

S.V.M (Pvt) Ltd,
122, டாம் வீதி,
கொழும்பு - 12.

(2589)

## விடுதலைப் புலிகளின்

# தலைவர் பிரபாவின் பிறந்த நாள் இன்று



**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 61 ஆவது பிறந்தநாள் இன்றாகும்.**

**இதனை முன்னிட்டு குமுதம் இதழில் பா.ராகவனால் எழுதப்பட்ட கட்டுரைத் தொகுப்பின் ஒரு பகுதி இங்கு மீள் பிரசுரமாகின்றது.**

பிரபாகரனுக்கு அதுதான் இறுதிவரை விளங்கவில்லை. இந்த முகத்தை நம்பாதே என்று எந்த மனிதனுடைய உள்ளுணர்வும் அத்தனை எளிதில் குரல் கொடுக்காது. இந்திய- இலங்கை அமைதி ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்கள் திரும்பத் திரும்ப அவருக்கு அதைத்தான் நினைவூட்டிக் கொண்டிருந்தன. எத்தனை நம்பிக்கை சொன்னார்? எத்தனை வாக்குறுதிகள் அளித்தார்? எப்படியெல்லாம பேசினோம்?

அந்தத் தினத்தை அவரால் மறக்க முடியாது. 1987 ஆம் ஆண்டு ஜூலை 28 ஆம் திகதி. புதுடில்லி அசோகா ஹோட்டலில் பிரபாகரன், பாலசிங்கம், திலீபன் ஆகியோர் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். யார் யாரோ வந்து பேசினார்கள். என்னென்னவோ பேசினார்கள். ஒப்பந்தம், அமைதி, ஒப்பந்தம், அமைதி, ஒப்பந்தம் அமைதி, சாரம் அதுதான். ஜே.என்.தீக்ஷித் குட்டிக்கரணம் அடித்துப் பார்த்து விட்டுச் சோர்ந்து போய்த் திரும்பியிருந்தார். நீங்கள் நான்கு முறை இந்தியாவை ஏமாற்றி விட்டீர்கள் பிரபாகரன்! என்று பரிதாபம் கொப்பளிக்கும் முகத்துடன் தீக்ஷித் விடைபெறும் போது சொல்லியிருந்தார். அதற்குப் பிரபாகரனின் பதில் எனில் நான்கு முறை நான் எம் மக்களைக் காப்பாற்றியிருக்கின்றேன் என்று பொருள்.

யாரும் புரிந்து கொள்ள மெனக்கெடத் தயாரா? பிரபாகரன் அதைத்தான் திரும்பத் திரும்பக் கேட்டார். இரண்டு வேறு வேறு இனங்கள். ஒன்றுக்கொன்று எந்தச் சம்பந்தமும் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. மதம் வேறு, கலாசாரம் வேறு, மொழி வேறு, வரலாறு வேறு, வாழ்க்கை முறை வேறு, சகலமும் வேறு. ஒன்று பெரும்பான்மை இனம், இன்னொன்று சிறுபான்மை இனம்.

சிறுபான்மை இனத்தின் மீது பெரும்பான்மை இனம் ஒரு தாக்குதலை நிகழ்த்துகிறது. திட்டமிட்ட தாக்குதல் தொடர்ச்சியான இடைவெளியற்ற நோக்கம் சிதறாத கட்டுக்கோப்பான தாக்குதல். எத்தனை ஆட்சிகள் மாறினாலும் தாக்குதல் மாறவில்லை. இலங்கை சுதந்திரம் கண்ட நாளாக அதுதான் நிலைமை. முற்றிலும் தமிழினத்தை ஒழித்து விடப் பார்க்கிறார்கள். இதுவரை கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை வேண்டுமா? தர இயலும்.

ஆனால் வைத்துக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று சொல்லுங்கள். உதவுவதென்றால் மனப்பூர்வமாக உதவி செய்யுங்கள். அல்லது எங்களை நிம்மதியாகப் போராட அனுமதியுங்கள். அதைத்தான் அவர் கேட்டார் மௌனமாக.

ராஜீவ் காந்தி தயாரித்திருந்த அமைதி ஒப்பந்தம் பிரபாகரன் ஏற்கக்கூடியதாக இல்லை. ஒரு நிரந்தரத் தீர்வுக்கான எந்த வாசலும் அந்த ஒப்பந்தப் பிரதியில் இல்லை என்று பிரபாகரன் கருதினார். தீக்ஷித் கொடுத்துவிட்டுப் போயிருந்த ஒப்பந்த நகலை பாலசிங்கம் படித்துச் சொன்னபோது பிரபாகரன் அப்படித்தான் சொன்னார்.

இல்லை அண்ணை. இது சரிப்படாது. நாம் ஏற்பதற்கில்லை. திரும்பத் திரும்ப அதைத்தான் பேசினார்கள். ஜே.என். தீக்ஷித் எம்.கே. நாராயணன், ரொமேஷ் பண்டாரி, அதிகார வர்க்கத்தின் அழகுப் பிரதிநிதிகள். அவர்களுக்குப் பதற்றம் இருந்தது. அச்சம் இருந்தது. ராஜீவ் பிரதமராகியிருந்த புதிது. சர்வதேச அளவில் இந்த ஒப்பந்தம் அரங்கேறினால் ஒரு கவனம் கிடைக்கும். உலகம் எப்போதும் இந்தியாவை கவனித்துக் கொண்டேதான் இருக்கின்றது. தெற்காசிய வல்லரசு. வலுவான மத்திய அரசு தனிக்கட்சி அரசு. புதிய பிரதமர் எப்படிச் செயற்படப் போகிறார்?

அன்றைக்கு இரவு பன்னிரண்டரை தாண்டிய நேரம் பிரபாகரனின் அறைக்கதவு தட்டப்பட்டது. எழுந்து விளக்கைப் போட்டு, கதவைத் திறந்தால் பாதுகாப்பு அதிகாரிகள் நின்றிருந்தார்கள். ராஜீவ் உங்களைச் சந்திக்க விரும்புகிறார். நாம் உடனே புறப்பட வேண்டும்.

நள்ளிரவிலும் விழித்திருந்து வேலை பார்க்கும் ராஜீவ், அப்போதும் தன் புன்னகையை உறங்க விடா மல் உலவ விடும் ராஜீவ். வாருங்கள் பிரபாகரன். உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன் உட்காரலாமே.

வெகு நேரம் பேசினார்கள். மூன்று விடயங்களில் பிரபாகரன் உறுதியாக இருந்தார். இன்னும் நிறையப் பேசினார்கள். ஒப்பந்தம் முடிந்த எழுபத்தி இரண்டு மணி நேரத்துக்குள் போராளிகள் தம் ஆயுதங்கள் அனைத்தையும் இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டுமெ்கிற விதி, போர் நிறுத்தம், இந்திய மேற்பார்வை இன்ன பிற அம்சங்கள்.

அந்த இரவில் தான் ராஜீவ் காந்திக்கும் பிரபாகரனுக்கும் இடையே முன் சொன்ன எழுதாத ஒப்பந்தமும் அரங் கேறியது. நீங்கள் ஒப்புக்கு ஆயுதங் களை ஒப்படைத்தால் போதும். மாதச் செலவுக்கு இந்தியா பணம் கொடுக் கும். ஆதரிக்க வேண்டாம். எதிர்க்காதிருந்தால் போதும். மாகாண சபையில் புலிகளுக் குக் கணிசமான இடம் இன்ன பிற.அவரைத் தவிர ஏனைய போராளி இயக்கங்கள் எது பற்றியும் இந்தியா வுக்குக் கவலையில்லை. எல்லோரும் ஏற்றுக் கொண்டு விட்டார்கள். யாருக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆஹா, இடைக்கால அரசு. அடடே ஆட்சி நம்வசம். பாதுகாவலுக்கு இந்தியா. என்ன செய்ய முடியும் ஜெயவர்த்தனாவால்? எதுவானாலும் பார்த்துக் கொள்ளலாம். இந்தியா இருக்கிறது. ராஜீவ் இருக்கிறார்.

இந்தியாவுக்கும் அது தான் பிரச்சினை. அனைத்து இயக்கங்களும் ஒப்புக் கொண்டு விட்டாலும் பிரபாகரன் ஒப்புக் கொள்ளாத வரை ஒப்பந்தத்தில் அர்த்தமில்லை என்பது ராஜீவுக்குத் தெரியும். விடுதலைப் புலிகளின் பலம் அவருக்குச் சொல்லப் பட்டிருந்தது. அவர்களுக்கு இருந்த மக்கள் ஆதரவு பற்றி துணி வியாபாரிகள் கதை கதையாக சொல்லியிருந்தார்கள். இயக்கங்களுக்கு இடையே பிரச்சினை. எதையாவது ஒன்றை தேர்ந்தெடு என்றால் யாழ்ப்பாணத்து மக்கள் கண்ணை மூடிக் கொண்டு பிரபாகரன் பக்கம் தான் நிற்பார்கள் என்று குறி சொல்லும் நபர் ஒருவர் அறிக்கை அனுப்பியிருந்ததை ராஜீவ் நினைவு கூர்ந்தார்.

நீண்ட உரையாடல்களுக்கு பின்னர் அசோகா ஹோட்டலுக்கு திரும்பிய தும் பிரபாகரன் பாலசிங்கத் திடம் சொன்னார். அண்ணை இந்த வாக்குறுதிகள் ஏதும் செயல் வடிவம் பெறாது. அனைத்தும் ஏமாற்று வித்தை. பொறுத்திருந்து பாருங்கள் என்றார். பின்னர் பிரபாக ரன் உடனடியாக் பொட்டு அம்மானை அழைத்தார். சில இரகசிய உத்தரவுகள் தரப்பட்டன. கண்காணிப்புகளை பலப் படுத்துங்கள். இரவு ரோந்து போகிறவர்களின் எண்ணிக் கையை அதிகப்படுத்துங் கள். பாதுகாப்புப் படை எந்நேரமும் கடலோரம் தயாராக இருக்கட்டும் என்று உத்தரவிட்டார். புலிகள் இயக்கத்தின் பலத்தைக் குறைப்பது இந்திய உளவுத்துறையின் முக்கிய செயற்றிட்டங்களுள் ஒன்று. உளவுத்துறைக்குச் சாதகமான போராளி இயக்கங்களைக் கொண்ட இக்காரியத்தை சாதிக்க அவர்கள் முடிபு செய்திருக்கிறார்கள். இதற்கு மேல் ஒன்றும் இல்லை என்னும் நிலை வந்த போது தான் பிரபாகரன் ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டு ஆயுதம் தூக்க முடிபு செய்தார்.

> **புலிகள் இயக்கத்தின் பலத்தைக் குறைப்பது இந்திய உளவுத்துறையின் முக்கிய செயற்றிட்டங்களுள் ஒன்று. உளவுத்துறைக்குச் சாதகமான போராளி இயக்கங்களைக் கொண்டே இக்காரியத்தைச் சாதிக்க அவர்கள் முடிபு செய்திருக்கிறார்கள்.**

# இந்தியா 215 ஓட்டங்களுக்கு ஆட்டமிழப்பு
# தென்னாபிரிக்காவும் தடுமாற்றம்




இந்தியா - தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டித் தொடரில் மொகாலியில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 108 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பெங்களூருவில் நடந்த 2-வது போட்டி மழையால் சமநிலையில் முடிந்தது.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் போட்டி மராட்டிய மாநிலம் நாக்பூரில் நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கும் என்பதால் இந்திய அணி 3 சுழற்பந்து வீரர்களுடன் களம் இறங்கியது.

இந்திய அணியில் 2 மாற்றம் செய்யப்பட்டிருந்தது. வருண் ஆரோன், ஸ்டூவர்ட் பின்னி ஆகியோருக்கு பதிலாக ரோகித் சர்மா, அமித் மிஸ்ரா இடம் பெற்றனர். தென்னாபிரிக்க அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. அபோட்டுக்கு பதிலாக ஹார்மர் சேர்க்கப்பட்டார். வேகப்பந்து வீரர் ஸ்டெய்ன் உடல் தகுதியுடன் இல்லாததால் அணிக்கு தேர்வு செய்யப்படவில்லை.

இந்திய அணி தலைவர் விராட் கோலி நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று தனது அணி முதலில் "துடுப்பாட்டம் செய்யும் என்று அறிவித்தார். தொடக்க வீரர்களாக முரளி விஜயும், தவானும் களம் இறங்கினார்கள். நிதானமாக ஆடிய இந்திய அணி 50 ஓட்டங்கள் எடுத்திருந்த போது எல்கர் பந்தில் தவான் (12 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார்

இதையடுத்து முரளி விஜயும் புஜாராவும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தார்கள்.

ஆனால், இந்த ஜோடியை மோர்கல் பிரித்தார். 40 ஓட்டங்கள் எடுத்து முரளி விஜய் மோர்கல் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இதனை அடுத்து புஜாராவும் 21 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஹோலி (22), ரகானே(13) ரோகித் சர்மா(2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இந்தியா அணி 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிய நிலையில், ஜடேஜாவும் (34), சகாவும்(32) சிறப்பாக விளையாடி அணியை சரிவில் இருந்து மீட்டனர். அதன் பிறகு களமிறங்கிய அஸ்வின் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் .

இறுதியில் இந்தியா 215 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டமிழ நந்தது.

தென்னாபிரிக்கா தரப்பில் மோர்னே மோர்கல் 3 விக்கெட்டுகளையும் சைமன் ஹார்மர் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இதனை தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய தென்னாபிரிக்காவுக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக இருந்தது. தென்னாபிரிக்கா 4 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் வான் ஷயல் அஸ்வின் பந்துவீச்சில் டக் அவுட ஆனார். இதனை தொடர்ந்து நைட் வாட்ச் மேனாக களமிறங்கிய இம்ரான் தாகிர் 4 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஜடேஜா பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் முதல் நாள் ஆட்டநேரமுடிவில் அந்த அணி, 2 விக்கெட் இழப்பிற்கு 11 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறிவரும் தெனனாபிரிக்க அணிக்கு இன்றைய நாள் ஆட்டம கடும் சவால் நிறைந்ததாக இருக்கும என எதிர்பார்க்கப்படுகிறது. (க)



# அமெரிக்காவில் வெடிகுண்டு வைக்க சதி
# பாகிஸ்தான் வீரருக்கு 40 ஆண்டுகள் சிறை

அமெரிக்காவில் வெடிகுண்டு வைக்க சதி செய்ததாக கூறி பாகிஸ்தான் முன்னாள் துடுப்பாட்ட அணித்தலைவருக்கு 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்துள்ளனர்.

பாகிஸ்தானை சேர்ந்த அபித் நசீர் என்பவரை கடந்த 2009- ஆம் ஆண்டு சந்தேகத்தின் பேரில் பிரித்தானிய பொலிசார் கைது செய்துள்ளனர்.


இவர் பாகிஸ்தானில் பள்ளி மற்றும் இளையோருக்கான துடுப்பாட்ட அணிகளில் அணித்தலைவராக பலமுறை இருந்துள்ளார்.

மான்செஸ்டர் நகரில் வணிக வளாகம் ஒன்றில் நடந்த குண்டு வெடிப்பில் தொடர்பு இருப்பதாக பின்னர் நடைபெற்ற விசாரணையில் தெரிய வந்தது.

அதனையடுத்து 2013 ஆம் ஆண்டு அபித் நசீர் பிரித்தானியாவில் இருந்து அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

அமெரிக்காவில் செயல்பட்டு வரும் பிரித்தானிய வணிக வளாகத்தில் வெடிகுண்டு வைக்க அல்கொய்தா தீவிரவாதிகள் சதி திட்டம் தீட்டியதில், இவருக்கும் தொடர்பு இருப்பதாக குற்றஞ்சாட்டிய அமெரிக்க பொலிஸார் இவரை தேடி வந்துள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்கா கடத்தப்பட்ட அபித் மீது புரூக்ளின்



நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நடைபெற்ற விசாரணையின் முடிவில், இவரை தீவிரவாதிகள் பட்டியலில் சேர்த்த அமெரிக்க நீதிமன்றம் 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. (க)

## இருபது - 20 கிரிக்கெட் பாக் - இங்கிலாந்து இன்று மோதல்




பாகிஸ்தான்- இங்கிலாந்து இடையேயான கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேஸ்ட்சில் நடைபெற்று வருகிறது.

டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் 2-0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை இங்கிலாந்து 3-1 என்ற கணக்கிலும் கைப்பற்றியுள்ளன.

மூன்று 20 ஓவர் தொடரில் முதல் ஆடடம் டுபாயில் இன்று நடைபெறுகின்றது. அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணி 20 ஓவர் தொடரை கைப்பற்றும் ஆர் வத்தில் உள்ளது. இதேபோல மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணி 20 ஓவர் தொடரையும் கைப்பற்றி விட வேண்டும் என்ற வேகத்தில் உள்ளது.

இரு அணிகளும் மோதிய 20 போட்டியில் இங்கிலாந்து 7 ஆட்டத்திலும், பாகிஸ்தான் 3 ஆட்டத்திலும் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

# சதம் விளாசிய அர்ஜூன் டெண்டுல்கர்



மும்பையில் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான பேயாட் கிண்ணம் துடுப்பாட்டத்தில் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் சதம் விளாசியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற இந்த போட்டியில கவாஸ்கர் லெவினுக்காக விளையாடிய அர்ஜுன், ரோகித் சர்மா லெவனுக்கு எதிராக 106 ஓட்டங்கள் விளாசியுள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த அணியின முதன்மை பயிற்சியாளர் விகாஸ், அர்ஜுன் எந்தவித அழுத்தமும் இன்றி நேர்த்தியாக விளையாடியதாக குறிப்பிட்டுள்ளார்.

தொடக்க ஆட்டக்காரர்கள் போதிய ஓட்டங்கள் எடுக்க தவறவே அணியை தூக்கி நிறுத்தும் பணியை சாமர்த்தியமாக செய்துள்ளதாக தெரிவித்த விகாஸ், ஒருபக்கம் விக்கெட்டுகள் சரிந்த நிலையிலும் அர்ஜுன் நிதானத்துடன் ஆடி 106 ஓட்டங்கள் சேர்த்து அணிக்கு நம்பிக்கை அளித்துள்ளார்.

இடதுகை துடுப்பாட்ட வீரரான அரஜுன இடது கை வேகப் பந்து வீரராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வாடகைக்கு

யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554A, 554B எனும் இலக்கமுடைய கடைகள் வாடகைக்கு விடப்படும்.

(2563) விபரங்களுக்கு நேரில் வரவும்

தொடர்புகளுக்கு :- நா.தயாளன்
இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வைத்தியம்

உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல் , தலைமுடி உதிர்தல்,பொடுகு, ஆண்மைக் குறைவு, குழந்தையின்மை, பாரிசவாதம். முன் பதிவு அவசியம்.

தொடர்பு- Shan's Health Care
255, K.K.S.Road,Kokuvil,
Jaffna.077 035 7307 (2519)

## நோய்வருமுன் காப்பதும்/ ஆரம்ப நிலையில் சிகிச்சை முறைகளும்

தற்பொழுது பல விதமான தொற்றும் தொற்றாத்தன்மையுடைய நோய்கள் எமது மக்களிடையே பரவி வருகின்றது. சாதாரண மக்களும் சுகாதாரத்துடன் சம்பந்தப்பட்டவர்களும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்னும் கையேடு டாக்டர் தெய்வேந்திரன் தம்பதிகளால் ஆக்கப்பட்டுள்ளது. இக்கையேட்டை இலவசமாக பெறுவதற்கு எம்முடன் நேரடியாகவோ, அல்லது தொலைபேசி (021 222 2574) மூலமாகவோ வார நாட்களில் தொடர்பு கொள்ளலாம்.

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர்
புனர்வாழ்வு நிறுவனம்.

(சி-2795)

# அதிரடிச் சலுகை

## வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

## வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்விணைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வட பிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக்கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலைபேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு 05.12.2015 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு :- நேர்முகத் தேர்வு அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும்.

பிரதம ஆசிரியர் , வலம்புரி.

# சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பதிவு இல-J/1594 **பதவி வெற்றிடம்** பதிவுத் திகதி-11.03.1972

**01.பதவி - இலிகிதர்(01)**

| | |
|---|---|
| குறியீட்டு இல- | 302/13(13/2015 இன் படி) |
| சம்பள அளவுத்திட்டம்- | 14230-120X10-130X10-16730 |
| வயதெல்லை- | 18-45 வரை |
| பால்- | ஆண்/பெண் |

தகைமைகள்-

அ.கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பள திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பள திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ.க.பொ.த (சா/த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியும் கூட்டுறவு சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**02.பதவி- இலிகிதர்(01)**

| | |
|---|---|
| குறியீட்டு இல- | 302/14(13/2015 இன் படி) |
| சம்பள அளவுத்திட்டம்- | 13875-115X10-125X10-16275 |
| வயதெல்லை- | 18-45 வரை |
| பால்- | ஆண்/பெண் |

தகைமைகள்-

அ.கூட்டுறவு பணியாளர் 15 ஆவது சம்பள திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 16 ஆவது சம்பள திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ.க.பொ.த (சா/த) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு

1.கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03.கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்ட பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. முழுமையாக பூரணப்படுத்தாததும் தகைமையற்றதும் இணைப்புகளற்றதும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னரும் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 10.12.2015**

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை சங்கத் தலைமை காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைச் சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் இலிகிதர் (302/13) பதவிக்கான விண்ணப்பம் அல்லது இலிகிதர் (302/14) பதவிக்கான விண்ணப்பம் எனக்குறிப்பிட்டு தலைவர், சாவகச்சேரி பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், டச்சு வீதி, சாவகச்சேரி எனும் முகவரிக்கு 10.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**ப.தெ.வ.அபி.கூட்.சங்கம்
டச்சு வீதி, சாவகச்சேரி
24.11.2015** (சி-2794)

**பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
கூட்டுறவுச் சேவையிலுள்ள
திரு.சி.பரராசசிங்கம், தலைவர்.**

# ராசி பலன்

26.11.2015
(கார்த்திகை, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05மணிக்கு
பிரதமை பின்னிரவு 3.14 மணிவரை
கார்த்திகை காலை 6.31 மணிவரை
இராகுகாலம் 1.42-3.12மணிவரை
சுபநேரம் 7.42-9.12மணிவரை
விஷ்ணுவாலய தீபம், விநாயகர் விரதாரம்பம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>சுவாதி<br>மேல்நோக்குநாள் | | |
| | | | குரு |
| | சூரி,<br>புத,<br>சனி | | ராகு,<br>செவ்<br>சுக் |

**மேடம்**: நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், வீட்டை அழகாக்குவதில் அக்கறை காட்டுவீர்கள், காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**இடபம்**: குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள்,நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்**: விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் செயற்படுவது நல்லது, எங்காவது புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் செய்யலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்**: வருமானம் பெருகி வளம் காணும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர் கள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, எதிர்பாராத சலுகைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்**: முன்னேற்றப்பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களை பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி**: பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் மாறும், ஆன்றோர் சந்திப்புண்டு, எதிர்பாராத பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**துலாம்**: பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், கவனக்குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**விருச்சிகம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்சேர்க்கைக்கு வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**தனுசு**: இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்**: உள்ளம் மகிழும் விதத்தில் உதி வருமானங்கள் வந்து சேரலாம் மறைமுகப் போட்டிகள் மாறும் கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்**: மைத்துனர். வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம் பெறலாம், தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், புண்ணிய காரியங்க ளுக்காக செலவுகள் செய்து மகிழ்வீர்கள்.

**மீனம்**: பணப்புழக்கம் சரளமாக இருந்தாலும் திடீர் விரயங்கள் ஏற்படலாம், உடன்பிறப்புக்கள் மூலம் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

# யாழில் டெங்கு நோய் தீவிரம் 1054பேர் இனங்காணப்பட்டனர்

## 2015 நவம்பர் 24 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை ஆயிரத்து 54 பேர் டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பதாக இனங் காணப்பட்டுள்ளனர் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் டெங்கு நோயின் தொற்று தொடர்ச்சியாக இனம் காணப் பட்டு வருகின்றது. மழை காலத்தில் பரவலாக இந்த நோயின் தாக்கம் அதிகரித்து காணப் படுகின்றது.

அந்த வகையில் கடந்த ஜனவரி மாதம் 462 பேர் டெங்கு நோயின் தாக்கம் இருப் பதாக இனங் காணப்பட்டு 380 பேர் டெங்கு நோய் தொற்று இருப்பதாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளனர்.

அதேபோன்று பெப்ரவரி மாதம் 218 பேர் இனங்காணப் பட்டு 180 பேர் உறுதிப்படுத்தப் பட்டும் மார்ச் மாதம் 126 பேர் இனம்காணப்பட்டும் 79 பேர் உறுதிப்படுத்தப்பட்டும் டெங்கு நோய் தாக்கம் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அதில் இந்த வருடம் ஆயி ரத்து 54 பேர் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதாவது கடந்த ஜனவரி மாதம் 380 பேரும் பெப்ரவரி மாதம் 180 பேரும் மார்ச் மாதம் 79 பேரும் ஏப்ரல் மாதம் 51பேரும் மே மாதம் 53 பேரும் ஜூன் மாதம் 52பேரும் ஜூலை மாதம் 49 பேரும் ஓகஸ்ட் மாதம் 40 பேரும் செப்டெம்பர் மாதம் 31 பேரும் ஒக்டோபர் மாதம் 48 பேரும் நவம்பர் மாதம் 91 பேரும் டெங்கு நோய்த் தொற்று இருப்பதாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளனர். அத்து டன் இந்த வருடத்தில் டெங்கு நோயின் தாக்கத்தில் 2 உயிரி ழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

மேலும் 25 வயதுக்கு உட் பட்டவர்களுக்கு இந்த நோய்த் தொற்று அதிகமாக காணப் படுகின்றது. இவர்களில் பாட சாலை மாணவர்கள், வேலை க்கு செல்வோர் பலர் உள்ள டங்குகின்றனர்.

இவர்கள் அதிகமாக நகர்ப் புறங்களில் வசிப்பவர்களாக வும் நகர்ப்பகுதிகளுக்கு தமது தேவைகள் நிமிர்த்தம் வருகை தருபவர்களாகவும் காணப் படுகின்றனர். இது தொற்று நோயாக இருப்பதால் வருமுன் காப்பதே சிறந்தவழியாகும். இந்த நோயின் தொற்றை எமது பிர தேசத்தில் கட்டுப்படுத்துவதற்கு அனைத்து துறைசார்ந்தவர் களினதும் ஒத்துழைப்பு மிக அவசியமாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## வடக்கில் 32 வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர்கள் இல்லை

### சுகாதார அமைச்சர் ஆதங்கம்



வடமாகாணத்தில் சுமார் 32 வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர்கள் இல்லை எனவும் இங்குவாழும் மக்கள் வைத்திய தேவைகளுக்கு மிக வும் கஷ்டப்படுவதாகவும் நீண்ட தூரம் பயணம் செய்தே வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கன் ஆதங்கப்பட் டுள்ளார்.

யாழ்.குடாநாட்டு சுகாதா ரத்தேவைகள் சம்பந்தமாக வடமாகாண சுகாதார அமைச் சருடன் யாழ்.பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் பிரிவின் வைத்திய பிரதிநிதிகள் கடந்த 22ஆம் திகதி சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரி வுக்குட்பட்ட வைத்தியசாலை கள் மற்றும் பொதுச் சுகாதார சேவைகளில் நிலவும் சகல தரத்திற்குமான குறிப்பாக வைத்திய அதிகாரிகளுக்கான ஆளணித்தட்டுப்பாடுகள், உட்கட்டமைப்பு மற்றும் உப கரணத்தேவைகள் வைத்தி யர்களுக்கான இடமாற்றங்கள், வைத்தியர்களுக்கு நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் இருக்கும் வருடாந்த சம்பள ஏற்றம் வைத்தியர்களுக்கான விடுதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற விடய ங்கள் சம்பந்தமாகக் கலந்து ரையாடப்பட்டது.

வைத்தியர்களுக்கான வரு டாந்தசம்பளஏற்றநிலுவையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் மத்திய சுகா தார அமைச்சருடன் கலந்து ரையாடி கஷ்ட பிரதேச வைத் தியசாலைகளை அடையாளப் படுத்தி அவற்றிற்கு பிரத்தி யேக அடிப்படையில் வைத்தி யர்கள் நியமிப்பதாகவும் அவர் களுக்குரிய இடமாற்றங்களை ஒழுங்கு செய்வதாகவும் அமை ச்சர் உறுதியளித்தார்.

அத்துடன் வடமாகாணத் தில் சுமார் 32 வைத்தியசா லைகளில் நிரந்தர வைத்தி யர்கள் இல்லை எனவும் இங்கு வாழும் மக்கள் வைத்திய தேவை களுக்கு மிகவும் கஷ்டப்படுவ தாகவும் நீண்டதூரம் பயணம் செய்தே தமது வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய் வதாகவும் ஆதலால் அவர்க ளுக்கு மருத்துவ முகாம் களை நடத்தி சேவை வழங்க வேண்டும் என்றும் அமைச் சர் கேட்டுக்கொண்டார். அதற் கமைய எதிர்காலத்தில் சுழற்சி முறையில் வைத்தியர்கள் பங்கு பற்றி மருத்துவ முகாம் களை நடத்துவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது.

அத்துடன் மாதம் ஒரு தடவை அமைச்சரை சந்தித்து பிராந்தியத்தில் நிலவும் சுகா தாரப் பிரச்சினைகள் சம்பந்த மாக பிரதிநிதிகள் கலந்துரை யாடுவது எனவும் முடிவு எடுக் கப்பட்டது. (இ

## ஆங்கில பாட வினாத்தாள் மதிப்பீடு இன்று

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தரம் 9 மாணவர்களுக்கு நடத்தப் பட்ட ஆங்கில பாடப் பரீட்சை யின் யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டு பணி கள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது.

. எனவே குறிப்பிட்ட ஆங் கில பாட ஆசிரியர்களை தவ றாறு கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப் பாளர் அறிவித்துள்ளார். (இ-10)




## நிர்வாக சபைக்கூட்டம் ஞாயிறன்று

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மற்றும் காந்தி நிலைய (சிறுவர் இல்லம்) நிர் வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியள வில் யாழ்.மாவட்ட அலுவலகத் தில் இடம்பெறவுள்ளது. (இ

## வட்டார மாநாடு

"அவர்களை போல் விசு வாசத்தை காட்டுங்கள்" என்ற பொருளில் யெகோவாவின் சாட்சிகளின் வட்டார மாநாடு இம் மாதம் 29 ஆம் திகதி (ஞாயிற் றுக்கிழமை)காலை 9.40 இற்கு ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிவரை யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்தில் நடை பெறும். (இ

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப் பாண மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மைய மாகக் கொண்டு முழு நேர மற் றும் பகுதி நேர தொழிற் பயி ற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது. இக்கற்கை நெறிக் கான விண்ணப்பங்கள் கோரப் படுவதோடு இவற்றுக் கான பதிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சண்டிலிப்பாய், சுன்னாகம், பருத்தித்துறை, கந்தரோடை, கோப்பாய், தீவகம் ஆகிய தொழிற்பயி ற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி கற்கை நெறிகள் நடை பெற்று வருகின்றது.

இக் கற்கை நெறிகளா வன கணனி வன்பொருள் திருத்துனர், ஆடைவடி வமைப் பாளர், அழகுக் கலை வல்லு நர், காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) இருசக்கர மற்றும் ஆட்டோ திருத்துனர் ,வீட்டு மின்னிணைப்பாளர், தொழிற் சாலை மின்னிணைப்பாளர், மர வேலை தொழில் நுட்பவி யலாளர் மற்றும் கட்டட நிர் மான உதவியாளர் ஆகும்.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றித முக்கான பயிற்சி நெறிகளாகும்.

இக் கற்கை நெறிகள் கற்க விரும்புவர்கள் தங்கள் பதிவு களை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரி க்கு எதிர்வரும் 03.12.2015 ஆம் திகதிக்கு முன்னர் மேற் கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறோம். பதிவுகள் மட்டுப்படு தப்பட்டவை என இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை யின்யாழ்.மாவட்ட உதவிப்பணிப் பாளர் அறிவித்துள்ளார். (இ



யாழ்ப்பாணம்,கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி வைத்தார். நிகழ்வில் சின்மயாமிஷனைச் சேர்ந்த சுவாமி ஜாக்ரத சைதன்யாவும் கலந்து கொண்டார்.வடமாகாண சபை உறுப்பினரின் 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பாடசாலைத்தேவைக்கான 2 இரும்பு அலுமாரிகளும் வழங்கி வைக்கப்பட்டன.



தமிழர்களின் தீபத்திருநாளான கார்த்திகை விளக்கீடு நேற்றையதினம் கொண்டாடப்பட்ட நிலையில் அதற்கான சுட்டி வியாபாரம் சூடுபிடித்ததனை காண முடிந்தது. திருநெல்வேலி பொதுச் சந்தை, யாழ்.நவீன சந்தை ஆகிய இடங்களிலும் பிற இடங்களிலும் இதன் விற்பனை அமோகமாக நடைபெற்றிருந்தது. ஒரு சுட்டி 5 ரூபாய் வீதம் விற்கப்பட்டதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். சுட்டி வாங்குவதில் வழமையை விட மக்கள் இம்முறை அதிக ஆர்வம் காட்டியதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# தரையிறங்கிய மர்மப்பொருள்

(கொழும்பு)

அம்பாறையில் அடையாளம் தெரியாத மர்மப்பொருள் ஒன்று தரையிறங்கியது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை -கோணகல பிரதேசத்தில் உள்ள வயலில், கடந்த 18ஆம் திகதி இரவு அடையாளம் தெரியாத பறக்கும் மர்மப்பொருள் ஒன்று தரையிறங்கியதாக கூறப்படுகிறது.

மர்மப்பொருள் தரையிறங்கியதாக கூறப்படும் வயலில், விசித்திரமான அடையாளங்களை கண்டதாக தகவல்கள் வெளியானதையடுத்து, விசாரணைக் குழுவொன்று அங்கு சென்றுள்ளது. (இ-7-10)

# சில அரசியல்வாதிகளுக்கு பட்ஜெட் புரியவில்லையாம்

## நிதி அமைச்சர்

வங்குரோத்து அடைந்துள்ள அரசியல்வாதிகளுக்கு இந்த வரவு செலவுத் திட்டம் பிரச்சினையாக அமைந்துள்ளது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பில் சாதாரண பொதுமக்களுக்கு எவ்வித பிணக்குகளும் கிடையாது.

வரவு செலவுத் திட்ட யோசனை நிறைவேற்றப்படும் முன்னதாகவே நாம் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்போம்.

மண்ணெண்ணெய், சமையல எரிவாயு உள்ளிட்ட பொருட்களின் விலைகள் குறைக்கப்படும்.

சில அரசியல்வாதிகளுக்கு இந்த வரவு செலவுத் திட்டம் புரியவில்லையாம்.

அவர்களுக்கு புரியாத போதிலும் அண்மைய நாட்களில் ஏற்பட்ட மாற்றங்கள் நன்மைகளை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக எவ்வாறான நன்மை கிடைத்து வருகின்றது என்பது மக்களுக்கு தெரியும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# நீதிமன்றங்களில் ஆஜராகமாட்டோம்

## பொதுபல சேனா அரசுக்கு சவால்

(கொழும்பு)

**தமக்கு எதிராகவுள்ள வழக்குகளுக்காக எதிர்வரும் காலங்களில் நீதிமன்றங்களில் ஆஜராகப்போவதில்லை எனவும் முடியுமானால் நல்லாட்சி அரசு எம்மை நீதிமன்றுக்கு இழுத்துச் செல்லட்டும் எனவும் அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

இதேவேளை தெஹிவளை பிரதேசத்திலிருந்து, தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தும் உடைகள், சினைப்பர் ஆகியவற்றை கைப்பற்றிய குற்றப்புலனாய்வு பிரிவினர், அதனுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் முஸ்லிம் இளைஞர்கள் இருவரையும் கைது செய்திருந்தனர்.

எனினும் இது தொடர்பில், எந்தவொரு தகவலையும் அரசாங்கம் வெளியிடவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொது பல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெஹிவளை, கௌடான பிரதேசத்தில், முஸ்லிம் குழுவொன்று, பெரும்பான்மை இனத்தவரின் வீடொன்றை வாடகைக்குப் பெற்று அங்கு வசித்து வந்துள்ளது..

இந்நிலையில், குற்றப்புலனாய்வு பிரிவினர் அப்பகுதியில் திடீர் சோதனையை மேற்கொண்டிருந்த போது, அங்கு தற்கொலை குண்டுதாரிகள் பயன்படுத்தும் உடைகள் மற்றும் சினைப்பர் ஆகியவற்றை மீட்டிருந்தனர்.

மேலும், முஸ்லிம் இளைஞர்கள் இருவரையும் கைது செய்திருந்தனர். குறித்த இருவருக்கும், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புக்கும் தொடர்பு இருக்கலாம். ஆனால், இது குறித்த எந்தவித தகவலையும் அரசாங்கம் ஊடகங்களுக்கு அறிவிக்கவில்லை என்று அவர் மேலும் குற்றஞ்சாட்டினார். (இ-7-10)

# பிள்ளையானின் கைது அரசியல் பழிவாங்கல்

## காமினி லொக்குகே கண்டுபிடிப்பு



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான பிள்ளையான் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) இரகசியப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியமைக்காகவே கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

இது அரசியல் பழிவாங்கல் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மகிந்த அணி உறுப்பினர் காமினி லொக்குகே நேற்று முன்தினம் சபையில் அரசாங்கத்தின் மீது குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற 2016 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காமினி லொக்குகே எம்.பி இங்கு மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அவர் அவ்வாறு தகவல் வழங்கியமைக்காகவே தற்போது கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். பிள்ளையான் மாத்திர மல்ல கருணாவும் கூட இவ்வாறு தகவல்களை வழங்கியுள்ளார்.

பிள்ளையானை கைது செய்து விசாரணை நடத்தும் அரசாங்கம் முன்னர் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும்.

காமினி திசாநாயக்க, லக்ஸ்மன் கதிர்காமர், தியாகராஜா மகேஸ்வரன், லலித் அத்துலத் முதலி, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, நடராஜா ரவிராஜ் உள்ளிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் படுகொலைகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மேலும் கருணா, கே.பி குறித்து ஆளும் கட்சியினர் பேசுகின்றனர். சுமார் ஒரு வருடகாலமாக நீங்கள் ஆட்சியில் உள்ளீர்கள். அப்படியானால் நீங்கள் அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று கேள்வி எழுப்புகிறேன்.

அத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டமானது நிவாரணங்கள் இல்லாத தோல்வியான திட்டமே என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 RC
உயரம்: 154 cm
தகைமை/தொழில்: A/L / அரச வங்கியாளர்
தொ.இ: B/5244

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 21 செவ்.4 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L லண்டன் Not PR
தொ.இ: B/5248

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 33
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBA, MBA லண்டன் PR
தொ.இ: B/5250

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 29 சூரி,செவ். 9 இல்
உயரம்: 172 cm
தகைமை/தொழில்:BSc/ அவுஸ்திரேலியா Not PR
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/5251

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 55 செவ் 1 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L கனடா PR
தொ.இ: G/5247

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 23
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: G/5249

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 22 செவ். 8 இல்.
உயரம்: 154 cm
தகைமை/தொழில்:BA/ ஆசிரியர்
தொ.இ: G/5261

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 56 செவ்.12 இல்.
உயரம்: 160 cm
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5263

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# வவுனியா நகர சபை மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்







(குருமன்காடு)

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றினால் மைதானம் பயன்படுத்த முடியாதளவிற்கு சேறும் சகதியுமாக மாறிவிட்டது. இச் செயற்பாட்டை கண்டித்து விளையாட்டு வீரர்கள் ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் நகரசபை மைதானத்தையே நாம் விளையாட்டு பயிற்சிகளில் ஈடுபடும் போது பயன்படுத்தி வருகின்றோம். இதனால் களியாட்ட மற்றும் மைதானத்திற்கு சேதம் விளைவிக்கும் நிகழ்வுகளுக்கு குறித்த மைதானத்தை வழங்கக் கூடாது என வவுனியா மாவட்ட விளையாட்டுக் கழகங்கள் ஊடாக நகரசபை செயலாளரிடம் கோரிக்கையும் விடுத்திருந்தோம்.

ஆனால், கடந்த 15 ஆம் திகதியில் இருந்து வவுனியா நகரசபை மைதானத்தை இராணுவ கண்காட்சிக்கு வழங்கியமையால் வாகனங்கள் உட்சென்றும், கண்காட்சிக்கான பந்தல்கள் அமைக்கப்பட்டும் விளையாட்டு மைதானம் பயன்படுத்த முடியாதளவுக்கு சேறும் சகதியுமாக மாறிவிட்டது. கடந்த 10 நாட்களுக்கு மேலாக நாம் இந்த மைதானத்தை பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளோம். இதற்கு நகரசபை உரிய பதில் தரவேண்டும்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விளையாட்டு வீரர்கள், விளையாட்டுமைதானம்வயல்நிலமா, நகரசபையின் செயற்பாடு மக்களின் சேவையா? பணத்தின் தேவையா, விளையாட்டு சுவடுகளை சுரண்டாதே, நகரசபையே விளையாட்டு வீரர்களுக்கு சவக்குழி வெட்டாதே, வீரர்களை உருவாக்கும் மைதானத்தை களியாட்ட விடுதியாக்காதே, நகரசபை செயலாளரே பதில் கூறு எழுதப்பட்ட பல சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது மின்சார சபையின் வாகனம் ஒன்று மைதானத்திற்குள் பிரவேசித்து மண்ணில் புதைந்து கொண்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள இதனை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உடனடியாக தமது மைதானத்தை பாவனைக்கேற்ற மைதானமாக மாற்றித் தர வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் மைதானத்திற்கு சேதம் விளைவிக்கும் எந்த நிகழ்வுகளுக்கும் மைதானத்தை வழங்கக கூடாது எனவும், கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நகரசபை ஆகியவற்றுக்கு மகஜர்களையும் கையளித்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிவமோகன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர்களான எம்.பி. நடராஜா, ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, இ.இந்திரராசா, முன்னாள் நகரசபை உப தலைவர் சந்திரகுலசிங்கம், புளொட் அமைப்பின் முக்கியஸ்தர் நோர்வே ராஜன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது இராணுவத்தினர் தமது கண்காட்சி கொட்டகைகளை அகற்றிக் கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-281-250)

## தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் இயந்திர பாவனை மூலம் நாற்று நடுகை



தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ் நெற்செய்கையில் உற்பத்தி செலவை குறைத்து வருமானத்தை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்களில் ஒன்றான இயந்திர பாவனை மூலமான நாற்று நடுகை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

வவுனியாமாவட்டவிவசாயிகளிடையே இதனை ஊக்குவிக்குமுகமாக நெல் நாற்று நடுகை இயந்திரம் மூலம் நெல் நடுகை இயந்திர முன்மாதிரி துண்ட நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரின் தலைமையில் வவுனியா அரசினர் விதை உற்பத்திப் பண்ணையில் நடைபெற்றது.

இதன் செயற்றிட்டங்களாக பரசூட் முறையிலான நாற்று நடுகை,இயந்திரநடுகைக்கான நாற்றுமேடை தயாரிப்பு, நாற்று மேடை பராமரிப்பு, இயந்திர மூலமான களைக் கட்டுப்பாடு என்பன விவசாயிகளுக்கு செயல்முறை மூலம் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய ஆராய்ச்சி நிலைய மேலதிகப் பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரி, சிறப்பு விருந்தினராக பரந்தன் நெல் ஆராய்ச்சி நிலைய உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். சிவநேசன்,வவுனியா பிரதி நீர்ப்பாசனப்பணிப்பாளர் எஸ். நவநேசன்,வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) சத்திய மூர்த்தி, வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி பீ.லலி தகுமாரி, பிராந்திய ஒருங்கிணைப்பாளர்( உணவு விவசாய ஸ்தாபனம்) து.ஆ.யு.சுதர்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் பெருமளவிலான விவசாய பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன் தொடர் நடவடிக்கையாக நெல் நாற்று நடுகை இயந்திரம் மூலம் நெல் நடுகை அனைத்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் நடைபெற்று வருகின்றது. (2)

க.பொ.த.(சா/த) பரீட்சை

## அனுமதி அட்டை திருத்தங்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுங்கள்

### அதிபர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவுறுத்து

(மல்லாவி)

நடப்பாண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டையில் ஏற்படும் திருத்தங்கள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கைமேற்கொள்ளுமாறு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம்.என். ஜெ.புஸ்பகுமார பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவிடயங்கள் வருமாறு,

பாடசாலைக்கு அனுமதி அட்டை கிடைத்தவுடன் பரீட்சார்த்திகளுக்கு பகிர்ந்தளிக்கவும், அவ்வாறு வழங்கியமை பற்றி நாட்குறிப்பேட்டில் குறிப்பொன்றை எழுதவும், அனுமதி அட்டை கிடைத்தவுடன் மாணவர்கள் விண்ணப்பித்த பாடங்கள், மொழி என்பன தங்கள் பாடசாலை பிரதியில் குறிப்பிட்டவாறு சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை பரீட்சித்து பார்க்கவும், விசேடமாக கீழ் குறிப்பிடப்படும் பாடங்கள் சரியாக உள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

சமய பாடங்கள், முதலாம் பாட தொகுதிக்குரிய பாடங்கள், இரண்டாம் பாடத் தொகுதிக்குரிய பாடங்கள், மூன்றாம் பாட தொகுதிக்குரிய பாடங்கள் ஒரு தொகுதி பாடத் தொகுதியில் இருந்து ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும்.

பாடமாற்றம் செய்ய வேண்டி ஏற்படும் மாணவர்களின் விபரங்களை தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு அனுமதி அட்டையின் பிரதியுடன் தங்கள் பாடசாலையின் கோட்டக் கல்விப்பணிப்பாளரிடம் கையளிக்கவும்.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் தனது கோட்டத்திற்கான சகல பாடசாலைகளினதும் குறித்த விண்ணப்பப் படிவங்களை பரீட்சைத் திணைக்களத்திற்கு எடுத்து சென்று திருத்தம் செய்து தங்களுக்கு மீண்டும் கையளிப்பார்.

இதற்காக தங்கள் பாடசாலை மாணவர்களையோ, பெற்றோர்களையோ அல்லது ஆசிரியர்களையோ பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவேண்டாம்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் பாடமாற்றம் தொடர்பான வேண்டுகோள்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதை அவர் அறிவித்துள்ளார். (2-15)




## உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு மன்னாரில் விழிப்புணர்வு ஊர்வலம்



(பனிக்கன்குளம்)

சர்வதேச நீரிழிவு தினம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது. நேற்று முன் தினம் செவ் வாய்க்கிழமை காலை 8 மணியளவில இடம் பெற்ற இந்நிகழ்வின் போது விழிப்புணர்வு ஊர்வலம ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊர்வலம் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில்இருந்து ஆரம்பமாகி மன்னார் வைத்திய சாலை வீதியூடாக சென்று பஸார் பகுதியைச் சென்றடைந்தது.

இதன்போது வைத்திய அதிகாரி அன்ரன் சிசில், மன்னார் பொது வைத்திய சாலையின் நிர்வாக அலுவலர் எம்.சஜானி, முசலி வைத்திய அதிகாரி எம்.ஒஸ்மன் சாள்ஸ், பொது சுகாதார வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள், தொண்டர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது நீரிழிவு நோயிலிருந்து மக்கள் எவ்வாறு தம்மை பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர். அத்தோடு இது தொடர்பிலான துண்டுப் பிரசுரங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (2-281)

# கடன் அடிப்படையில் மின்சார இணைப்பு

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் மின்சார இணைப்புக்கள் இதுவரை கிடைக்கப் பெறாத வறுமைக்கோட்டின்கீழ்வாழும் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இருள் அகன்று முழு நாடும் ஒளி மயம் எனும் மின் செயல் திட்டத்தின் கீழ் கடன் அடிப்படையில்மின்சாரஇணைப்புக்களை வழங்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் பிரதேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி திட்டத்தின் கீழ் மின்சார வசதியற்ற குடும்பங்களுக்கு 40 ஆயிரம் ரூபா கடன் அடிப்படையில் மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வீட்டு உள்ளக மின் இணைப்பு வேலைகளுக்கு 17 ஆயிரத்து 500 ரூபாவும் மின்சார சபையின் மின் இணைப்புக்காக 22 ஆயிரத்து 500 ரூபாவும் கடனாக வழங்கப்படும்.

இக் கடன் தொகை 7 வீத வட்டியில் 72 மாத தவணை அடிப்படையில்மின்பாவனைப் பட்டியல்களின் ஊடாக பகுதி பகுதியாக அறவிடப்படும்.

எனவே மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ள விரும்பும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் தமது பகுதி கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர். சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)




# கைப்பையில் வைக்கப்பட்ட பணம், நகைகள் திருட்டு

## வவுனியாவில் சம்பவம்

(குருமன்காடு)


வீட்டின் பின் ஜன்னல் வழியாக உள் நுழைந்த திருடர்கள் அறையில் இருந்த கைப்பையை எடுத்து அதனுள் வைக்கப்பட்ட 6 ஆயிரம் ரூபா பணத்தையும் சுமாா ஒரு இலட்சத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியானநகைகளையும் திருடிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,வவுனியாதோணிக்கல் லக்ஸபானா வீதியிலுள்ள வீடு ஒன்றில் நேற்று முன் தினமிரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வவு னியா பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

குறித்த வீட்டில் வசிப்பவர்கள் நேற்று முன்தினமிரவு ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வேளை பின் ஜன்னல் வழியாக வீட்டின் அறையினுள் நுழைந்து அங்கு வைககப்பட்டிருந்த கைப்பையை எடுத்து அதிலிருந்த 6 ஆயிரம் ரூபா பணத்தையும் சுமார் ஒரு இலட்சத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் திருடர்கள் திருடிச் சென்றுள்ளதாக உரிமையாளரினால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பானவிசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை வவுனியாவில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)



வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் மரநடுகை மாதத்தையொட்டி மர நடுகைத் திட்டம், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் ஓர் அங்கமாக வரையறுக்கப்பட்ட இலங்கை மகளிர் அபிவிருத்தி சேவை கூட்டுறவுச் சங்க கிளிநொச்சி மாவட்ட இணையத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கூழாவடி பொதுநோக்கு மண்டபத்தில் மரநடுகை விழா நடைபெற்றபோது... (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

# கழிவு வாய்க்கால் சீராக அமைக்கப்படாமையால் மழைக்காலங்களில் வீதியில் பயணிப்போர் அவதி

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதிக்கு மேற்கு பக்கமாகவுள்ள பல கிராமங்களை ஊடறுத்துச் செல்லும் கழிவு வாய்க்கால் உரிய முறையில் சீர் செய்யப்படாமல் பல ஆண்டு காலமாகவே காணப்படுகிறது.

இக்கழிவு வாய்க்காலின் ஒரு பகுதியான இரத்தினம் பண்ணை கிராமத்தின் அருகேயுள்ள நீர் வழிந்தோடும் பகுதி பல மில்லியன் ரூபா செலவில் செப்பனிடப்பட்ட போதிலும் சிறந்த முறையில் ஒழுங்கமைப்பு செய்யப்படவில்லை.

அத்துடன் கனகபுரம் பகுதிக்கு செல்லும் பாலம் உடைந்துள்ள நிலையில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை உருத்திரபுரம் மயானம், வைத்திய சாலை, ப.நோ.கூட்டுறவுச் சங்கம் ஆகியன அமைந்துள்ள வீதியை ஊடறுத்தே கழிவு வாய்க்காலின் வெள்ள நீர் அணைக்கட்டை மேவி பாய்ந்ததால் உருத்திரபுரம் மயான வீதியின் பிரதான சந்திகளை உள்ளடக்கிய இடத்தில் 5 அடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டு மழைநீர் தேங்கி காணப்படுகின்றது.

இதனூடாக பயணிப்போர் பள்ளத்தில் வீழ்ந்து பல்வேறு இடர்பாடுகளைசந்திக்கின்றனர்.

கனகபுரம், உருத்திரபுரம் கிழக்கு, மேற்கு, வடக்கு, சிவ நகர், நீவில் ,புதுமுறிப்பு குளத்தின் ஒரு பகுதி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது உறவினர்களின் தகனக்கிரியைகளை மேற்கொள்வதற்கு இப் பாதை வழியாகவே சடலங்களை எடுத்துச் செல்கின்றனர்.

அத்துடன் உருத்திரபுரம் வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி எந்த வீதியினாலும் செல்ல முடியாத அவல நிலைக்கு உள்ளாகியுள்ளது.

இக்கழிவு வாய்க்காலின் உருத்திரபுரம் மேற்கு கிராமத்தின் நடுப்பகுதியில் ஆறாக நீர் ஓடிக் கொண்டு இருப்பதால் பல குடியிருப்புக்கள் மழைக்காலங்களில் நீரில் மூழ்குவதுடன் உட்புற சிறு வீதிகள் யாவும் சேதமடைந்துதுள்ளன.

இவ்வாய்க்காலின் இறுதிப் பகுதியான சிவநகர் மதகு உடைக்கப்பட்டதால் சிவன் சோலை மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் 300 இற்கு மேற்பட்ட விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்கு செல்ல முடியாத அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் உயர்மட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதகாரிகள், வடக்கு மாகாண சபையினர் ஆகியோர் நடவடிக்கை எடுத்து பல ஆண்டு காலமாக நிலவி வருகின்ற குறைபாட்டை நிவர்த்தி செய்து தர வேண்டும் என பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)

# கிராமத்தின் வளர்ச்சி பணிகளுக்கு உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும்

## தேவிபுர கிராமமக்கள் குறைகேள் சந்திப்பில் ரவிகரன் உறுதிமொழி

முல்லை.தேவிபுரத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. வடமாகாண சபை உறுப்பினர்துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்பட்ட இச்சந்திப்பில் கலந்துகொண்ட மக்கள் பல்வேறு குறைகளையும் கோரிக்கைகளையும் முன் வைத்தனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 20 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் முல்லை. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள தேவிபுரம் "அ" முன்பள்ளி வளாகத்தில் மக்கள் சந்திப்பொன்று முன்னெடுக்கப்பட்டது.

தேவிபுரம் கிராம மக்களின் கோரிக்கைக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் தேவிபுரம் "அ" மற்றும் வள்ளிபுனம் பகுதிகளை சேர்ந்த பலர் கலந்து கொண்டனர். மாணவர்கள் சிலரும் கலந்து தமக்கான கற்றல் உபகரணங்கள் தொடர்பிலும் தொலைதூரத்திலிருந்து பாடசாலைக்கு நடந்து வருவதில் உள்ள இடர்பாடுகளையும் தெரிவித்தனர். இது தவிர வாழ்வாதார உதவிகள் பற்றியும் பலரால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

முன்வைக்கப்பட்ட குறைகள் அனைத்தையும் கேட்டுக் கொண்ட ரவிகரன் . மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் மற்றும் மிதிவண்டி தொடர்பிலும் வாழ்வாதார உதவிகள் தொடர்பிலும் சிலருக்கு உடனடியாக உறுதி அளித்தார். மேலும் அக்கிராமத்தின் வளர்ச்சிப்பணிகளில் தன்னுடைய உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும் என்றும் கூறினார். (2-281-250)

# இந்தியன் வீடமைப்புத் திட்டத்தில் முறைகேடுகள்; விசாரணைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்

## ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி செயலாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தியன் வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுப்பதில் பயனாளிகள் அதிகாரிகளின் முறைகேடுகளுக்கும், உதாசீனங்களுக்கும் ஆளாகிவருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. எனவே, இவ் விடயம் தொடர்பில் உரிய தரப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்து அவர் தெரிவிக்கையில்,

இந்தியன் வீட்டுத் திட்டமானது எனது சமயோசித செயற்பாடு காரணமாக எமது மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இதனை உரிய பயனாளிகள் இனங்காணப்பட்டு அவர்கள் வசம் ஒப்படைப்பதில் எவ்விதத் தடைகளும் இருக்கக் கூடாது. எனினும் இந்திய வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்துவதில் பல்வேறு முறைகேடுகள் ஏற்பட்டு வருவதாக அறியக் கிடைத்து வருகிறது.

குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் முழங்காவில் பகுதியில் இவ் விடயம் தொடரபில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. இந்தியன் வீடமைப்புத் திட்டத்தை செயற்படுத்தி வருகின்ற பங்காளித் தரப்பு அதிகாரிகளின் முறைகேடுகள் அதிகரித்து வருவதாக இம்முறைப்பாடுகளில் இருந்து தெரிய வருகின்றது.

பாலியல் இலஞ்சம் கோருதல், உதவித் தொகையினை வழங்குவதில் இழுத்தடிப்பு, வீடுகளுக்கென ஒதுக்கப்பட்ட முழுத் தொகையை வழங்காமல் குறைவான தொகையை பயனாளிகளுக்கு வழங்குதல் போன்ற குற்றச்சாட்டுக்கள் மேற்படி பங்காளித் தரப்பினருக்கு எதிராக எழுந்துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் இந்தியத் தூதரகத்தின் அவதானத்திற்குக் கொண்டு வர வுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர்,


குறித்த அதிகாரிகள் தொடர்பில் உரிய விசாரணைகளை உடனடியாகமேற கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவும், இது போன்ற தவறுகள் மேலும் இடம்பெறாதிருக்கும் வகையில் செயற்பாடுகளை முன்னெடுக்கும்படியும் கோரிக்கை விடுக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து

# துருக்கிக்கு தனது போர்க்கப்பலை நகர்த்த தொடங்கியுள்ள ரஷ்யா

(மொஸ்கோ)

**துருக்கியில் ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து ரஷ்யாவின் போர்க்கப்பல் துருக்கியை நோக்கி அனுப்பப்பட்டுள்ளது.**



ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி விட்டு திரும்பிய ரஷ்ய போர் விமானம் துருக்கி எல்லைப் பகுதிக்கு அருகில் வைத்து துருக்கி இராணுவத்தினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

இத்தனையடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து ரஷ்யா துருக்கியை நோக்கி தனது யுத்தக் கப்பலை நகர்த்தியுள்ளது.

இதனால் மேற்படி பிராந்தியத்தில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து மேற்கொண்டு பிரச்சினைகள் தலைதூக்காமல் இருக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி விட்டு திரும்பிக் கொண்டிருந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து ரஷ்யா தனது யுத்தக் கப்பல்களை அங்கு நகர்த்தியுள்ளது.

இதனால் பிராந்தியத்தில் பதற்ற நிலை எழுந்துள்ளது. நாடுகளுக்கிடையே பனிப்போர் மூளுமா என்ற அச்சம் மேற்படி விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதையடுத்து தோன்றியுள்ளது. (3)

# 165 பேர் பாரீஸில் கைது 230 ஆயுதங்கள் மீட்பு



பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் இடம்பெற்ற ஐ.எஸ். தீவிரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து 1200 இடங்களில் தேடுதல் நடத்திய பொலிஸார் 165 பேரை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 230 ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 13 ஆம் திகதி நள்ளிரவில் ஐ.எஸ்.தீவிரவாதிகள் 6 இடங்களில தொடர் தாக்குதல் நடத்தினார்கள். அதில் 130 பேர் பலியாகினர். 352 பேர் காயம் அடைந்தனர்.

இது குறித்து பொலிஸார் நடத்திய விசாரணையில், இத்தாக்குதலுக்கு அப்துல் ஹமீது அயிவுத் (27) என்ற பெல்ஜியம் தீவிரவாதி மூளையாக செயற்பட்டது தெரிய வந்தது. அவன் பாரீஸில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது.

எனவே, அதை சுற்றி வளைத்த பொலிஸார் அதிரடி தாக்குதல் நடத்தி அபாவுத் உட்பட 3 பேரை சுட்டுக் கொன்றனர். மேலும் பல தீவிரவாதிகள் பதுங்கி இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

எனவே பாரீஸ் மற்றும் புறநகர் பகுதிகளில் 1200 இடங்களில் அதிரடி சோதனை நடத்தினர். அங்கு 165 பேரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 230 ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்த தகவலை பிரான்ஸ் உள்துறை அமைச்சர் பெர்னார்ட் காஷானுவே தெரிவித்துள்ளார். இதற்கிடையே பாரீஸ் தாக்குதலில் தொடர்புடைய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரது பெயர் ஜாவத் பென்டாவுத் (29). இவர் செயின்ட் டேனிஸ் பகுதியில் உள்ள தனது வீட்டில் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்ட அப்துல் ஹமீத் அபாவுத் உள்ளிட்டோர் தங்க அடைக்கலம் கொடுத்தார். அங்கு சோதனை நடத்திய பொலிஸார் 3 பேரை சுட்டுக் கொன்றனர்.

தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுததாக கைது செய்யப்பட்ட அவர் தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் நீதிபதி முன்பு ஆஜர்படுத்தப்பட்டார். (3-7)

# நேபாள வன்முறைகள் தொடர்பில் விசாரணைக்கு கோருகிறது ஐ.நா.

நேபாளத்தில் நடைபெற்று வரும் வன்முறை சம்பவங்கள் குறித்து தன்னிச்சையான விசாரணை நடத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

நேபாளத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் புதிய அரசியலமைப்பு பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எல்லையோரத்தில் வசித்து வரும் இந்திய வம்சாவளியினரான மாதேசி பழங்குடியின மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த நூறு நாட்களுக்கு மேலாக நடைபெற்று வரும் இந்த ஆர்ப்பாட்டங்களில் ஏற்பட்ட வன்முறையில் இதுவரை 50 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இதனிடையே, நேபாளத்தில் இந்திய எல்லை அருகே கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாதேசி பழங்குடியினர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிசூட்டில் 4 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில், நேபாளத்தில் தொடரும் வன்முறை சம்பவங்கள் குறித்து தன்னிச்சையான விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் வலியுறுத்தியுள்ளது. மேலும் போராட்டத்தை கைவிடுமாறு மாதேசி மக்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

முன்னதாக, கடந்த சனிக் கிழமை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு இந்தியா தரப்பிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (3-7)

# சினாய் தீவில் குண்டு வெடிப்பு; நான்கு பொலிஸார் உயிரிழப்பு




(கெய்ரோ)

எகிப்து நாட்டில் பாராளுமன்ற தேர்தல் நடந்து வருகிறது. 2 ஆவது சுற்று தேர்தல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்நிலையில் அங்கு பாராளுமன்ற தேர்தலை மேற்பார்வையிட்டு வந்த நீதிபதிகள் எல் அரிஷ் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கி இருந்தனர்.

நேற்று முன்தினம் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஒருவர் அந்த ஹோட்டலுக்குள் அத்துமீறி ஓட்டிச் செல்ல முயற்சித்தார். அதைக் கண்ட பாதுகாவலர்கள் அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். அதில் அந்தப் பகுதியே அதிரக் கூடிய வகையில் காரில் நிரப்பி இருந்த குண்டுகள் வெடித்தன.

இந்த குண்டுவெடிப்பில் சிக்கி 4 பொலிஸார் பலியானதாகவும், 12 பேர் காயம் அடைந்ததாகவும் முதல் கட்ட தகவல்கள் கூறுகின்றன.

கார் குண்டுவெடிப்புக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

இருப்பினும் இதுபோன்ற தாக்குதலகளை அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த காலத்தில் நடத்தி வந்துள்ளதால், இந்த தாக்குதலையும் அவர்களே நடத்தி இருப்பார்கள் என்று சந்தேகிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் நடந்த அடுத்த 10 ஆவது நிமிடத்தில் இன்னொரு குண்டுவெடிப்பும் அங்கு நடந்ததாக தெரிய வந்துள்ளது. அது குறித்த கூடுதல் விபரங்கள் தெரிய வரவில்லை. (3-7)

# ஐ.எஸ்ஸிலிருந்து தப்பியோட முயன்ற யுவதி சிரியாவில் அடித்துக்கொலை

ஐ.எஸ். அமைப்பிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற யுவதி ஒருவர் சிரியாவில் அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

பொஸ்னியாவைச் சேர்ந்த பெண், சம்ரா கெசினோவிச் (வயது 17) இவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவர். இவரது தோழி சபினா செலிமோவிச் (15) ஆகியோர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நாட்டை விட்டு வெளியேறி சிரியா சென்றனர். ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்து போராடப் போவதாக அவர்கள் கடிதம் எழுதி வைத்து விட்டு கிளம்பினர். டாக்கா நகரை அடைந்த அவர்கள் ஐ.எஸ். அமைபபில் சேர்ந்தனர்.

சம்ரா மற்றும் சபினா ஐ.எஸ். த்விரவாதிகளை திருமணம் செய்து கொண்டனர். ஆரம்பத்தில் இரு ஜோடிகளும் ஒரே அறையில் வசித்து வந்துள்ளனர். பின்னர் சபினா தனது கணவருடன் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டார்.

சிரியாவில் இருந்து தப்பியோட சம்ரா முயற்சி செய்துள்ளார். அப்போது அவரை பிடித்த தீவிரவாதிகள் அவரை அடித்தே கொலை செய்துள்ளனர். இந்த செய்தி ஆஸ்திரியாவைச் சேர்ந்த பல செய்தித்தாள்களில் வெளியாகியுள்ளன.

ஐ.எஸ். அமைப்புக்கு ஆட்களை சேர்க்கும் வகையில் வெளியான போஸ்டர்களில் சம்ராவும், சபினாவும கையில் துப்பாக்கியுடன் தீவிரவாதிகளுடன் போஸ் கொடுத்திருந்தனர். சிரியாவில் தான் மகிழ்ச்சியாக இருப்பதாக சபினா தெரிவித்துள்ளார். (3-7)

## பாகிஸ்தானைச் சேர்ந்த பிரஜைக்கு அமெரிக்காவில் 40 வருட சிறை

அமெரிக்காவில் வெடிகுண்டு வைக்க சதி செய்த பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் கப்டனுக்கு 40 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானை சேர்ந்தவர் அபித் நசீர் (29). இவர் பாகிஸ்தானில் பாடசாலை கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்தார். இவரை கடந்த 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்து பொலிஸார் கைது செய்தனர். மன்செஸ்டர் நகரில் ஒரு வணிக வளாகத்தில் நடந்த குண்டு வெடிப்பில் தொடர்பு இருபபதாக குற்றம்சாட்டப்பட்டது. அதை தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு இவர் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

இதற்கிடையே அமெரிக்காவிற்கு கடத்தப்பட்ட இவர் மீது புரூக்ளின் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி ரேமண்ட் டெயரி, இவரை ஒரு தீவிரவாதி என்றார். அதற்கான ஆதாரம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால் நசீருக்கு 40 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (3-7)

## பனிப்போருக்கான ஆரம்பம்

# ரஷ்ய யுத்த விமானத்தை சுட்டு வீழ்த்தியது துருக்கி

### விமானிகள் பரசூட் மூலம் தப்பினர்

(அங்காரா)

**அத்துமீறி பறந்த ரஷ்ய போர் விமானத்தை துருக்கி சுட்டு வீழ்த்தி அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.**

சிரியாவில் கடந்த 4 ஆண்டுகளாக ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிராக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதற்கு துருக்கி ஆதரவு அளிக்கிறது. பஷார் அல் ஆசாத்தை பதவியில் இருந்து அகற்றுவதில் துருக்கி அக்கறை காட்டி வருகிறது. ஆனால் ரஷ்யாவோ, பஷார் அல் ஆசாத்துக்கு தீவிர ஆதரவு அளித்து வருகிறது. சிரியாவில் ஜனாதிபதி எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக ரஷ்யா இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில் ரஷ்யாவுக்கும் துருக்கிக்கும் இடையே பனிப்போர் மூண்டுள்ளது.

இந்த நிலையில் துருக்கியின் 'எப்-16' ரக போர் விமானங்கள், ரஷ்யாவின் போர் விமானம் ஒன்றை சிரிய எல்லையில் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தின. அந்த விமானம் தீப்பிடித்து ராட்சத தீப்பந்து போன்று வானில் இருந்து மலைப் பகுதியில் விழுந்தது.

அந்த விமானம் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு முன்னதாக அதன் 2 விமானிகள் பரசூட் மூலம் உயிர் தப்பினர். பரசூட் மூலம் பத்திரமாக தரை இறங்கிய அவர்களை மீட்பதற்கு துருக்கி 2 ஹெலிகொப்டர்களை அனுப்பியதாகவும் கூறப்படுகிறது.

துருக்கி வான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததால்தான் ரஷ்யாவின் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இந்த சம்பவம் சர்வதேச அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே கடந்த மாதம் 2 வெவ்வேறு சம்பவங்களில் ரஷ்ய போர் விமானங்கள் அத்துமீறி துருக்கியின் வான் எல்லையில் நுழைந்ததாகவும் இது தொடர்பாக ரஷ்ய தூதரை இருமுறை நேரில் அழைத்து துருக்கி தனது எதிர்ப்பை பதிவு செய்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

மேலும், ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட ஆளில்லா விமானம் ஒன்று கடந்த மாதம் துருக்கி வான் எல்லையில் அத்துமீறி நுழைந்தபோது அதை துருக்கி இராணுவம் சுட்டு வழ்த்தியது. ஆனால் அந்த ஆளில்லா விமானம் தங்களுக்கு உரியது அல்ல என்று ரஷ்யா மறுத்து விட்டது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ் நேற்று (புதன்கிழமை) துருக்கிக்கு பயணம் மேற்கொண்டு, இரு தரப்பு உறவினை சகஜ நிலைக்கு கொண்டு வர பேச்சுவார்த்தை நடத்த நிச்சயித்திருந்த நிலையில், இப்போது ரஷ்யாவின் போர் விமானத்தை துருக்கி சுட்டு வீழ்த்தி இருப்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

## கனடாவில் குடியேற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மட்டும் அனுமதி

### அரசு அதிரடி முடிவு

(டொரன்ரோ)

பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் இல்லாமல் தனி ஆண்களாக வருபவர்களுக்கு கனடாவில் புகலிடம் அளிக்க அந்நாட்டு அரசு தடை விதித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த பாராளுமன்ற பொது தேர்தலின் போது, சிரியா நாட்டை சேர்ந்த சுமார் 25,000 அகதிகளை கனடாவில் குடியேற அனுமதி அளிக்கப்படும் என லிபரல் கட்சி தலைவரான ஜஸ்டின் ரூடோ அறிவித்திருந்தார்.

தற்போது அதிக பெரும்பான்மையுடன் பிரதமராக வெற்றி பெற்றிருக்கும் நிலையில், ஏற்கனவே கூறியதுபோல சிரியா அகதிகளை கனடாவிற்குள் அனுமதிப்பது தொடர்பான பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது.

எனினும், இந்த புகலிட அனுமதி அளிப்பதில் சிறிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, பெண்கள், குழந்தைகள் மற்றும் குடும்பமாக வரும் நபர்களை தவிர, தனி நபர்களாக புகலிடம் கோரி வரும் ஆண்களுக்கு அனுமதி தடை செய்யப்பட்டுள்ளதாக கனடாவில் வெளியாகும் சி.பி.சி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த திட்டமானது சிரியா அகதிகளுக்கு மட்டுமே பொருந்தும் என கூறப்படுகிறது. (3)

## ஐ.எஸ். அமைப்பிற்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பிரசாரம்

**12 மாணவர்கள் படுகொலை**

ஈராக் நாட்டின் நகர்களில் ஒன்றான மோஸுலில் ஐ.எஸ்.அமைப்பின் பயங்கரவாதிகள் 12 மாணவர்களை கொன்றுள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமிய அரசு என்று தம்மைக கூறிக் கொள்ளும் அக் குழுவுக்கு எதிரான கருத்துக்களை சமூக வலைத்தளங்களில் அந்த மாணவரகள்முனனெடுத்தனர் என்று கூறப்படுகிறது.

அந்த மாணவர்களின் சடலங்கள மோஸுலிலுள்ள சவக்கிடங்கில் வீசப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரத் தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

மோஸுல் நகரே ஈராக்கில் ஐ.எஸ். அமைப்பின் வலுவான தளமாக உள்ளது.

முதல், அங்கு தமது பாணியில் இஸ்லாமியச் சட்டங்களுக்கு மிகக் கடுமையான விளக்கங்களைக் கொடுத்து அதை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

இஸ்லாமியர் அல்லாத பலரையும் அந்த அமைப்பினர் நகரை விட்டு விரட்டி அடித்துள்ளனர். (3-7)

## வான் எல்லையை பாதுகாக்க துருக்கிக்கு உரிமையுண்டு மேற்கொண்டு பிரச்சினைகள் தலைதூக்கக்கூடாது

### ரஷ்ய விமானம் வீழ்த்தப்பட்டமை குறித்து அமெ.ஜனாதிபதி ஒபாமா

(வோஷிங்டன்)

துருக்கி அரசுக்கு தங்கள் நாட்டு வான்எல்லையை பாதுகாக்கும் உரிமை உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

சிரியாவிலுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது தாக்குதல் நடத்திவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த ரஷ்ய நாட்டுப் போர் விமானத்தை துருக்கி போர் விமானங்கள், துருக்கி-சிரியா எல்லைப் பகுதியின் அருகே நேற்று முன்தினம் காலை வழிமறித்து சுட்டு வீழ்த்தின.

துருக்கி நாட்டின் வான்வழி கட்டுப்பாட்டு அதிகாரிகளின் எச்சரிக்கையையும் மீறி, ஐந்து நிமிடங்களில் பத்து முறை தங்கள் நாட்டு எல்லைக்குள் நுழைந்ததால் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக துருக்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

தங்கள் நாட்டு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகமும் உறுதி செய்தது.

இந்நிலையில், இதுதொடர்பாக வோஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, தங்கள் நாட்டு வான்எல்லையை பாதுகாக்கும் உரிமை துருக்கி அரசுகு உள்ளது என தெரிவித்துள்ளார்.

'ரஷ்யாவுக்கு சொந்தமான போர் விமானத்தை துருக்கி சுட்டு வீழ்த்தியது தொடர்பான இதர தகவல்கள் கிடைத்த வண்ணம் உள்ளன. விரைவில், துருக்கி ஜனாதிபதியுடன் பேசி நிலைமையை அறிய இருக்கிறேன்.

ஆனால், தற்போதைய நிலவரப்படி எல்லா நாடுகளைப் போல தங்கள் நாட்டு தரை எல்லையையும், வான் எல்லையையும் பாதுகாக்கும் உரிமை துருக்கிக்கும் உள்ளது.

சிரியாவில் துருக்கி உள்ளிட்ட சிலநாடுகளின் ஆதரவைப் பெற்ற மிதவாதப் போராளிகளுக்கு எதிராகவும், அங்குள்ள ஆட்சிக்கு ஆதரவாகவும் வான்வழி தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வரும் ரஷ்யாவின் போர் விமானங்கள் துருக்கி நாட்டு எல்லைக்கு வெகு நெருக்கமாக இந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன என்பது இந்த சம்பவத்தின் மூலம் தெளிவாகின்றது.



எனினும், இந்த சம்பவத்தின் மூலம் துருக்கி-ரஷ்யா இடையில் மேற்கொண்டு பிரச்சினைகள் தலைதூக்காமல் இருக்க வேண்டும். ஐ.எஸ். தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான சர்வதேச படையில் ரஷ்யாவும் இணைய வேண்டும் என்பதே அமெரிக்காவின் விருப்பமாக உள்ளது' என ஒ்பாமா கூறியுள்ளார். (3-7)

## குடியேறிய பாகிஸ்தானியர்களை வெளியேற்ற தயாராகின்றன ஐரோப்பிய நாடுகள்

சட்டவிரோதமாக குடியேறியுள்ள பல்லாயிரக்கணக்கான பாகிஸ்தானியர்களை வெளியேற்ற ஐரோப்பிய நாடுகளில் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது நவாஸ் ஷெரீப் ஆட்சி செய்யும் பாகிஸ்தானில் அதிக குழப்பங்கள் இல்லாமல் அரசியல் நிலை தன்மை நிலவுகிறது. ஆனால் பாகிஸ்தானை சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பல ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளனர்.மேலும்தொடர்ந்துகுடியேறவும் முயற்சி செய்தும் வருகிறார்கள்.

இந்நிலையில் தற்போது வெளியாகியுள்ள தகவல்படி ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள பாகிஸ்தானியர்களை வெளியேற்றிவிட்டு அவர்களுக்கு பதிலாக கடுமையான உள்நாட்டு போரால் பாதிக்கப்பட்ட சிரியா, ஆப்கானிஸ்தான் நாடுகளை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (3-7)

## எப்-16 ரக போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்க அமெ.முடிவு

பாகிஸ்தான்பிரதமர் நவாஸ்ஷெரீப் கடந்த மாதம் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் அமெரிக்காவிடம் இருந்து போர் விமானங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்து கொள்வார் என தகவல்கள் வெளியாகின. ஆனால் அதனை அமெரிக்க ஜனாதிபதி மாளிகை மறுத்து விட்டது. ஆனால் இப்போது பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 8 'எப்-16' ரக போர் விமானங்களை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளது. இது தொடர் பாக அமெரிக்க பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி மாளிகை, அடுத்த மாதம் அறிக்கை அளித்து ஒப்புதலைக்கோரும்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா விற்பனை செய்ய உள்ள போர் விமானங்களை அந்த நாட்டின் 'லாக்ஹீட் மார்ட்டின் கம்பனி தயாரித்து உள்ளது. இந்த போர் விமானங்கள் இந்தியாவால் நிராகரிக்கப்பட்டவை என தகவல்கள் கூறுகின்றன. (3-7)

# பட்ஜெட் முன்மொழிவுகள்

### காணி

அரச காணிகளின் பயன்பாட்டை உச்சப்படுத்தும் மற்றும் அரச காணிகள் தொடர்பாக முறையற்ற கொடுக்கல் -வாங்கல்களை ஒழிக்கும் நோக்கில் ஒரு காணி வங்கியை அறிமுகம் செய்வதற்கு முன்மொழிகின்றேன். இது அரசுக்கு உரிமையான காணிகள் தொடர்பான இலத்திரனியல் தரவுத் தளத்தையும் கொண்டதாகும். இந் நடவடிக்கைகளுக்காக நான் ரூபா 500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன். தகவல் தொடர்பு தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனம் இலத்திரனியல் தரவுத் தளத்திற்கு இத்தகவல்கள் உடனடியாக மாற்றப்படுவதை உறுதி செய்யும். அதன் பின்பு இத்தரவுத் தளம் தனியாருக்குச் சொந்தமான காணிகளின் தரவுகளை உள்வாங்கிக்கொள்ள முடியும்.

### உள்வரும் மாற்றல்கள் மற்றும் முதலீட்டுப் பாய்ச்சல்கள்


கடந்த தசாப்தத்தில் நாட்டில் காணப்பட்ட சட்ட ஒழுங்கற்ற நிலையும் ஊழல், நல்லாட்சியின்மை, என்பவற்றுடன் கூடிய சூழமொழிகின்றேன். அதே போன்று பல்வேறு காரணங்களுக்காக தமது நிதிகளை வெளிநாடுகளில் வைத்திருக்கும் இலங்கையர்கள் தங்களது பணங்களை தாய் நாட்டிற்குக் கொண்டு வந்து நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

### ஏற்றுமதி ஊக்குவிப்பு

கடந்த தசாப்தமானது நாட்டின் ஏற்றுமதித்துறையினை பின்னோக்கித் தள்ளிய ஒரு காலப்பகுதியாகும். அரசாங்கத்தின் குறுகிய நோக்கான கொள்கைகளினால் சந்தைகளை இழக்க வேண்டியேற்பட்டதினால் நாடு உயர்ந்த பாதகமான மீதியைக் கொண்டதாகியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கில் 2000 ஆம் ஆண்டில் 33.3 சதவீதமாகக் காணப்பட்ட இலங்கையின் வர்த்தக ரீதியான ஏற்றுமதியானது 2014 ஆம் ஆண்டில் 14.1 சதவீதமாகக் குறைவடைந்தது. அதேவேளை, உலகச் சந்தையில் இலங்கையின் ஏற்றுமதியின் பங்கானது 0.09 சதவீதத்தில் இருந்து 0.06 சதவீதமாகவும் இக்காலப்பகுதியில் சுறுசுறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதோடு குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், வாசனைத் திரவியங்கள், மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணங்கள் என்பவற்றின் வர்த்தக நாம ஊக்குவிப்பு மற்றும் புதிய சந்தைகளை கண்டு பிடித்தல் என்பவற்றில் ஈடுபடல் வேண்டும் எனவும் நான் முன்மொழிகின்றேன்.

### சர்வதேச வர்த்தகம்

தற்போதுள்ள இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமானது அனுமதிப்பத்திர முறைமையை உருவாக்கியுள்ளதுடன் அதனால் நாட்டை தரம் குறைந்த பொருட்களை குவிக்கும் தளமாக மாறிக் கொண்டிருப்பதை



வதோடு, ஜீ. எஸ். பீ பிளஸ் முறைமையினூடாக ஐரோப்பாவுக்கான ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்மொழிகின்றேன்.

### வீடமைப்பு

இவ்வரசாங்கம் அனைவருக்கும் இருப்பிட வசதியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உறுதி பூண்டுள்ளது. இந் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாத மற்றும் குறைபாவனையுடைய அரச காணிகள் விடுவிக்கப்படும்.

சேரி வாழ் மக்கள் எதிர் கொள்ளும் வெளிப்படுத்தப்படாத கஷ்டங்களை நானநன்கு அறிந்தவன். இப்பிரச்சினையானது சாதி, இனம், மதம் மற்றும் பொருளியல் என்பவற்றுக்கும் அப்பால் 5 ஆயிரம் வீட்டு அலகுகளையும் நியாயமான விலையில் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இவ்வீடுகளானது கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி,மாத்தறை, மட்டக்களப்பு, புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் உள்ள அரச காணிகளில் நிர்மாணிக்கப்படும். அரச ஊழியர்கள் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகள், செய்து கொடுக்கப்படுவதோடு, தனியார் துறை முதலீட்டாளர்களுக்கு அரை வரி விடுமுறை பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வீட்டு அலகுகளைச சுற்றி ஏனைய சமூக அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் எமது அரசாங்கம் புதிய கிராமிய வீடமைப்புத் திட்டங்களை அமுல்படுத்தும் அரசாங்கமானது செலவினை குடியிருப்பாளர்களுடன் பகிர்ந்து கொள்ளும். 500 சதுர அடி நிலப்பரப்பைக் கொண்ட வீட்டைக் கட்டிக் கொள்வதற்கு அரசாங்கமானது அதிக பட்சமாகரூபா 300,000 ரூபாவை கட்டம் கட்டமாக பெற்றுக் கொடுக்கும். அரசாங்கமானது, ஒவ்வொரு தேர்தல் தொகுடங்களுக்கு மேல் குடியிருந்தவர்களுக்கு அவற்றின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் தேவையான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். இவ்விதி விலக்கானது 10 வருடங்களுக்கு மேல் அரச வீடுகள் மற்றும் பெருந்தோட்டத்துறை வீடுகளில் வாழ்பவர்களுக்குமவிரிவாக்கப்படும்.

வெவ்வேறு உள்ளூராட்சி சபைகள் வெவ்வேறு வகையான சொத்து வரிகளை அமுல்படுத்துவது வரி செலுத்துபவர்களுக்கு மிகுந்த பாதிப்பினை கொடுக்கின்றது. எனவே உள்ளூராட்சி சபைகளின் வரி அறவீடுகள் வருடாந்த வர்த்தக பெறுமதியில் 15 சதவீதத்தை மீறுதல் கூடாது என்பதனை நான் முன்மொழிகின்றேன். மேலும் வருடாந்த சொத்து மதிப்பு ரூபாய் 500 அல்லது அதற்கு குறைந்ததாக இருந்தால் வரி விலக்கு அளிக்கவும் நான் பரிந்துரைக்கின்றேன்.

தற்போதைய நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் நடைமுறையில் உள்ள வாடகை மற்றும் வீட்டு ஆதனங்கள் மீதான வரையறை தொடர்பான சட்டங்கள்

## முறைகேடுகளுக்கு இனிமேல் இடமே இல்லை

## இலத்திரனியல் மயமாக்கப்பட்ட தரவுகளுடன் 'காணி வங்கி'



லானது நாட்டில் வியாபாரங்களின் செயலாற்றுகையை பெரிதும் பாதித்தது.

### தனியார் துறை ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பள உயர்வு

ஆட்சி மாற்றத்துடன் இந்நாடானது வியாபாரங்களுக்காக சாதக நிலையைக் கொண்டுள்ளது. தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் நல்லாட்சி நிலவுகின்றமையால் பலர் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தமது விருப்பத்தை தெரிவித்துள்ளனர். இவ்வாறான முதலீட்டாளர்களின் முதலீடுகளுக்கும் மற்றும் உள்நோக்கிய மாற்றல்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் காப்புறுதி வசதிகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய சர்வதேச நிறுவனங்களுடன் தொடர்பு கொள்வதற்கு நான் முன்குறைவடைந்துள்ளது. இந் நிலைமையானது, இரு தரப்பு மற்றும் பல தரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் மூலம் ஏற்றுமதிகளை பல்வகைப்படுத்தி எமது நிலையை உறுதிப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை வேண்டி நிற்கின்றது. வெளிவாரியான உறுதிப்பாட்டிற்கு நிலைபேறான ஏற்றுமதித்துறை வளர்ச்சி இன்றியமையாததாகும். நாட்டின் முழு மொத்தமான பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் அபிவிருத்திக்கும் கீழ்வரும் பல முக்கிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

மேலும், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் வகையில் உறுதிப்படுத்தப்படுவதோடு, இலங்கை ஏற்றுமதிப் பொருட்களுக்கான புதிய சந்தைகளை அறிமுகம் செய்வதற்கு மிகவும் தடுக்க முடியாதுள்ளது. தற்போதுள்ள சட்ட வரைவுகளை நீக்கி புதிய சட்டத்தினை அறிமுகப்படுத்த நான் முன்மொழிகின்றேன். இதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஒரு சமநிலையான தளத்தை வழங்குவதோடு, நாட்டில் ஒரு செயற்றிறனான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி முறைமையும் உருவாக்கும்.

எமது சர்வதேச வர்த்தகக் கொள்கை வேலைச்சட்டகத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் சர்வதேச வர்த்தக முகவராண்மையை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்கா, சீனா, தென் கொரியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியத் தன்மையை கண்டறியுமாறு வேண்டிக் கொள்சுகாதாரம், கல்வி, சமூக அபிவிருத்தி என்பவற்றில் மட்டுமல்லாமல் அரசியலிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. ஆகவே, நாட்டின் பிரஜைகளான அவர்களது பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்வது எமது கடமையாகும். ஆகவே, எதிர் வரும் 5 ஆண்டுகளில் அரச, தனியார் பங்குடமையின் கீழ் சேரி வாழ் மக்களுக்கு 100,000 வீட்டு அலகுகளை நிர்மாணித்து வழங்குவதற்கு முன்மொழிகின்றேன். அதேவேளை, மீள் குடியமர்த்தலின் போது அவர்களது வாழ்வாதாரம் மற்றும் சமூக வலையமைப்பு பாதிப்புக்குள்ளாகாது என்பதும உறுதி செய்யப்படும்.

தனியார் துறையின் பங்களிப்புடன் நடுத்தர மட்ட அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு 150,000 வீட்டு அலகுகளையும் அரசாங்கத்தின் சிரேஷ்ட ஊழியர்களுக்காக தியிலும் குறைந்த பட்சம் 5,000 வீடுகளையாவது நிர்மாணிக்கும் . இதற்காக ரூபா 4,500 மில்லியன்களை ஒதுக்குவதற்கு முன்மொழிகின்றேன்.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், சுவர்ண பூமி மற்றும் உதாகம ஆகியனவற்றின் கீழ் காணி மற்றும் வீடுகளை பெற்று அனுமதிப்பத்திரத்துடன் 10 வருமீளாய்வு செய்யப்படும்.

மேலும் கூட்டு ஆதனங்களில் முதலிடும் வெளிநாட்டவர்களுக்கு உள்ளூர் வங்கிகளினூடாக உள்ளூர் பணத்தில் ஆதனத்தின் 40 சதவீத பெறுமானமுள்ள கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நான் முன் மொழிகின்றேன்.

(தொடரும்...)

# நகருக்கு வரும் வாகனத்தில் 4 பேர் வருவது கட்டாயம் இல்லாவிடின் தண்டம்

நகர்களுக்குள் பிரவேசிக்கும் ஒரு வாகனத்தில் குறைந்த பட்சம் 4 பயணிகளாவது இருத்தல் வேண்டும் என்ற பிரேரணை 2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தின 471 ஆவது உப பிரிவில் இது தொடர்பான விளக்கம் உள்ளடங்கப்பட்டுள்ளது.

நகர்களில் வாகன நிறுத்தல் வசதிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் இந்த சட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது. இந்த வசதியை ஏற்படுத்துவதற்கு 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.


இத்திட்டத்தை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்துக்குள் அமுல்படுத்தவுள்ளதாக முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதன் பின்னர் நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களில் குறைந்தது 4 பேர் காணப்படாவிடின் அதற்கு தண்டப்பணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7-10)




# ஐ.நாவின் தகவல் போலியானது

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



**திருகோணமலை கடற்படை முகாமை பார்வையிட ஐக்கிய நாடுகள் சபையின் குழுவிற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியமை குறித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பியுள்ள அதேவேளை ஐ.நா.குழு வெளியிட்டுள்ள தகவல் போலியானது எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.**

எந்தவொரு நாடும் வெளிநாட்டு குழுக்களை தமது நாட்டின் கடற்படை முகாம்களுக்குள் இதுவரை அனுமதிக்கவில்லை என சுட்டிக்காட்டிய ஜி.எல்.பீரிஸ், தற்போதைய அரசாங்கம் ஐ.நாவின் வலிந்து மற்றும் தன்னிச்சையற்ற காணாமற போதல் தொடர்பான நடவடிக்கை குழுவை கடற்படை முகாமை கண்காணிக்க அனுமதித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் முகாமிற்கு விஜயம் செய்த பின்னர் ஐ.நாவின் நடவடிக்கை குழு போலியான தகவல்களை வெளியிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா. நடவடிக்கை குழுவினரின தகவல்களுக்கு அமைய பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 20 புலனாய்வு அதிகாரிகளை கைது செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாகவும் ஜி.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

திருகோணமலை கடற்படை முகாமிலுள்ள நிலக்கீழ் இரகசிய அறைகளைக் கொண்ட பகுதி குறித்து கேள்வி எழுப்பியிருந்த ஐ.நா. நடவடிக்கை குழுவினர், காணாமற்போனதாக கருதப்படும் நபர்களை தடுத்து வைப்பதற்கு அவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தார். (இ-7-10)

# மோசடிகளை எதிர்த்தவர்கள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர்

## அமைச்சர் ரஞ்சன் ஆதங்கம்



ஊழல் மோசடிகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள் ஓரம் கட்டப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் இலட்சக்கணக்கான வாக்குகளை அளித்து எம்மை நாடாளுமன்றம் அனுப்பியது ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காகும்.

போதைப் பொருள் வர்த்தகர்கள், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள், கள்வர்கள், கப்பக்காரர்களை சட்டத்தின் முன் கொண்டு வருவதாக நான் தேர்தலின் போது வாக்குறுதி அளித்திருந்தேன்.

இப்போது அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது நான் அமைதி பேணினால், நாற்காலிகளை சூடாக்கி வெறுமனே சம்பளம் பெற்றுக் கொள்வதாக மக்கள் என் மீது குற்றம் சுமத்துவார்கள்.

எனது உயிரையும் பணயம் வைத்தே கள்வர்களை பிடித்துக் கொடுப்பதாகக் கூறி மக்கள் முன் சென்றேன்.

பொய்யாக பிரபல்யம் அடைவதற்காக நான் மக்கள் முன்னிலையில் செல்லவில்லை. ஏதேனும் நல்ல விடயத்தைச் செய்ய முயற்சித்தால் பலரும் பல்வேறு கருத்துக்களை கூறுவார்கள்.

கள்வர்களை பிடித்துக் கொடுப்பது நான் பிரபல்யம் அடைந்து கொள்வதற்காக அல்ல. ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் எம்மைக் கொலை செய்யக்கூட அஞ்சமாட்டார்கள். இவ்வாறான நிலையில் எம்மை பலவீனப்படுத்தி ஊழல் மோசடிக்காரர்களை வலுப்படுத்த முயற்சிக்கக் கூடாது என அவர் சிங்களப் பத்திரிகை யொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஊழல் மோசடிகள் தற்போதைய மைத்திரி அரசாங்கத்தில் இல்லை

## அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்கள், அரசியல் பழிவாங்கலாக மற்றும் ஊழல் மோசடிகள் தற்போதைய அரசாங்கத்தில் இல்லை என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அமைச்சர்,

இந்த வருடம் எனக்கு மிகவும் சவாலான வருடமாகும். எனினும் அனைத்து சவால்களிலும் என்னால வெற்றி பெற முடிந்தது. இலங்கை யுனெஸ்கோ அமைப்பின் செயற்குழுவில் நான் நியமிக்கப்பட்டது தனிப்பட்ட ரீதியில் கிடைத்த பதவியல்ல.

இந்த பதவி நாட்டுக்கே கிடைத்த பதவியாகும். இம்முறை வரவு செலவு திட்டத்தில் 9 ஆயிரம் கோடி கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது,

இந்த நாட்டு கல்வியின் பௌதீக வளங்கள் மாத்திரமின்றி தரமான பயிற்சிகளை அபிவிருத்தி செய்வதற்காக நாங்கள் அந்த பணத்தை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை விரைவில் நீங்கும்



ஐரோப்பா ஒன்றியத்தினால் நாட்டிற்கு விதிக்கப்பட்டுள்ள மீன் ஏற்றுமதி தடை விரைவில் நீக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தடை நீக்கப்படுவது தொடர்பில் இலங்கைக்கு வழங்கப்பட்ட இலக்குகள் நிறைவேற்றப்பட்டுள்ளதை ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய பிரிதிநிதிகள் குழு ஒன்று இலங்கைக்கு வருகை தந்ததுடன் அனைத்து பகுதிகளுக்கும் சென்று தடையை நீக்குவதற்கான பரிசோதனைகளை மேற்கொண்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதனையடுத்து தடை நீக்கப்படுவதற்காக வழங்கப்பட்ட அனைத்து இலக்குகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார். தடை நீக்கப்படுவது தொடர்பில் ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கு தமது அறிக்கையை குறித்த பிரதிநிதிகள் சமர்பிக்கவுள்ளதாகவும் கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# ஹெரோயினுடன் பெண் கைதானார்

பொரளை பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்தே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 127 கிராம் ஹெரோயினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சம்பவத்தில் 58 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யபட்டுள்ளார். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-10)

# தொழிலாளர்களாக வெளிநாடுகளுக்கு சென்று உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு

தொழிலாளர்களாக வெளிநாடுகளுக்குச் சென்று உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு இன்று வியாழக்கிழமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்களாக வெளிநாடுகளுக்குச் சென்று உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் காசோலை கையளிக்கும் நிகழ்வு பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் வெளிவிவகார அமைச்சில் நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதி வெளிவிவகார அமைச்சர் சுமார் 45 மில்லியன் ரூபா பெறுமதியான இழப்பீட்டுத் தொகையினை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு கையளிக்கவுள்ளார். (இ-7-10)

# ஐ.நா.குழுவின் கண்டறிவுகள் விசாரணைகளின் தொடக்கமாகுமா?




குறுகிய நாட்களில் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்த போதிலும் நாட்டில் ஆரோக்கியமான மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கு உண்மை மற்றும் நீதி போன்றன மிகவும் இன்றியமையாதவை என்பதற்கான ஒரு சாட்சியமாகவே ஐ.நா. பணிக்குழுவின் பயணம் அமைந்துள்ளது.

*இவ்வாறு சிலோன் ருடே நாளிதமிழில் Manekshaw எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.*

**"நீங்கள் எல்லோரையும் சிலவேளைகளில் முட்டாளாக்கலாம். சில பேரை எல்லா நேரங்களிலும் முட்டாளாக்கலாம். ஆனால் எல்லோரையும் நீங்கள் எல்லா நேரங்களிலும் முட்டாளாக்க முடியாது"!** -ஆபிரகாம் லிங்கன்.

இலங்கை அரசாங்கமானது தனது நாட்டில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை இன்னமும் மேற்கொள்ளத் தொடங்கவில்லை என பத்து நாட்களாக இலங்கைத் தீவில் தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொண்ட காணாமற்போகச்செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழு கண்டறிந்துள்ளது.

இலங்கைத் தீவில் தாங்கள் தங்கியிருந்த காலப்பகுதியில் எவ்வாறான உண்மைகளைக் கண்டறிந்துள்ளனர் என்பது தொடர்பாக காணாமற் போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழுவின் உபதலைவர் பேர்ணாட் டுகெய்ம், தனது சக அதிகாரிகளான ரா.உங்பைக் மற்றும் ஏரியல் டுளிற்ஸ்கி ஆகியோருடன் இணைந்து கடந்த புதன்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா. தலைமைச் செயலகத்தில் ஊடக மாநாடொன்றை மேற்கொண்டிருந்தார்.

காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழுவின் வல்லுனர்கள் இலங்கையில் காணாமற்போனவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்ததோடு மட்டுமன்றி திருகோணமலையிலுள்ள கடற்படை முகாம் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் நான்காம் மற்றும் ஆறாம் மாடிகள் கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவு காலியிலுள்ள பூசா தடுப்பு முகாம் ஆகிய இடங்களில் இரகசியத் தடுப்பு முகாம்கள் உள்ளதாக பேர்னாட் டுகெய்ம் ஊடக மாநாட்டில் குறிப்பிட்டார்.

1994 முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் காலத்தில் காணாமற்போனோர் தொடர்பான தகவல்களை இலங்கைத் தீவு முழுவதிலும் சேகரிப்பதற்கான ஆணைக்குழுக்கள் முதலில் உருவாக்கப்பட்டன. இதன்பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு செயற்பட்டது.

எனினும் கடந்த காலங்களில் இலங்கை ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட இவ்வாறான ஆணைக்குழுக்களிடம் காணாமற் போனவர்களின் உறவினர்கள் தமது துன்பங்களைக் கூறிய போதிலும் எவ்வித பயனும் கிட்டவில்லை.

இலங்கையின் உள்நாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் சில மாதங்கள் செயற்பட்ட போதிலும் இந்த ஆணைக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் எந்தவொரு நீதியின் அடிப்படையிலும் உருவாக்கப்படவில்லை.

ஆனால், பத்து நாட்கள் மட்டுமே இலங்கையில் தனது விசாரணைகளை மேற்கொண்ட ஐ.நா பணிக்குழுவானது வடக்கு கிழக்கில் மட்டுமன்றி தென் இலங்கையிலும் காணாமற் போனோர் தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பணிக்குழுவானது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற சில முக்கிய இடங்களுக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் இவ்வாறான முறைப்பாடுகளைக் கூட காணாமற்போனோர் தொடர்பான உள்ளூர் ஆணைக்குழுக்கள் தமது கவனத்திற்குக்கொண்டு சென்றிருக்கவில்லை.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உள்ளூர் விசாரணைப் பொறிமுறையை இலங்கை அரசாங்கம் உருவாக்குவதற்கான நகர்வை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்த்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் கலப்பு நீதிமன்றம் ஒன்றை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்துள்ளது. கடந்த காலங்களில் காணாமற்போனோர் குடும்பங்களுக்கு நீதியை வழங்குவதில் உள்ளூர் ஆணைக்குழுக்கள் தவறியுள்ளதால் போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் கோரியுள்ளார்.

இந்நிலையில் கடந்த வாரம் இலங்கைத் தீவில் தங்கியிருந்த காணாமற்போக செய்யப்பட்டோருக்கான ஐ.நா. பணிக்குழுவின் வல்லுனர்கள் பத்து நாட்களாகத் தமது விசாரணைகளை மேற்கொண்டனர். இது உண்மையில் இலங்கைத் தீவு மீதான பல்வேறு மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான ஒரு ஆரம்ப கட்டமாக நோக்கப்படுகிறது.

சுயாதீனமாக இயங்கும் அனைத்துலக அமைப்பான ஐ.நா.பணிக்குழு இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது அனைத்துலக சமூகத்துடன் இணைந்து பணியாற்றுவதானது வரவேற்கப்படத்தக்கது எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கமானது தனது வாக்குறுதிகளை உறுதியாகவும் முழுமையாகவும் சட்டரீதியாகவும் பங்களிப்புடனும் மேற்கொள்ள வேண்டிய சவாலைக் கொண்டுள்ளதாக பணிக்குழுவின் வல்லுனர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு உண்மை, நீதி, உறுதிப்பாடு போன்றவற்றை வழங்குவதை உறுதிப்படுத்தக்கூடிய பொறிமுறையை இலங்கை அரசாங்கம் கைக்கொள்ள வேண்டும் எனவும் இந்தப் பணிக்குழு வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் மீளிணக்கப்பாட்டை உருவாக்கிக் கொள்வதற்கு இது மிகவும் அவசியமானது எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காதவிடத்து மீளிணக்கப்பாட்டை உருவாக்க முடியாது எனவும் ஐ.நா. பணிக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

குறுகிய நாட்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்த போதிலும் நாட்டில் ஆரோக்கியமான மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்கு உண்மை மற்றும் நீதி போன்றன மிகவும் இன்றியமையாதவை என்பதற்கான ஒரு சாட்சியமாகவே ஐ.நா. பணிக்குழுவின் இப்பயணம் அமைந்துள்ளது.

இப்பணிக்குழு இரகசியத் தடுப்பு முகாங்களுக்கும் நேரடியாகச் சென்று சாட்சியங்களைச் சேகரித்துள்ளது.

இவ்வாறான சில ஆரம்ப கட்ட அவதானிப்புகளுக்கு அப்பால் அடுத்த ஆண்டு ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வின்போது இலங்கையால் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கை தொடர்பான விபரங்களை ஐ.நா. பணிக்குழுவின் வல்லுனர்கள் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகவே, இலங்கை அரசாங்கமானது போரின் போது இடம்பெற்ற மீறல்கள் தொடர்பாக எவ்வித பாரபட்சமுமின்றிய விசாரணையை மேற்கொள்வதன் மூலம் தனது பணியை ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளது.

இதேவேளையில் காணாமற் போகச் செய்யப்பட்டோருக்கான ஐ.நா பணிக்குழுவானது இலங்கையில் பத்து நாட்கள் பணிபுரிந்த அதே காலப்பகுதியில் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு சிவில் சமூக அமைப்புகளின் பங்களிப்புடன் தென்னாபிரிக்காவின் டர்பனில் இலங்கையில் அமைதி மற்றும் நீதியை உருவாக்குவதற்கான தென்னாபிரிக்காவின் ஒற்றுமை அமைப்பால் சிறப்பு சந்திப்பு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த சந்திப்பின் இறுதியில் இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கான பொறுப்புக்கூறல், மீளிணக்கப்பாடு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் தொடர்பில் நிலையான சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான காத்திரமான நம்பகத்தை உருவாக்குவதற்கான ஒரு சூழலை உருவாக்குமாறு இலங்கை அரசாங்கம் மீது அழுத்தத்தைக் கொடுப்பதற்கான ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆகவே இலங்கையை நோக்கிய ஐ.நா. பணிக்குழு வல்லுனர்களின் அண்மைய பயணமானது காலத்திற்குப் பொருத்தமானதாகும்.

இதனைக் கருத்திக் கொண்டு இலங்கையின் தலைவர்கள் நாட்டில் சமாதானம் மற்றும் மீளிணக்கப்பாட்டை உருவாக்குவதற்காக கடந்த காலத் தவறுகளை விசாரணை செய்து நீதி மற்றும் உண்மையைக் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

இதற்கான சரியான பாதையை இலங்கைத் தலைவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான காலம் தற்போது ஏற்பட்டுள்ளது.

# மகிந்த அணியினரே நாட்டை பிரிக்க சதி!

## சம்பிக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலோ வடக்கு மக்களாலோ நாட்டில் குழப்பம் வரவில்லை. மகிந்தவை ஆதரிக்கும் அணியினரே நாட்டை பிரிக்க முற்படுகின்றனர். தேசிய பாதுகாப்பை சீர்குலைக்க ஜனாதிபதியோ பிரதமரோ இடமளிக்கமாட்டார்கள் என ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். புலிகளை விடுவிக்க அரசாங்கத்திற்கு எந்தவிதத் தேவையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் தற்போது முன்னெடுத்துவரும் செயற்பாடுகளினால் தேசிய பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மகிந்த ஆதரவு அணியினர் தெரிவித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7-10)

## அவன்கார்ட் விவகாரம்

# அவதூறு தொடர்பில் விசாரணை செய்யுமாறு 3 அமைச்சர்கள் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம்

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 'அவன்கார்ட்' நிறுவனத் தலைவர் என்று கூறப்படும் நிஸ்ஸங்க சேனாதிபதி அல்லது அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய எவரிடமிருந்தும் தேர்தலுக்கான நிதியோ அல்லது இலஞ்சமோ கோரவில்லை.

இந்த விடயம் தொடர்பில் தங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மூன்று அமைச்சர்கள் பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர். அமைச்சர்களான டாக்டர் ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க ஆகிய 03 அமைச்சர்களே இவ்வாறு இந்த கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

'அவன்கார்ட்' நிறுவனத்தின் தலைவர் எனக் கூறப்படும் நிஸ்ஸங்க சேனாதிபதி என்ற நபர், நவம்பர் 22 ஆம் திகதி ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியொன்றில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, அர்ஜுன ரணதுங்க மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகிய மூவரும் தங்களது நற்பெயருக்கு மிகவும் பாரதூரமான களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருப்பதாக இந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

அமைச்சர்களாகிய எமக்கு பணம் பெற்றுக்கொடுப்பதை நிராகரித்ததன் காரணமாகவே 'அவன்கார்ட்' நிறுவனத்துக்கு எதிராக தாம் செயற்படுவதாகவும் இலஞ்சம் கேட்ட சம்பவத்தை நிரூபிக்க முடியுமென்றும் அவர் அந்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

இந்த கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள நாங்கள் எவ்வேளையிலும் நிஸ்ஸங்க சேனாதிபதியிடமிருந்தோ, அவன்கார்ட் நிறுவனத்துடன் தொடர்புடைய எவரிடமிருந்தோ தேர்தல் நிதியோ அல்லது இலஞ்சமோ கேட்டிருக்கவில்லை என்பதனை உறுதியாக தெரிவிக்க விரும்புகிறோம்.

1) சுடுகலன் சட்டத்தின்படியோ அல்லது வெடிபொருள் தொடர்பான சட்டத்தின்படியோ குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கமைவாக, சுடுகலன்களுக்கான அனுமதிப் பத்திரம் அவன்கார்ட் நிறுவனத்திடம் இருக்கவில்லை. இது சட்ட விரோதமான செயல்.

2) அவன் கார்ட் நிறுவனத்துக்கு மட்டும் சமுத்திர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஏகபோக உரிமை வழங்கப்பட்டிருப்பதனூடாக மோசடி மற்றும் இலங்கை அரசுக்கு கிடைக்க வேண்டிய நிதி இல்லாமல் செய்தல்.

3) வெளிநாட்டு நிதியை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு வேண்டிய நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றாமை.

4) நைஜீரியா உட்பட நாடுகளுடன் இலங்கை அரசு செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு அவன்கார்ட் நிறுவனமும் உள்ளடக்கப்படுவதனூடாக, இராஜதந்திர தவறு இழைக்கப்பட்டுள்ளது.

5) பெருந்தொகையான தன்னியக்க ஆயுதங்கள் தனியார் நிறுவனம் வசம் வைத்திருப்பதென்பது தேசிய பாதுகாப்புக்கும் பிராந்திய பாதுகாப்புக்கும் ஏற்படும் அச்சுறுத்தலாகும்.

6) தேசிய மட்டத்தில் பயிற்றப்பட்ட கடற்படை வீரர்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுக்காமல் நடைபெறும் சுரண்டல்கள்.

7) சில அரசியல்வாதிகளுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் இலஞ்சம் பெற்றுக் கொடுப்பதாக வெளிப்படையாக அவர்கள் பிரசாரம் செய்தல் போன்ற மேற்குறிப்பிடப்பட்ட சம்பவங்களை மட்டுமே நாம் எதிர்க்கின்றோம்.

எனவே இது எவ்வேளையிலும் நிஸ்ஸங்க சேனாதிபதியினுடைய தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கோ அல்லது வர்த்தக நடவடிக்கைகளுக்கோ எதிரானது அல்ல.

மக்களின் தேவைக்காக நல்லாட்சியின் மக்களின் ஆணைக்காக நடத்தப்பட்ட தேசிய நடவடிக்கையாகும். எனவே நிஸ்ஸங்க சேனாதிபதி என்பவர் ஊடகங்களூடாக அமைச்சரவை அந்தஸ்துள்ள எம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் உண்மை நிலையை ஆராய்ந்து சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபரை கேட்டுக கொள்வதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7-10)

# இனவாத அடிப்படையில் நாடாளுமன்றில் கருத்து

முன்னாள் நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான கீதா குமாரசிங்க நேற்று இனவாத அடிப்படையில் நாடாளுமன்றத்தில் கருத்து ஒன்றை முன்வைத்தார்.

வரவுசெலவுத்திட்ட விவாதத்தின் போது அவருக்கு 10 நிமிடங்கள் வழங்கப்பட்டிருந்தன.

எனினும் அவர் அதற்கு மேலதிகமான நேரத்திற்கு தமது பேச்சை தொடர்ந்தார். இதன்போது அவரை கட்டாயமாக அமரவைக்க வேண்டிய நிலை சபைக்கு தலைமை தாங்கியவருக்கு ஏற்பட்டது.

இதன்போது கருத்துரைத்த கீதா குமாரசிங்க, தமது உரை 10 நிமிடங்களுக்கு வரையறுக்கப்பட்ட போதும் வடக்கில் இருந்து வரும் தமிழர்களுக்கு மேலதிக நேரங்கள் வழங்கப்படுகின்றன என்று குற்றம் சுமத்தினார்.

தமிழர்கள் என்றால் நீங்கள் 30 நிமிடங்களை வழங்குகின்றீர்கள். எனினும் எங்களுக்கு 10 நிமிடங்கள் மாத்திரமே வழங்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இதிலிருந்து கட்சிகளுக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு வழங்கப்படுகின்ற நேர அளவுகள் அவருக்கு தெரிந்திருக்கவில்லை என்பது தெளிவாகியதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### அர்த்த பஞ்சகம்

நாம் ஒரு செயலில் இறங்குவதற்கு முன் ஆலோசனை செய்ய வேண்டிய விடயங்கள் ஐந்து உண்டு.

உதாரணமாக ஒருவன் கடைக்குப் போய், ஒரு பொருளை வாங்குகிறான் என்று வைத்துக்கொள்வோம்.

முதலில் அவன் ஐந்து விடயங்களைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். முதலாவதாக "அந்தப் பொருள் எப்படிப்பட்டது?" என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

இரண்டாவதாக தன்னைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அந்தப்பொருள் தனக்குத் தேவையா இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியும்!

மூன்றாவதாக அந்தப் பொருளை அடைவதற்கான வழி என்ன? எவ்வளவு பணம் கொடுத்தால் அது கிடைக்கும் என்றும் நான்காவதாக, அந்தப் பொருள் அடைவதன் மூலம் நாம் அடையக்கூடிய பயன் என்ன? என்றும் ஐந்தாவதாக, அந்தப் பொருளை அடைவதற்கு இருக்கக்கூடிய தடை எது? என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்படி சின்னச் சின்ன விடயங்களில் நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். பேரின்ப நிலை போன்ற சமாச்சாரங்களிலும் நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அதற்குப் பெயர் அர்த்த பஞ்சகம்.

வைணவ சமயத்தில் அர்த்த பஞ்சகம் என்பது ரொம்பப் பெரிய விடயம்! கடைக்குப் போவது மாதிரி கடவுளைப் பார்க்கப் போகும் நாம் ஐந்து விடயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

முதலில் பரம்பொருள் என்பது என்ன? அதன் தன்மைகள் என்ன? - என்பதைத் தெரிந்துகொள்ள வேண் டும். இதற்கு பரமாத்ம ஸ்வரூபம் என்று பெயர்.

இரண்டாவது, நாம் யார்? நம்முடைய தன்மைகள் என்ன? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் யார்? என்று நமக்கே தெரியவில்லை எனும்போது "நான் சொல்கிறேன், இது என்னுடையது" என்று சொல்வதும் தவறுதானே!

மூன்றாவது விடயம், பரம்பொருளை நாம் அடைவதற்குரிய வழி எது? என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்கு உபாய ஸ்வரூபம் என்று பெயர்.

நான்காவது விடயம், நாம் அடைய வேண்டிய பயன்கள் என்ன என்பதைத் தெரிந்துகொள்வது. இதற்கு புருஷார்த்தம் என்று பெயர்.

ஐந்தாவது, அந்த பயனை அடைய விடாமல் தடுக்கும் தடைகள் எவை என்று தெரிந்து கொள்வது. இது விரோதி ஸ்வரூபம்.

என்ன சார் இது... தகவலில் ஏதாவது கதை சொல்வீர்கள் என்று பார்த்தால் "ஏதோ தத்துவம் பேசிக் கொண்டிருக்கிறீங்க" என்று நீங்கள் நினைக்கலாம்.

இது தெரிந்துகொள்ள வேண்டிய விடயம் தான். காதில் போட்டு வையுங்கள். தக்க காலத்தில் உபயோகப்படும்.

ஒரு நண்பர் ஒருவர், "சார் அடுத்த மாதம் ஒரு கல்யாணம்! போறதா வேண்டாமா என்று குழப்பமாக இருக்கிறது!" என்றார்.

நான் உடனே அர்த்த பஞ்சக உபதேசம் பண்ண ஆரம்பித்தேன். அவர் எல்லாவற்றையும் பொறுமையாக கேட்டுவிட்டு, "சரிசார்... நான் போவது என்று முடிவு செய்து விடடேன்" என்றார். "எப்படி இந்த முடிவுக்கு வந்தீங்க?" என்று கேட்டேன்.

"நீங்க சொன்ன இரண்டாவது பொயின்டைப் புரிந்து கொண்ட பின்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்!" என்றார்.

அதாவது, தன்னைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று சொன்னீங்க. உடனே என்னைப்பற்றி புரிந்து கொண்டேன். நான் யார் என்பது எனக்குத் தெரிந்தது. உடனே போவதுதான் நல்லது என்று முடிவு செய்து விட்டேன்! என்றார். "நீங்க யார்?" என்று கேட்டேன்.

"நான் தான் அந்த கல்யாணத்தில் தாலிகட்ட வேண்டிய மாப்பிள்ளை!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

64

## தியாக பூமி படத்துக்கு தடை



...ஓடி வரும் போது கிருஷ்ண மூர்த்தி மயங்கி விழுகிறான்.

போலி பரசுராமனை ராமநாதனே கட்டுவிட்டு பழியை கிருஷ்ண மூர்த்தி மீது போட்டுவிடுகிறான்.

பயந்து போன கிருஷ்ண மூர்த்தி இலங்கைக்கு தப்பிச் செல்கிறான்.

அங்கு அவனுக்கு புதையல் கிடைக்கிறது. உண்மை பரசுராமன், அவனை சந்திக்கிறான்.

இருவரும் மாறுவேடத்தில் தாயகம் திரும்புகிறார்கள். தனியாக இருக்கும் லீலாவதியை கெடுக்க முயலும் ராமநாதன் பொலிசாரிடம் பிடிபடுகிறான்.

**எம்.கே.ராதா**

இதில் எம்.கே. ராதா கதாநாயகன்; கிருஷ்ணமூர்த்தியாக நடித்தார். எம்.ஆர். ஞானாம்பாள் கதாநாயகி; லீலாவதி வேடம் ஏற்றார்.

வில்லன் ராமநாதனுக்கு நண்பனாக வரும் பொலிஸ் அதிகாரி ரங்கய்யா நாயுடுவாக எம்.ஜி.ஆர். நடித்தார்.

என்.எஸ்.கிருஷ்ணனுக்கு இது இரண்டாவது படம்.

அப்போது மதுரம் ஜோடி சேரவில்லை.

இப்படத்தில் கதாநாயகன்-கதாநாயகியாக நடித்த எம்.கே. ராதாவும் ஞானாம்பாளும் வாழ்க்கையிலும் இணைந்தார்கள்.

இந்தப் படத்துக்கான வசனங்களை எம்.கே.ராதாவின் தந்தை எம்.கந்தசாமி முதலியார் எழுதியிருந்தார்.

பாடல்கள் டி.கே.சுந்தரவாத்தியார். டைரக்ஷன் எல்லிஸ். ஆர். டங்கன்.

தேயிலை தோட்டத்திலே பாரதசேய்கள் சென்று மாய்கிறார் என்ற பாடலும் ராட்டினமே- கதர் பூட்டினமே, அதிக சினமேன் அன்புள்ள நைனா என்ற பாடல்களும் பிரபலமாயின.

**பதிபக்தி**

இதே காலகட்டத்தில் மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியாரின் பதிபக்தி என்ற நாடகம், சினிமாவாக வந்தது. இதன் கதாநாயகன், நாடக உலகில் பிரபலமாக விளங்கிய கே.பி.கேசவன்.

மற்றும் காளி என்.ரத்தினம், கே.கே.பெருமாள், கே.பி.காமாட்சி, எம்.எம்.ராதாபாய், கே.வி.ஜானகி முதலியோர் நடித்தனர்.

இதன் கதையை பாவலர் என்பவர் எழுதியிருந்தார். பி.ஒய்.அல்டேகர் என்பவர் டைரக்ட் செய்திருந்தார்.

சதிலீலாவதி கதையும், பதிபக்தி கதையும் ஒரே மாதிரி இருந்ததால் எது ஒரிஜினல் கதை என்று சர்ச்சை எழுந்தது.

இரண்டுமே ஆங்கில நாவலின் தழுவல் என்று சில பத்திரிகைகள் எழுதின.

இதில் ஒரு ஆச்சரியமான விடயம், சதிலீலாவதி, பதி பக்தி ஆகிய இரண்டு படங்களுமே நன்றாக ஓடின!


சதிலீலாவதி படம் திரைக்கு வந்து வெற்றி பெற்ற பிறகுகூட, சினிமா தொழில் மீது எஸ்.எஸ். வாசனுக்கு ஆர்வம் ஏற்படவில்லை.


பத்திரிகைத் தொழிலே போதும் என்றிருந்தார்.

**தியாக பூமி**

இந்த சமயத்தில், வாசனை டைரக்டர் கே.சுப்பிரமணியம் சந்தித்தார்.

(தொடரும்)





தியாகபூமியில் எஸ்.டி.சுப்புலட்சுமி, பாபநாசம் சிவன், பேபி சரோஜா

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 332

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...பொறுப்புணர்வு என்பது (எந்த ஒரு நிகழ்விற்கும்) தன்னிச்சையாக தக்க பதில் கொடுக்கும் திறமை.

குருமார்கள் உலகம் முழுவதற்குமான பொறுப்பை எடுத்துக் கொள்கிறார்கள்!

எவ்வாறு? ஏனெனில் அவர்கள் எப்பொழுதும் தன்னிச்சையாக்வும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் பிரவாகத்துடன் இசைந்து சென்று கொண்டும் இருக்கிறார்கள்!

பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் வெறுமனே இசைந்து செல்லும் பொழுது பிரபஞ்ச இருப்புத் தன்மையே எல்லாவற்றையும் ஒரு இயல்பான முறையில் நிகழச் செய்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும்!

நீங்கள் நமது ஆசிரமத்திலுள்ள ஆசிரமவாசிகளிடம் பேசினீர்களானால் அவர்கள் என்னுடனான அவர்களது அனுபவத்தைச் சொல்வார்கள்.

விடயங்களை முன்பே தெரிந்து கொள்வதும் என்னுடைய வேகத்துக்கு ஈடு கொடுத்து நடந்து கொள்வதும் அவர்களுக்கு மிகவும் கடினமான ஒரு காரியம்.



ஏனெனில் நான் எப்பொழுதும் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் பிரவகித்துக் கொண்டிருக்கிறேன்.

காலப்போக்கில் அவர்கள் செயற்படுவதற்கு போதுமான கால அவகாசம் தேவை என்னும் கருத்தையே விட்டு விட கற்றுக்கொள்கிறார்கள்; பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எதற்கும் எப்பொழுதும் தயாராக இருக்கக் கற்றுக் கொள்கிறார்கள்.

ஆசிரமத்தில் விடயங்கள் இவ்வாறுதான் நடைபெறுகிறது.

எதுவும் எந்த முன்னேற்பாடும் இன்றி அந்த க்ஷணத்தில் தீர்மானித்துச் செய்யப்படுகிறது.

வெளியிலிருந்து பார்க்கும் ஒருவர் ஆச்சிரமத்தில் நிகழும் இந்த ஒழுங்கான குழப்பத்தை கண்டு பேராச்சரியம் அடைய நேரிடும்.

அது பூஜையோ அல்லது வேறெதாவது நிகழ்ச்சியோ நான் ஒரு சில மணி நேரங்களுக்கு முன்பு தான் சொல்வேன். எல்லாமே செய்யப்பட்டு விடும். ஒரு சில மணி நேரங்களுக்கு முன்பு மட்டுமே சொல்வதற்குக் காரணம் நான் எந்த விதமான சட்டமோ திட்டமோ இல்லாமல் தொடர்ந்து பிரவகித்துக் கொண்டு இருப்பதுதான்.

நாம் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் இசைந்து செல்லக் கற்றுக்கொண்டு விட்டோமானால் எந்தவித கவலையுமின்றி வாழ முடியும்.

ஆனால், எப்படியோ நான் பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் போராடும் கலையில் தேர்ச்சி பெற்றுவிட்டோம்.

அதனால் துன்பப்படுகிறோம். நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் பிரவாகத்துடன் உங்களை இசைவாக வைத்துக்கொண்டீர்களானால் ஒவ்வொரு கணமும் நீங்கள் கவனித்துக் கொள்ளப்படுகிறீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

தமிழ் மாணவர்கள் தாதிய சேவைக்கு முன்வராமையால்

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் தாதியர் பற்றாக்குறை காணப்படுவதாக யாழ்.தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர் திருமதி. வல்லிபுரநாதன் ரயூலாதேவி தெரிவித்துள்ளார்.**

இப்பற்றாக்குறைக்கு தமிழ் மாணவர்கள் தாதிய சேவைக்கு முன் வராமையே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஆயிரத்து 500 வரையிலான தாதியர்கள் தேவை. ஆனால் தற்போது 450 தாதியர்களே சேவையிலுள்ளனர்.

இந்த 450 பேரே 1500 பேரிற்கு சமமான சேவையினை வழங்கி வருகின்றனர். இதற்கு எமது மாணவர்கள் தாதிய தொழிலில் ஆர்வம் காட்டாமையே காரணமாகும்.

அடுத்த வருட வகுப்பினருக்கான விண்ணப்பம் கோரல் நடைபெற்று முடிந்துள்ளது.

இதில் 80 பேரே விண்ணப்பம் செய்துள்ளனர். இவர்களில் எத்தனை பேர் தகுதியானவர்கள் என தெரியவில்லை.

ஆகையினால் அடுத்தவருடமும் இந்த தாதியர் பற்றாக் குறை யாழ். போதனா வைத்தியசாலையில் தொடரத்தான் போகின்றது.

எமது மாணவர்கள் ஏதோ காரணத்திற்காக தாதிய சேவையினை புறந்தள்ளுவதாக தோன்றுகின்றது

உலகில் உன்னதமான தொழிலாக உள்ள இந்த சேவையினை எமது மாணவர்கள் ஆற்ற முன்வரல் வேண்டும்.

தாதிய சேவையின் மகத்துவத்தினை விளங்குவதற்கு யாழ்.மாவட்ட பாடசாலைகளில் உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்குகளை முன்னெடுக்கதிட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

# நீர், மின்சாரம், தொலைபேசி கட்டணங்கள் அதிகரிக்காது

## நிதி அமைச்சு அறிவிப்பு

வற் வரி திருத்தத்தால் நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கட்டணங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வரை 11 வீதம் எனும் தனி பெறுமானமாக அறவிடப்பட்ட வற் வரி வரவு செலவுத் திட்டத்தின் பின்னர், 0 வீதம், 8 வீதம், 12.5 வீதம் என மூன்று பிரிவுகளாக அறவிடப்படவுள்ளது.

அதற்கமைய 11 வீதம் வற் வரியின் கீழ் இருந்த மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், வற் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதோடு, பொருட்களின் விலைகள் யாவும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் குறைக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அரசாங்கத்தின் தலையீட்டின் கீழ் இயங்கும் அத்தியாவசிய சேவைகளான நீர் வழங்கல், மின்சாரம், தொலை தொடர்பு சேவைகளும் இவ்வாறு வற் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எனவே, சேவை வழங்குதல் தொடர்பில், நுகர்வோர் மீது எவ்வித வற் வரியும் அறிவிடப்பட மாட்டாது எனவும் இதனால் எவ்வித கட்டண அதிகரிப்பும் இடம் பெறாது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் தேசிய உற்பத்திகள் தொடர்பில் இதுவரை அறவிடப்பட்டு வந்த 11வீத வற்வரி, 8 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதனால் இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களின் விலைகளும் எதிர் வரும் நாட்களில் குறைவடையும் என குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ-7-10)

# மாணவர்கள் - ஆசிரியர்கள் - பெற்றோர் தொடர்பு இணையத்தளசேவை கொக்குவில் இந்துவில் ஆரம்பம்

பாடாலைக்கு தமது பிள்ளைகள் வருகை தந்தவுடன் அது தொடர்பாக பெற்றோருக்கு தெரியப்படுத்தும் இணையத்தள சேவைகள் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி இணையத்தளத்தின் ஊடாக பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலையைச் சென்றடைந்துவிட்டார்களா என்பதை உடனடியாக அறிந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு மாணவர்களும் தமது வரவை பாடசாலையில் பதிவு செய்தவுடன் பெற்றோர் தமது கையடக்கத் தொலைபேசியில் குறுஞ் செய்தியைப் பெற்றுக் கொள்வர்.

அத்துடன் இணையத்தளத்தில் மாணவர்களின் முழு விபரங்கள் மற்றும் அவர்களது செயற்பாடுகள் தொடர்பாக பதிவேற்றம் செய்யப்படும். இதனைப்பெற்றோர்பார்வையிட முடியும். இணையத்தள முகவரி பெற்றோருக்கு வழங்கப்படும்.

இந்த நடைமுறை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது என பாடசாலை அதிபர் எஸ்.ஞானகாந்தன் தெரிவித்தார்.

இந்த நடைமுறை மூலம் பெற்றோர் வகுப்பாசிரியருடன் தொடர்பை ஏற்படுத்தி தமது பிள்ளைகளின் செயற்பாடுகள் தொடர்பாக விசாரிக்க முடியும். அத்துடன் வகுப்பாசிரியர் பெற்றோரின் கேள்விகளுக்கு இணையத்தளமூடாக பதில்களை வழங்க முடியும் என்றும் அதிபர் மேலும் தெரிவித்தார். மேற்படி இணையத்தள சேவைகள் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 556

சரவணன்




விஜயகுமார்




துவாரகன்




பாபு




அழகேஸ்



விதுஷாயினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் கவனம்

## பட்ஜெட் முன்மொழிவு குறித்து மலிக் கருத்து

அரச மற்றும் தனியார் துறை இணைந்து எதிர்கால அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த இம்முறை வரவு செலவு திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் சர்வதேச வர்த்தக விவகார அமைச்சர் மலிக சமரவிக்கிரம தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் வரவுசெலவு திட்ட இரண்டாம் வாசிப்பின் மீதான இரண்டாவது நாள் விவாதத்தில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

வரவுசெலவுத் திட்டம்- 2016 முன்மொழிவில் உலக வர்த்தக அடிப்படையினுள் சிறந்த அடித்தளம் போடப்பட்டுள்ளது.

கடன் சுமை அதிகரித்துள்ளமையினால் தற்போது மற்றும் எதிர்கால மக்களின் சுமை அதிகரித்துள்ளது. சமூக ஒத்துழைப்பு சமூக அபிவிருத்திக்கு அவசியம். கூட்டமைப்பை ஏற்படுத்துவதனூடாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்,

மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதே எமது கொள்கை. தனியார் துறையை மேம்படுத்துவது தொடர்பில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கிராமிய பொருளாதாரத்தை வளம் மிக்கதாக மாற்றியமைப்பதற்கு இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ளது. ஏற்றுமதியை விரிவுபடுத்துவதனூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

வறிய மக்கள் தொடர்பில் இம்முறை வரவு செலவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதனூடாக இடைக்கால கொள்கைகளை வகுக்க முடியும்.

செலவு முகாமைத்துவம் அவசியம். அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதனூடாக வர்த்தகத்துறையை மேம்படுத்த முடியும்.

இந்தியாவுடன் வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

தகவல் தொழில்நுட்பம் கைத்தொழிலுக்கு அவசியம். மனிதவள அபிவிருத்தியில் மிக சிறிய விடயத்தையே நாம் செய்துள்ளோம்.

உற்பத்தி திறனில் மலேசியா, தாய்லாந்து போன்ற கிராமிய ஆட்பலம் இல்லை. பல்கலைக்கழக, தொழில்நுட்ப நிறுவனம் என்பன நவீனமயப்படுத்தப்பட வேண்டும்.

கல்வியின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். நாட்டை அபிவிருத்திக்காக ஒன்றிணைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# இலங்கைப் பெண் கொலை; குவைத் இளைஞர்கள் கைது!

குவைத் நாட்டில் வீட்டுப் பணிப் பெண்ணாக தொழில் புரிந்து வந்த இலங்கை பெண் கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அந்நாட்டு பொலிஸார் கைதுசெய்த இரண்டு இளைஞர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை பெண் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பெண் தொழில் புரிந்த வீட்டின் உரிமையாளரின் இரண்டு புதல்வர்கள் கைது செய்யப்பட்டனர.

இவர்கள் கொலை குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதால், இறந்த பெண்ணுக்காக பெருந்தொகை பணத்தை இழப்பீடாக பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனை தெரிவித்தார். (இ-7)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 160 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 650 | 550 | 700-800 | 600 | 600 |
| தக்காளி | 160 | 140 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 160 | 160 | 200 | 200 | 150 |
| கரட் | 140 | 100 | 180-400 | 200 | 120 |
| பூசணி | 50 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 160 | 120 | 160 | 120 | 140 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 100 | 120 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 160 | 130 | 160 | 140 | 150 |
| பாகற்காய் | 300 | 250 | 240-300 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 160 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 300 | 180 | 300 | 250 | 250 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | — | 160 | 80 |
| கறிமிளகாய் | 450 | 350 | 800 | 320 | 200 |
| முருங்கைக்காய் | 350 | — | 600 | 320 | 500 |
| போஞ்சி | 350 | 250 | 280 | 280 | 200 |
| கத்தரிதம்புள்ள | 150 | 140 | — | 140 | — |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 250 | 300 | 250-400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 250 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | — | 80 | 160 | 80 |
| பொன்னாங்காணி | 30 | — | 40 | 20 | 40 |
| வல்லாரை | 10 | — | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 60-100 | 40 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகள் இயக்கம் உதயம் 38

### ஐந்தே நிமிடத்தில் ஐந்து லட்சம்

*1976 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி.*

வங்கி திறந்ததும் பிரபாகரன் அவருடைய நண்பர்களுடன் உள்ளே நுழைந்தார். வங்கி அதிகாரிகளைத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினார். எல்லோரும் பயந்து போய் இரண்டு கைகளையும் தூக்கினார்கள். அவர்கள் அனைவரையும் மனேஜர் அறைக்குள் தள்ளி கதவைத் தாழிட்டார்.

வங்கியில் இருந்த ஐந்து லட்சம் ரூபாய் ரொக்கத்தையும் இரண்டு லட்சம் ரூபாய் மதிப்புள்ள நகைகளையும் பிரபாகரனும் அவர் நண்பர்களும் அள்ளி மூட்டையாகக் கட்டினார்கள். மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றார்கள்.

ஐந்தே நிமிடத்தில் இவ்வளவும் நடந்துவிட்டது.

பிரபாகரன் இந்தப் பணத்தில் ஒரு பகுதியை வல்வெட்டித்துறையில் உள்ள கோவிலுக்கு வழங்கி ஏழைகளுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்தார். மீதிப்பணத்தில் துப்பாக்கிகளும் குண்டுகளும் ரகசியமாக வாங்கப்பட்டன.

தமிழ் ஈழம் அடைய வேண்டுமானால் சிறிய இராணுவக் குழுவால் முடியாது. சிங்கள இராணுவத்தை எதிர்த்துப் போராடக்கூடிய அளவுக்குப் பெரிய இராணுவத்தை உருவாக்க வேண்டும் என்று பிரபாகரன் எண்ணினார்.

பலநாள் சிந்தனைக்குப் பிறகு அவர் மனதில் ஒரு திட்டம் உருவாயிற்று.

புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் இயக்கம் நடத்தி வந்த பிரபாகரன், அதை ஒரு பெரிய இராணுவமாக உருவாக்க முடிவெடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை (எல்.டி.டி.ஈ) 1976 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி தொடங்கினார்.

இந்த அமைப்புக்கான சின்னத்தையும் அவர் வடிவமைத்திருந்தார். வட்டத்தின் நடுவே கர்ஜனை செய்யும் புலியின் தலை. பின்னணியில் இரு துப்பாக்கிகள். தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற எழுத்துக்கு மேலே, வட்டத்தைச் சுற்றிலும் துப்பாக்கித் தோட்டாக்கள். இதுதான் விடுதலைப்புலிகள் அமைப்பின் சின்னம்.

### நிர்வாகக்குழு

அமைப்பை நிர்வகிக்க ஐந்து பேர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

இராணுவத் தளபதி தலைவர் ஆகிய பொறுப்புகளைப் பிரபாகரன் ஏற்றார்.

அவரைத் தவிர வெல்லக்


பிரபாகரன்

கிளி, நாகராஜா, அய்யர், விஸ்வேஸ்வரன் ஆகியோர் முதலாவது மத்தியக் குழுவில் இடம்பெற்றார்.

விடுதலைப்புலிகளுக்கு என்று கடுமையான சட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவர்கள் புகை பிடிக்கக் கூடாது; மது அருந்தக்கூடாது.

குடும்பத்துடனான உறவை முறித்துக்கொள்ள வேண்டும். இயக்கத்தை விட்டு வெளியேறுகிறவர்கள் வேறு இயக்கங்களில் சேரக்கூடாது. புதிய இயக்கம் தொடங்கக்கூடாது.

இந்தக் காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களுக்குத் தனி நாடு பெறவேண்டும் என்ற குறிக்கோளுடன் பல்வேறு போராளிக்குழுக்கள் இருந்தன. அவற்றிலிருந்து மாறுபட்டு மிகுந்த கட்டுப்பாட்டுடனும் ஒழுக்க நெறிகளுடனும் விடுதலைப்புலிகள் இயக்கம் செயற்பட வேண்டும் என்று பிரபாகரன் கருதினார்.

பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளை வெற்றிலை பாக்கு கூட போடாதவர். சிறந்த ஒழுக்கத்தைத் தன் தந்தையிடம் இருந்துதான் கற்றதாக பிற்காலத்தில் அளித்த பேட்டிகளில் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

### செயல்திட்டம்

தமிழ் ஈழத்தை அடைய ஒரு செயல் திட்டத்தை பிரபாகரன் வகுத்தார். அது பின்வருமாறு:-

காட்டிக் கொடுக்கும் துரோகிகளை ஒழிக்க வேண்டும். பொலிஸுக்கு உளவு சொல்பவர்களை அழிப்பதன் மூலம் தமது திட்டங்களையும் வியூகங்களையும் பொலிஸாரும் இராணுவமும் அறிந்துகொள்ள முடியாதபடி தடுக்கலாம். இதுவே தமது வெற்றிக்குத் துணை நிற்கும்.

ஆயுதப் புரட்சி நடத்தி, இலங்கை அரசாங்கத்தைச் செயற்பட முடியாதபடி முடங்கச் செய்ய வேண்டும்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்குப் பகுதிகளை ஒருங்கிணைத்து தமிழீழம் அமைப்பதற்கு முதல் படியாக அந்தப் பகுதிகளில் உள்ள சிங்கள இராணுவ முகாம்களை அழிக்க வேண்டும். இந்தப்பகுதிகளை விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும்.

தமிழ் ஈழத்துக்கு முழு சுதந்திரம் பெற்று அங்கு சோசலிச ஜனநாயகக் குடியரசை நிறுவவேண்டும்.

மேற்கண்டவாறு செயல் திட்டத்தை வகுத்தார் பிரபாகரன்.


உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு முதல்நாள்
வே.பிரபாகரனுடன் தியாகி லெப்.கேணல்.திலீபன்- அலுவலகத்தில்

(தொடரும்)

# கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை-2015
# மாதிரி வினாத்தாள் மேல்மாகாணம்

பாடம்:-விஞ்ஞானம் | பகுதி II | நேரம்:- 3 மணித்தியாலம்

### பகுதி-B கட்டுரை வினாக்கள்

உயிரியல், இரசாயனவியல்,பௌதீகவியல் ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு வினாவைத் தெரிந்தெடுத்து மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

### உயிரியல்

05.A. உயிரினங்களின் தொடர்ச்சியான நிலவுகைக்கு இனப்பெருக்கம் அவசியமாகும்.

I. தாவரங்களில் நடைபெறும் பதிய முறை இனப்பெருக்கம் பற்றி குறிப்பிடுக.

II. தாவரங்களில் பதியமுறை இனப்பெருக்கத்தில் பயன்படுத்தப்படும் இரு பதியப் பகுதிகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் வீதம் தருக.

III. பதியமுறை இனப்பெருக்கத்தில் பெறப்படும் எச்சங்கள் தாய்த்தாவரத்தை ஒத்திருப் பதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

IV. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களை விரைவாக இனம்பெருக்குவதற்கு மிகவும் பொருத்தமான முறையாக கருதப்படும் இலிங்கமில் முறை இனப்பெருக்கம் எது?

B.இலிங்கமுறை இனப்பெருக்க செயன்முறையில் மகரந்தசேர்க்கை,கருக்கட்டல் என்பன முக்கிய செயன்முறையாகும்.

I..பூவொன்றின் ஆணகத்திற்குரிய பகுதிகளை வரைந் அதன் பகுதிகளை குறித்துக் காட்டுக.

II.கருக்கட்டல்என்றால் என்ன?

III.மகரந்த சேர்க்கையின் பின்னர் பூவொன்றில் நடைபெறும் இரு மாற்றங்களைக் குறிப்பிடுக.

IV.பழங்களினதும் வித்துக்களினதும் பரம்பலின் அவசியத்தைக் குறிப்பிடுக.

C.பெண் இனப்பெருக்க தொகுதியானது கருக்கட்டல் தொடக்கம் முதிர்மூலவுரு விருத்தி டையும் வரை சிறப்பாக இசைவாக்கப்பட்டுள்ளது.

I.பெண் இனப்பெருக்க தொகுதியில் கருக்கட்டல் நடைபெறும் பகுதி எதுவெனக் குறிப்பிடுக.

II. சூலகத்தினால் சுரக்கப்படும் ஓமோனின் பெயரைக்குறிப்பிட்டு , அதனால் நிறைவேற் றப்படும் தொழிலைக்குறிப்பிடுக.

III.பின்வரும் செயன்முறைகளில் நடைபெறும் கலப்பிரிவு வகைகளை தனித்தனியே குறிப்பிடுக.


a.புணரிகளில் உருவாகுதல்

b. முதிர்மூலவுரு விருத்தி

IV. இலிங்க நிறமூர்த்தத்தில் ஏற்படும் பாதிப்பு காரணமாக கடத்தப்படும் பாரம்பரிய நோயைப் பெயரிடுக.

V.நெருங்கிய இரத்த உறவினரிடையே நடைபெறும் திருமணம் பொருத்தமானது அல்ல. இக்கூற்றினை விளக்குக.

06




A. மனித இதயத்தின் புறத்தோற்றம் உருவில் காட்டப்பட்டுள்ளது.

I உருவில் A,B,C,D ஆகிய எழுத்துக்களினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை எழுதுக.

II. தரப்பட்டுள்ள குருதிக்கலன்களில் குருதி அமுக்கம் கூடியகுருதிக் கலன் எதுவெனக் குறிப்பிடுக.

III. குருதிக்கலன்கள் B,D இற்கிடையிலான கட்டமைப்பு வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

IV.குருதிக்கலன்கள் A,E இனூடாக பாயும் குருதியின் கட்டமைப்பில காணப்படும் வேறுபாடுகளை எழுதுக?

V.பின்வரும் வால்வுகள் இதயத்தின் எந்த அறைகளுக்கிடையில் காணப்படும் எனக்குறிப்பிடுக

முக்கூர் வால்வு இருகூர் வால்லு

VI.குருதிக்கலன்களின் சுவரில் கொலஸ்ரோல் படிவடைவதால் உண்டாகும் நோய் நிலைமை எது?

B.உயிர் இழையமொன்றினூடாக பதார்த்தங்கள் உட்செல்லும் மூன்று முறைகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

P- சக்தியைப் பயன்படுத்தி செறிவு குறைந்த இடத்திலிருந்து செறிவுகூடிய இடத்திற்கு பதார்த்தங்கள் கொண்டு செல்லல் (செறிவுப் படித்திறனுக்கு எதிராக)

Q- செறிவு கூடிய இடத்திலிருந்து செறிவு குறைந்த இடத்திற்கு பதார்த்தங்கள் செல்லுதல்


R-நீர் மூலக்கூறுகள் செறிவு கூடிய இடத்திலிருந்து நீர்மூலக்கூறுகள் செறிவுகுறைந்த இடத்திற்கு பங்கு புகவிடும் மென்சவ்வினூடாக செல்லுதல்

I.a) P,Q,R ஆகிய எழுத்துக்களினால் காட்டப்பட்டுள்ள செயன்முறைகளை இனங்கண்டு எழுதுக.

b)தாவரங்களில் P செயன்முறை நடைபெறும் சந்தர்ப்பம் ஒன்று தருக?

II.வேரினுள் செல்லும் கனியுப்புடன் கூடிய கரைசல் தாவரத்தின் உச்சிப்பகுதி வரை கொண்டு செல்லப்படும் செயற்பாடு எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?

III.மேற்படி செயற்பாடு நடைபெறும் தாவர இழையப்பகுதியொன்றை உரு காட்டுகிறது.




a.A,B கல வகைகளை இனங்காண்க?

b. மேலே கூறிய தொழிற்பாடு தவிர இவ் இழையத்தினால் ஆற்றப்படும் வேறொரு தொழிலைக்குறிப்பிடுக?

IV.இலைகளிலிருந்து நீர் இரு முறைகளில் சூழலிற்கு இழக்கப்படுகின்றது. இரு வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இலையிலிருந்து இழக்கப்பட்ட நீர் ஆவியாக்கப்பட்ட போது பெறப்பட்ட அவதானங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நீர் மாதிரி | அவதானிப்பு |
|---|---|
| A | எந்தவொரு பதார்த்தமும் மீதியாக பெறப்படவில்லை |
| B | மிகச் சிறிதளவில் வெண்ணிற திண்ம மீதி காணப்பட்டது. |

a.A,Bஆகிய நீர் மாதிரிகள் தாவரத்திலிருந்து இழக்கப்பட்ட முறைகளையும் குறிப்பிடுக?

b. ஒரு மாணவன் நீர்மாதிரி A பெறப்பட்ட முறை B பெறப்பட்ட முறையை விட தாவரத்திற்கு நன்மையானது என கூறினான். இதனை விளக்குக?

### இரசாயனவியல்

07.A கரைப்பான் A,B இல் அயடீன் கரையும் விதம் தொடர்பாக பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது

* கரைப்பான் Aஇல் அயடீன் அரிதாக கரையும் தன்மையுடையது
* கரைப்பான் B இல் அயடீன் நன்றாக கரைவதுடன் ஊதா நிறக்கரைசலைத்தந்தது
* கரைப்பான் A,B ஒன்றாக கலக்கப்பட்ட போது ஒன்றுடன் ஒன்று கலக்காது இரு படைகளாக வேறுபட்டு காணப்பட்டது

I. கரைப்பான் A,B இல் முனைவுத்தன்மை கொண்டது எது?

II.கரைப்பான் Bஇல் அயடீன் நன்றாக கரைந்து ஏகவினக் கரைசலைத் தருகின்ற மைக்கான காரணத்தை தருக

III.கரைப்பான் Aஇல் அயடீன் பளிங்குகளின் கரைதிறனை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை ஒன்றை எழுதுக?

IV. கரைப்பான் Bஇன் 50 $cm^3$ எடுக்கப்பட்டு அதில் 2g அயடீன் கரைக்கப்பட்டு கரைசலாக்கப்பட்டது. இக்கரைசலின் அமைப்பை W/V இல் தருக?

B. இல்ங்கையில் கறுவா எண்ணெய் பிரித்தெடுக்கும் முறையை காட்டும் பாச்சற்கோட் டுப்படம் இங்கு காட்டப்படடுள்ளது.




I. கறுவா எண்ணெய் பிரித்தெடுக்கப்படும்இம் முறை எப் பெயரால் அழைக்கப்படும்?

II. ஆய்வு கூடத்தில் கறுவா எண்ணெய், நீராவி கலவையை ஒடுக்கி பெறுவதற்கு பயன்படும் உபகரணம் எது?

III. கறுவா எண்ணெய், நீர் இரு படைகளாக காணப்படுவதற்கான காரணத்தை எழுதுக?

III. கறுவா எண்ணெய்,நீர் கலவையிலிருந்து கறுவா எண்ணெய் எவ்வாறு வேறுபடுத் தப்படும் எனக் குறிப்பிடுக?

V. அரோமற்றிக் எண்ணெய்கள் பிரித்தெடுக்கப்படும் வேறு முறையொன்றை குறிப்பிடுக?

C. பண்படுத்தா எண்ணெய் பல கூறுகளின் கலவை ஆகும். பண்படுத்தா எண்ணெய் பிரித்தெடுப்பில் பெறப்படும் ஒரு கூறு எக்சேன் ($C_6H_{14}$) ஆகும்.

I.எக்சேன் பூரண தகனமடைவதற்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக.

II.ஐதரோகாபன் பூரண தகனம், குறை தகனத்திற்குள்ளாகும் போது அவதானிக்கக்கூடிய இருவேறுபாடுகளை எழுதுக.

III.வாயு அடுப்பு ஒன்றின் வினைத்திறனை அதிகரிக்க மேற்கொள்ளக்கூடிய நடைமுறை ஒன்றை எழுதுக.

D.மண்பாறைகள் வானிலையாலழிதலின் மூலம் பெறப்படும் கனியுப்பு நிறைந்த உயிரியல் இரசாயன மற்றும் பௌதீக மாற்றங்கள் நடைபெறும் ஒரு தொகுதியாகும்.


I.பாறைகள் வானிலையாலழிதல் என்பதனை சுருக்கமாக விளக்குக.

II.மண்ணில் உள்ள உயிரற்பான அசேதனக் கூறு எதுவாகும்.

III.தொடர்ச்சியாகப் பயிரிடுவதால் மண்ணின் வளம் குறைவதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

IV.பாறைகள் வானிலையாலழிதலால் தோன்றுவதும் நீரின் வன்மைக்கு காரணமா னதுமான பதார்த்தம் எது?

08.A.நைதரசன் அணுவும் ஐதரசன் அணுவும் பிணைப்பிற்குட்பட்டு உருவாகும் அமோனிய வாயுவின் புள்ளி- புள்ளடி கட்டமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது.




I.N-H பிணைப்பு மூன்றும் உருவானபின் N அணு வேறு எந்த அணுவின் இலத்திரன் நிலை அமைப்பைப் பெறும்.

II.நைதரசன் அணுவில் பிணைப்பிற்குட்படாத சோடியான இலத்திரன்கள் எவ்வாறு அழைக்கப்படும்.

III.அமோனியா நீரில் நன்கு கரையும் தன்மையை இரசாயனப் பிணைப்பின் தன்மையின் அடிப்படையில் விளக்குக.

IV.மேற்படி கரைசலில் நீல, சிவப்பு பாசிச்சாயத்தாளை தனித்தனியாக இட்டு அவதானித்த போது பெறப்படும் அவதானம் யாது எனக் குறிப்பிடுக.

V. திரவ அமோனியா மின் கடத்தாத போதும் அமோனியா நீர்க்கரைசலினூடாக மின் கடத்தப்படுகின்றமைக்கான காரணத்தை விளக்குக.

B.ஆய்வு கூடத்தில் 0.5 $moldm^{-3}$ NaOH கரைசலின் 500 $cm^3$ தயாரிக்கவேண்டிய தேவையேற்பட்டது.

I.மேற்படி கரைசலைத் தயாரிக்க தேவையான NaOH இன் திணிவைக்காண்க

II.மேற்படி கரைசலைத் தயாரிக்கும்போது பின்பற்றவேண்டிய நடைமுறைகளைக் குறிப்பிடுக.

(தொடரும்)




# சின்னக் குருவியின் பெரிய பெரிய பொய்கள்

..."மைனாவே! இதோ பார்! இந்த நீரில் மலையின் அச்சு தெரிகிறது அல்லவா?" எனக் கேட்டது சின்னக் குருவி.

"ஆமாம், தெரிகிறது" எனப் பதில் சொன்னது மைனா.

"இப்போது பார்" எனத் தன் மெலலிய அலகால் கொஞ்சம் கொஞ்சமாக நீரைக் குடித்துக் கொண்டிருந்தது சின்னக் குருவி.

நேரம் ஆக ஆக சூரியன் மேலே போனது. .மேலேச் செல்ல செல்ல மலையின் நிழல் நதியை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது.

ஒரு மணி நேரத்துக்கு பிறகு, "மைனாவே! பார்த்தாயா? நான் நீரைக் குடிக்க குடிக்க மலையின் நிழல் குறைந்து கொண்டே வந்தது. அந்தக் குறைந்த மலையின் நிழல் என் வயிற்றுக்குள் சென்று விட்டது" என்றது சின்னக் குருவி.

இப்போது "ஹா...! ஹா...!" என்று சிரித்தது மைனா. "என்ன மைனாவே! ஏன் சிரிக்கிறாய்?" எனக் கேட்டது சின்னக் குருவி

"என்ன சொல்வது குருவி நண்பனே! மலை அதன் இடத்தில் தான் இருக்கிறது. நீ தாகத்துக்கு தண்ணீர் குடித்தாய். சூரியனின் ஒளியால் அதன் நிழல் நீரில் படிந்திருக்கிறது. சூரியன் தன் வேலையைச் சரியாகச் செய்வதால், அதன் ஒளி மேலே செல்ல செல்ல மலையின் நிழலும் குறைந்தது.



. அப்படியானால் சூரியன் தானே மலையின் நிழலை முழுங்கி இருக்க முடியும்? நீ முழுங்கி விட்டதாகத் தவறாக நினைத்துக்கொண்டு, பட்டப் பெயரை வேறு சூட்டிக் கொண் டாயே..." என விளக்கியது மைனா.

"ஓ.. நான்தான் தவறாகப் புரிந்து கொண்டேனா?" எனச் சொல்லி தலை கவிழ்ந்தது சின்னக் குருவி.

"குருவி நண்பனே! கவலைப் படாதே. நாம் நம் கடமையில் சரியாக இருந்தால், அதுவே சிறப்புத்தான். இது எல்லோருக்கும் இயல்பாக நடக்கக்கூடிய தவறுதான்" என்றது மைனா.

"மைனாவே! என் தவறை எனக்குப் புரிய வைத்ததற்கு நன்றி" என்றது சின்னக் குருவி.

"சரி! வா... நண்பனே... இருவரும் இணைந்தே உணவுத் தேடிப் பறப்போம்" என அழைத்தது மைனா.

மிகுந்த உற்சாகத்தோடு, வானில் பறக்க ஆரம்பித்தது சின்னக் குருவி.

"குழந்தைகளே, உங்கள் வீட்டின் அருகில் உள்ள மரங்களில் பாருங்கள்... அந்த சின்னக் குருவி ஏதும் வந்திருக்கிறதா என்று. முடிந்தால் உங்கள் வீட்டின் வெளிப்புறத்தில் குருவிகளுக்காகத் தானியங்களையும், நீரையும் வையுங்கள்."

(முற்றும்).




- 1778 - அவாயித் தீவுகளில் அமைந்துள்ள மாவுய் தீவில் இறங்கிய முதல் ஐரோப்பியன் கப்டன் ஜேம்ஸ் குக்.
- 1863 - அரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கன் நவம்பர் 26 ஐ தேசிய நன்றியறிதல் நாளாக அறிவித்து, ஆண்டுதோறும் நவம்பர் மாத கடைசி வியாழக்கிழமை கொண்டாடுமாறு பணித்தார். 1941 முதல் இது நவம்பர் மாதத்தில் நான்காவது வியாழக்கிழமை கொண்டாடப்படுகிறது.
- 1957 - சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப் பிரிவுகளைத் தீயிடும் போராட்டத்தை தந்தை பெரியார் ஆரம்பித்து வைத்தார்.
- 1965 - சகாரா பாலைவனத்தில் பிரான்ஸ் ஆஸ்டெரிக்ஸ்-1 என்ற தனது முதலாவது செயற்கைக் கோளை விண்ணுக்கு அனுப்பியது.
- 1970 - குவாதலூப்பேயின் பாஸ்தெர் நகரில் ஒரு நிமிடத்தில் பெய்த 1.5 அங்குல மழையே உலகில் இதுவரை பதியப்பட்ட மிகப்பெரும் மழைவீழ்ச்சி ஆகும்.
- 1983 - லண்டன் ஹீத்ரோ விமானநிலைய பொதிகள் பாதுகாப்பு அறையில் இருந்து +26 மில்லியன் பெறுமதியான 6,800 தங்கப் பாளங்கள் களவாடப்பட்டன.
- 2001 - நேபாளத்தில் மன்னர் கயனேந்திரா அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார்.
- 2002 - இந்தியாவின் நாகாலாந்து மாநிலத்தில் தனிநாடு கோரும் அமைப்புக்களின் மீதான தடை நீக்கப்பட்டது.
- 2008 - 26 நவம்பர் 2008 மும்பாய் தாக்குதல்கள்
- 2013 - இலங்கையில் பயணிகள் காசோலை வழங்கும் நடைமுறை முடிவுக்கு வந்தது.

**பிறப்புக்கள்**

- 1857 - பேர்டினணட் டி சோசர், சுவீடன் மொழியியலாளர் (இ. 1913)
- 1876 - அப்துல்லாஹ் பின் அப்துல் அசீஸ், சவூதி அரேபிய மன்னர் (இ. 1953)
- 1921 - வர்கீஸ் குரியன், இந்திய பொறியாளர், தொழிலதிபர் (இ. 2012)
- 1936 - லலித் அத்துலத்முதலி, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் (இ. 1993)
- 1939 - அப்துல்லா அகமது படாவி, மலேசியப் பிரதமர்
- 1948 - எலிசபெத் பிளாக்பர்ன், நோபல் பரிசு பெற்றவர்
- 1948 - வி. கே. பஞ்சமூர்த்தி, ஈழத்தின் நாதசுவரக் கலைஞர்
- **1954 - வேலுப்பிள்ளை பிரபாகரன், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் (இ.2009)**
- 1972 - அர்ஜுன் ராம்பால், இந்திய நடிகர்
- 1983 - கிரிச் ஹக்ஸ், ஃபேஸ்புக்கை கண்டுபிடித்தவர்

**இறப்புகள்**

- 399 - சிரீசியஸ் (திருத்தந்தை) (பி. 334)
- 1504 - முதலாம் இசபெல்லா (பி. 1451)
- 1883 - சோஜோர்னர் ட்ரூத், அமெரிக்க செயற்திறனாளர் (பி. 1797)
- 2006 - ஜி. வரலட்சுமி, தமிழ்த் திரைப்பட நடிகை
- 2014 - எஸ். பொன்னுத்துரை, ஈழத்து எழுத்தாளர் (பி. 1932)

## வேலுப்பிள்ளை பிரபாகரன்



தமிழீழத்தின் தேசியத் தலைவர் என அழைக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி திருவேங்கடம் வேலுப்பிள்ளை, பார்வதி அம்மாள் ஆகியோருக்கு மகனாக யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறையில் பிறந்தார்.

இவர் 1972 ஆம் ஆண்டு தனது 18 ஆவது வயதில் புதிய தமிழ்ப் புலிகள் எனும் அமைப்பை ஆரம்பித்தார். தமிழர் விடுதலைக்கான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்த இவர் 1976 ஆம் ஆண்டு புதிய தமிழ்ப் புலிகள் என்ற இயக்கத்தின் பெயரை தமிழீழ விடுதலைப்புலிகள் என மாற்றம் செய்து மரபுவழி ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

இவர் மனைவி மதிவதனியாவார். இவரது பிள்ளைகள் மூவர்- சாள்ஸ் அன்ரனி, துவாரகா, பாலச்சந்திரன் ஆவார்கள்.

சர்வதேச நாடுகள் பலவற்றில் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட இவர் 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மே மாதம் 18 ஆம் திகதி கொல்லப்பட்டார் என இலங்கை அரசாங்கம் அறிவித்தது.

உலகத்தார் நாடும் பெருமைகள் வேண்டேன். உண்மை அறிவதொன்றே என் விருப்பம்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உண்மைகளை உறைக்க சொல்ல வேண்டும்

இறுதி யுத்தத்தின்போது சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து வெளியேறாமல் இருந்திருந்தால் பேரழிவுகள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கூறியுள்ளார்.

வடக்கு முதலமைச்சர் கூறிய உண்மையை ஏற்று ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட சர்வதேச தொண்டு நிறுவனங்கள் இலங்கைத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் யுத்தம் நடந்த போது, சர்வதேச தொண்டு நிறுவனங்களை வெளியேறுமாறு இலங்கை அரசு உத்தரவு பிறப்பித்தது. அத்தகையதொரு உத்தரவை அரசு பிறப்பிக்கும் போது ஐ.நா சபை நிச்சயம் அது விடயத்தில் தலையிட்டு யுத்தகளத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உதவுவதற்காக தாங்கள் அங்கு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்க வேண்டும்.

இல்லையேல் யுத்த சூழ்நிலைக்குள் அகப்பட்ட பொதுமக்களை காப்பாற்றுவதற்கான ஏற்பாடுகளை சர்வதேச தொண்டு நிறுவனங்கள் செய்திருக்க வேண்டும்.

இதைச் செய்யாமல், தமிழ் மக்களை கையறு நிலையில் விட்டு விட்டு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து வெளியேறியமை தமிழ் மக்களுக்கு செய்த மிகப் பெரும் அநியாயமாகும்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வன்னிப் பெருநிலப்பரப்பை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கு பொதுமக்கள் எவ்வளவோ பிரயத்தனம் செய்தனர்.

எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சி மன்றாடினர். தொண்டு நிறுவனங்களின் வாகனங்களுக்கு முன்னாக வீதியில் கிடந்து எங்களை விட்டுச் செல்லாதீர்கள் என்று கையெடுத்துக் கும்பிட்டனர். எனினும் மனிதநேய அமைப்புகள் மனிதநேயமில்லாமல் நடந்து கொண்டன.

உண்மையில், சர்வதேச மனித நேய அமைப்புகள் அன்று தீர்க்கமான முடிவுகளை எடுத்திருந்தால் தமது வெளியேற்றத்தை தடுக்க முடியாவிட்டாலும் தமிழ் மக்களைக் காப்பாற்றியிருக்க முடியும்.

இதைச் செய்யாத சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அடிப்படையில் தமது கொள்கைளை, இலக்குகளை கைவிட்டன என்றே கூறவேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக இலங்கைத் தமிழ் மக்கள் விடயத்தில் ஐ.நா சபை நடந்து கொண்ட முறைமைகள் மிகவும் பாரதூரமானவை. வன்னி யுத்தத்தின்போது தமிழ் மக்களைக் காப்பாற்ற ஐ.நா சபை தவறி விட்டது என்ற உண்மையை ஐ.நா செயலர் பான் கீ மூனும் ஏற்றுக் கொண்டிருந்தார். எனினும் அரசியல் தலைவர்கள் சிலர், சர்வதேச தொண்டு நிறுவனங்களும் ஐ.நா சபையும் செய்த பிழைகளை எடுத்துக் கூறாமல் அவற்றை மூடி மறைக்கின்றனர்.

பிழைகள் குற்றங்கள் எந்தத் தரப்பில் நடந்தாலும் அதை வெளிப்படையாக தெரிவிப்பதே நல்லது. இந்த உண்மையை வடக்கின் முதலமைச்சர் மிக துணிச்சலாக வெளிப்படுத்தியுள்ளார்.

உண்மைகள் ஒருபோதும் மறைக்கப்படக் கூடியவை அன்று. அவை வெளிப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் உண்மைகளில் இருந்து பேருண்மைகள் வெளிப்படும்.

ஆக, உண்மைகளைச் சொல்வதற்கு எவரும் தயங்கக் கூடாது.

## கடத்தப்பட்ட மாணவி நீர்கொழும்பில் மீட்பு

அநுராதபுரத்தில் கடத்தி செல்லப்பட்ட மாணவி நீர்கொழும்பு கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் காலை அவருடைய நண்பிகளோடு மேலதிக வகுப்புக்கு சென்று கொண்டிருந்த போது இவர் கடத்தப்பட்டிருந்தார்.

முச்சக்கரவண்டியில் வந்த சந்தேக நபர் குறித்த பெண்ணை தாக்கி பலவந்தமாக முச்சக்கரவண்டியில் அழைத்து சென்றதாக கூறப்பட்டது. கடற்கரைப் பகுதியில் இருந்த பொலிஸாரிடம் குறித்த பெண் நடந்தவற்றை தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே அவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார். நீண்டநாட்களுக்கு முன் இருந்த காதல் தொடர்பே கடத்தலுக்கான காரணமென தெரிவிக்கப் படுகின்றது. (எ-11)

# சிகிச்சை பலனின்றி இளைஞன் மரணம்

ஆட்டோ- மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடியில் கடந்த 18 ஆம் திகதி இடம் பெற்ற குறித்த விபத்துச் சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த பாலசிங்கம் மயூரதன் (வயது 23) எனும் இளைஞன் படுகாயமடைந்திருந்தார்.

இவர் கடந்த ஒரு வார காலமாக விபத்து அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நாச்சிமார் கோவிலடியில் பயணிகளை ஏற்றுவதற்காக நின்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தினை விலகிச் செல்லமுற்பட்ட இளைஞன் நேர் எதிரே வந்த ஆட்டோவுடன் மோதியுள்ளார்.

இதனால் படுகாயமடைந்த பிரஸ்தாப இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு விபத்து அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையிலேயே சிறுநீரகம் மற்றும் விலா என்பு பகுதிகளில் மோசமான உட்காயம் ஏற்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

# எனக்கு கொடுக்கப்படும் அழுத்தமே விஹாரைக்கு செல்வதற்கு காரணம்

## மகிந்த ராஜபக்ஷ விசனம்

நல்லாட்சி அரசாங்கத்தினால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் காரணமாகவே நான் விஹாரைகளுக்கு செல்கின்றேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி தெல்லம்புர பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற மதவழிபாட்டு நிகழ்வு ஒன்றில் பங்கேற்றிருந்த போது இதனைத் தெரிவித்தார்.

இதன் போது கருத்துரைத்த அவர், நல்லாட்சி அரசாங்கம் என்னை பழிவாங்கும் நோக்கில் உள ரீதியாக பாதிப்படையச் செய்யும் வகையில் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.

இந்த அழுத்தங்களை சமாளிக்கும் நோக்கில் நான் விஹாரைகளுக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றேன்.

தற்போதைய அரசாங்கம் குரோத அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

குரோத அரசியலை கைவிட்டு மக்களுக்கு நலன்களை வழங்கும் வகையில் புரிந்துணர்வுடன் அரசாங்கம் செயற்பட வேண்டியது அவசியமானது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7,10)

## ஐவர் கைது

குருநாகல் - பொல்பிதிகம - சியம்பலன்கமுவ கஹல்ல சரணாலயப் பகுதியில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த 5 நபரகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இவர்கள் 28 வயதிற்கும் 46 வயதிற்கும் இடைப்பட்டவர்களாவர். கைதானவர்கள் இலுக்பல்லம, கல்கிரியாகம, நேகம்பஹ ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்களாவர். சந்தேக நபர்களை நேற்று நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். (எ-11)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
JSAC
16
2015
சகலருக்கும் சமத்துவம் சமமாய் வழங்குவோம். பாரினில் பெண்கள் சரிநிகராய் வளர்ச்சிபெற சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்திடுவோம்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2015
''குடிமக்கள் செய்யக்கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக்கூடிய சிறிய பணி மரங்களை நடுவதுதான்.'
–வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

# சத்திய தரிசனம்



## பிறர் நலம் பேணுவோம்

❖ பிறர் நலன் பேணுவதே சொர்க்கம். மற்றவர் வளர்ச்சி கண்டு மனம் புழுங்குவதே நரகம்.

❖ நடந்ததையே எண்ணி வருந்தாதீர்கள். நிகழ்காலத்தைப் பயனுடையதாக்கும் முயற்சியில் ஈடுபடுங்கள்.

❖ குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, அதில் வெற்றி கிடைக்கும் வரை ஆர்வமுடன் செயல்படுங்கள்.

❖ நல்லது கெட்டதை பகுத்தறியும் விவேகத்தைக் கற்றுக் கொடுப்பதே உண்மையான கல்வியாகும்.

❖ பெண்கள் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தைப் பெற விரும்பினால் ஆபத்தில் சிக்கிக் கொள்ள நேரிடும்.

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## அன்னதானம் செய்வதன் சிறப்பு என்ன?

இதை திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் ஓர் சொற்பொழிவில் கூறியது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆவர். இன்னார் இனியார் என்று பாராமல் எல்லோருக்கும் அன்னதானம் புரிய வேண்டும். முடியாதவர்கள் கண்ணிழந்தவன், கையிழந்தவன், கால் இழந்தவன் என ஏனையோர் உள்ளனர். ஆனால் உயிர் இழந்தவன் என ஒருவனும் இல்லை. அரசனுக்கும் வயிறு உண்டு. ஆண்டிக்கும் வயிறு உண்டு.

கொடிய நோய்களை கூட பல வருடம் ஒருவன் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் பசி என்னும் நோய் வந்தால் நொடிப்பொழுது கூட அவனால் பொறுக்க முடியாது. அதனால் பசியை ஆற்றுவதே உயிர் புண்ணியமாகும். பசித்தோர் முகம் அறிந்து புசிக்கச் சொல்ல வேண்டும்

# பிள்ளையானுக்கு 3 மாத விடுமுறை

கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுத்துறை தலைமையகத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவரும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் மாகாணசபையின் தற்போதைய உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு 3 மாத காலம் விடுமுறை வழங்குவதற்கு கிழக்கு மாகாணசபை அனுமதியளித்துள்ளது.

இம்மாத அமர்வுக்காக பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தலைமையில் கிழக்கு மாகாணசபை கடந்த செவ்வாய்க்கிழமை கூடியபோது, ஐ.ம.சு.முன்னணி உறுப்பினரான கே.புஸ்பகுமார் (இனியபாரதி) இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

இந்தப் பிரேரணை தொடர்பில் மாகாணசபை உறுப்பினர் நாகலிங்கம் திரவியம் (ஜெயம்) வழிமொழிந்ததுடன், அது மாகாணசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தடுப்புக்காவல் விசாரணையிலுள்ள சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு 3 மாதகால விடுமுறை அளிக்கவும் சபை அனுமதியளித்ததாக கே.புஸ்பகுமார் (இனியபாரதி) தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக சிவநேசதுரை சந்திரகாந்தன், கடந்த ஒக்டோபர் -4 ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்காக அழைப்பட்ட நிலையில் கைதுசெயயப்பட்டு, கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து டில்லியை பந்தாடியது சென்னை

இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில் சென்னையில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் சென்னை அணி 4-0 என்ற கோல் கணக்கில் டில்லி அணியை துவம்சம் செய்து 5 ஆவது வெற்றியை ருசித்தது.




8 அணிகள் இடையிலான 2 ஆவது இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து (ஐ.எஸ்.எல்.) பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சென்னை நேரு அரங்கில் நேற்றுமுன்தினம் நடந்த 45 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னையின் எப.சி-டில்லி டைன மோஸ் அணிகள மோதின.

25 ஆயிரம் ரசிகர்களுக்கு முன்னிலையில் அரங்கேறிய விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில், சென்னை அணி தொடக்கம் முதலே துடிப்புடன் தாக்குதலை தொடுத்து, கிடைத்த வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தி அசத்தியது. 17 ஆவது நிமிடத்தில் சென்னை அணி முதல் கோல் அடித்தது. தூரத்தில் இருந்து சென்னை அணி வீரர் ஜெஜெ அடித்த பந்தை டில்லி கோல்கீப்பர் டோனி டாப்ளஸ் கோல் எல்லைக்கு மிகவும் வெளியே வந்து தலையால் முட்டி தடுத்தார். ஆனால் அது அருகிலேயே விழுந்தது. அதனை தன் வசப்படுத்திய சென்னை நட்சத்திர வீரர் ஸ்டீவன் மென்டோசா (கொலம்பியா) மின்னல் வேகத்தில் கோலுக்குள் திணித்தார். நடப்பு தொடரில் ஸ்டீவன் மென்டோசா பதிவு செய்த 10 ஆவது கோல் இதுவாகும்.




21 ஆவது நிமிடத்தில சென்னை வீரர் ஜெஜெ கோலை நோக்கி அடித்த பந்தை டில்லி கோல் கீப்பர் டாப்ளஸ் காலால் உதைத்து தடுத்தார். அவரது காலில் பட்டு திரும்பிய பந்தை புருனோ பெலிசரி (பிரேசில்) அதிரடியாக அடித்து கோலாக்கினார். பந்து 4 வீரர்களின் தடுப்பு அரணை தகர்த்து கோலுக்குள் புகுந்தது.

40 ஆவது நிமிடத்தில் மென்டோசா க்டத்தி கொடுத்த பந்தை சக வீரர் ஜெஜெ (இந்தியர்) கோலாக மாற்ற, முதல் பாதியில் சென்னை அணி 3-0 என்ற கோல் கணக்கில் வலுவான முன்னிலை பெற்றது.

பிற்பாதி ஆட்டத்திலும் சென்னை அணி உள்ளூர் ரசிகர்களை குதூகலப்படுத்த தவறவில்லை. 54 ஆவது நிமிடத்தில் மென்டோசா துணையுடன் ஜெஜெ மறுபடியும் கோல் போட்டார். கடைசி வரை டில்லி அணியால் சரிவில் இருந்து மள முடியவில்லை. முடிவில் சென்னை அணி 4-0 என்ற கோல் கணக்கில் டில்லியை வீழ்த்தி முந்தைய லீக்கில் அடைந்த தோல்விக்கு பழி தீர்த்துக் கொண்டது.

இந்த 5 ஆவது வெற்றியின் மூலம் சென்னை அணி புள்ளி பட்டியலில் 6 ஆவது இடத்தில் இருந்து 4 ஆவது இடத்துக்கு முன்னேறியதுடன் அரை இறுதி வாய்ப்பையும தக்க வைத்து கொண்டது.

## இந்தியா பாகிஸ்தானுடன் விளையாட தேவையில்லை: பாய்காட் சொல்கிறார்



உலக கிரிக்கெட்டில் இந்திய கிரிக்கெட் வாரியம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஐ.சி.சிக்கு இந்திய அணியால் அதிக வருமானம் கிடைக்கிறது. இந்தியாவும் கிரிக் கெட்டில் அதிக அளவு சம்பாதித்து வருகிறது. இந்தியா விளையாடும் போட்டிகளுக்கு அதிக ரசிகர்கள் வருவதால் அதிக வருமானம் கிடைக்கிறது.

இதனால்தான் அனைத்து நாடுகளும் இந்தியாவுடன் விளையாட விரும்புகிறது. தற்போது இந்தியா-பாகிஸ்தான் தொடரை நடத்த பாகிஸ்தான் அதிக ஆர்வம் காட்டி வருகிறது.


இந்நிலையில் இங்கிலாந்து முன்னாள் வீரரான பாய்காட், இந்தியா பாகிஸ்தானுடன் கிரிக்கெட் விளையாட தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "இந்தியா எளிதில் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தை புறக்கணிக்க முடியும். அந்த தொடருக்குப் பதிலாக மற்ற நாடுகளுடன் விளையாடும அளவிற்கு இந்தியா கிரிக்கெட் வாரியத்தில் பொருளாதாரம் சிறந்த முறையில் உள்ளது.

ஏனென்றால், இந்தியாவின் வலிமையான பொருளாதாரம், மக்கள் தொகை மற்றும் விளையாட்டின் மீதான ஆர்வம் இந்திய கிரிக்கெட் வாரியத்திற்கு அதிக அளவு வருமானத்தை ஈட்டித் தரும். ஒவ்வொரு அணியும் இந்தியாவுடன் விளையாட விரும்புகிறது. ஏனென்றால் விளம்பரங்கள் மூலம் அவர்கள் அதிக அளவு பணம் சம்பாதிக்க முடியும். பாகிஸ்தானுடன் இந்திய கிரிக்கெட் வாரியம் விளையாடத் தேவையில்லை.

கிரிக்கெட் போட்டி வடிவில் ப்ார்க்கையில், இந்தியா- பாகிஸ்தான இடையிலான போட்டி இங்கிலாந்து - அவுஸ்திரேலியா போட்டியை ரசிப்பது போன்று இருக்கும். ஆனால், இந்தியா- பாகிஸ்தான் இடையே குறைந்த அளவு போட்டியே நடப்பது துரதிர்ஷ்டவசமானது என்றார்.(க)

## முதலாவது பகல் - இரவு டெஸ்ட் நாளை கோலாகலமாக ஆரம்பம்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் தொடங்கி 138 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், முதன் முதலாக டெஸ்ட் போட்டி பகல்-இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்டில், அவுஸ்திரேலியா-நியூசிலாந்து அணிகள் இடையே நடக்கும இந்த போட்டியில் ஒரு முக்கிய மாற்றம் நடக்கவுள்ளது.

டெஸ்ட் போட்டிகளில் எப்போதும் சிவப்பு நிற பந்தையே பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால் பகல்-இரவு ஆட்டத்தில் சிவப்பு நிறப்பந்து தெளிவாக தெரியாது என்பதால், தீவிர ஆராய்ச்சிக்கு பிறகு தற்போது இளஞ்சிவப்பு (Pink) நிறத்திலான பந்தினை பயன்படுத்தவுள்ளனர்.

ஒரு நாள் போட்டி, இருபது இருபது போன்ற கிரிக்கெட் போட்டிகளால் 5 நாட்கள் நடைபெறும் டெஸ்ட் கிரிக்கெட் மீதான ஈர்ப்பு கிரிக்கெட் ரசிகர்களிடையே குறைந்து விட்டது.

இதனை சரிசெய்ய பலரும் பலவித யோசனைகளை ஐ.சி.சி இற்கு வழங்கி வந்தனர்.


இந்நிலையில், தான் டெஸ்ட் போட்டிகளை பகல்-இரவு போட்டிகளாக சோதனை செய்து பார்க்கலாம் என்ற யோசனை பிறந்துள்ளது.

நாளை, அவுஸ்திரேலியா- நியூசிலாந்துக்கு இடையே நடக்கும் பகல்-இரவு டெஸ்ட் போட்டி பிற்பகல் 2 மணிமுதல் இரவு 9 மணி வரை தொடரும் என கூறப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் மற்றும் கிரிக்கெட் விளையாட்டு வீரர்களும இளஞ்சிவப்பு பந்தை பயன்படுத்தி நடக்கவுள்ள பகல் - இரவு டெஸ்ட் போட்டி சோதனை வெற்றி பெறுமா என ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றனர். (க)

## பகல் - இரவு டெஸ்ட் போட்டிக்கு விராட் கோலி ஆதரவு

நியூசிலாந்து-அவுஸ்திரேலியா இடையிலான 3 ஆவது டெஸ்ட் வருகிற 27 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது. இது பகல்-இரவு போட்டியாக நடத்தப்படும் முதல் டெஸ்டாகும். வழக்கமான சிவப்பு நிற பந்துக்கு பதிலாக இளஞ்சிவப்பு நிற (பிங்க்) பந்து இந்த டெஸ்டில் பயன்படுத்தப்பட இருக்கிறது. பகல்-இரவு டெஸ்ட் போட்டிக்கு இந்திய கப்டன் விராட் கோலி வரவேற்பு தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியின் போது, 'டெஸ்ட் கிரிக்கெட்டில் இது ஒரு மைல்கல். இது ஒரு மிகப்பெரிய பரிசோதனை முயற்சியாகும். டெஸ்ட் கிரிக்கெட்டில் ஏதாவது சில மாற்றத்தை மேற்கொள்ள எடுக்கப்படும் மிகப்பெரிய நடவடிக்கையாகும். நிச்சயம் பலன் அளிக்கும்



என்று நம்புகிறேன். முதலில், பகல்-இரவு டெஸ்டில் விளையாட ஒப்புக் கொண்ட இவ் விரு அணிகளையும் பாராட்டியாக வேண்டும்' என்றார். (க)

# மாகாண வரவு செலவுத்திட்டம் 28ஆம் திகதி முன்மொழிவு!

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் 2016-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்னோட்டம், எதிர்வரும் 28-ம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபையின் விசேட அமர்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் முன்மொழியப்படவுள்ளது.

அத்துடன், டிசம்பர் மாத நடுப்பகுதிக்கு முன்னதாக வரவு செலவு திட்டம் சபைக்கு முன்வைக்கப்படவுள்ளது.

2015-ம் நிதி ஆண்டு நிறைவடையும் நிலையில் 2016-ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

இந்நிலையில் மத்திய அரசாங்கம் தனது வரவு செலவுதிட்ட முன்மொழிவை முன்வைத்திருக்கும் நிலையில், குறித்த வரவு செலவு திட்டத்தில் வடமாகாண சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த நிதியின் அடிப்படையில்,

2016-ம் ஆண்டுக்கான வரவு செலவுதிட்ட முன்னோட்டம் அல்லது 2016-ம் ஆண்டுக்கான நிதிக் கூற்றறிக்கை முதலமைச்சரினால் முன்மொழியப்படவுள்ளது.

மேலும் 28-ம் திகதிய அமர்வு சுமார் ஒரு மணிநேர அமர்வாக நடைபெறவுள்ளமையும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (எ-12)

# அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள விரைவில் புதிய சட்டமூலம் வருகிறது

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச அளவில் உருவாகும் புதிய அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ளவதற்கு உதவக் கூடிய புதிய சட்டமூலமொன்றை கொண்டுவரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,பயங்கரவாத தடைச்சட்டம் என்பது உள்நாட்டில் உருவாகக் கூடிய விவகாரங்களை கையாள்வதற்கு உதவக்கூடியது மாத்திரமே, தற்போதைய சூழலில் இலங்கை பரந்துபட்ட அளவில் சிந்திக்க வேண்டும்,அதன் காரணமாக உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு ஏற்ற புதிய சட்டங்கள் அவசியம்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அர்த்தமற்ற கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

2010-ம் ஆண்டு அப்போதைய சட்டமா அதிபர் மொஹான் பீரிசின் உத்தரவின் பேரில் 92 விடுதலைப் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட்டதை அவர் மறந்துவிட்டாரா? அதன் பின்னர் மேலும் 45 பேர் விடுதலைசெய்யப்பட்டனர்,

ஆனால்ராஜபக்ஷ அரசாங்கத்தில் மிகவும் செல்வாக்குள்ள அமைச்சராக விளங்கிய பீரிஸ் அதனை தடுக்க எதனையும் செய்ய வில்லை. அவர் அதனை எதிர்க்கவுமில்லை, ராஜபக்ஷ விசுவாசிகள் பின்பற்றும்போலி அணுகுமுறையிது.

மிகபாரதூரமான குற்றங்களை இழைத்த சில புலித்தலைவர்களுக்கு ராஜபக்ஷவால் மன்னிப்பை அளித்து அவர்களிற்கு ஆடம்பரவாழ்வை வாழ்வதற்கு அனுமதிக்க முடியுமென்றால், ஏன் அவர், அவர்களுக்கு கீழ் நிலையில் உள்ள உறுப்பினர்களிற்கு மன்னிப்பு வழங்கவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (எ-11)

# அமைச்சர் றிசாத் பதியுதீன் சந்திரிகாவுக்கு அவசர கடிதம்

## கடற்படை முகாம் அகற்றக்கோரி



(கொழும்பு)

மன்னார், சிலாவத்துறை கடற்படைத்தளத்தினை வேறு இடத்துக்கு இடமாற்றுவதன் மூலம் இப்பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர முடியும் என்று அமைச்சர் றிசாத் பதியுதீன், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன் எழுதியுள்ள அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது, 1990 ஆம் ஆண்டு வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் சில மணித்தியால அவகாசத்துக்குள் அம்மண்ணில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட மக்கள் 22 வருடங்களாகி புத்தளம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்.

சிலாவத்துறை கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள காணியில் மையவாடி, பள்ளிவாசல், பாடசாலை மற்றும் வர்த்தக நிலையங்கள் என்பன காணப்பட்ட போதும், அது யுத்தம் காரணமாக சிதைவடைந்து போனது.

கடந்த 2009-ம் ஆண்டு ஏற்பட்ட சமாதான சூழலையடுத்து, இங்கிருந்து வெளியேறிய மக்கள் மீண்டும் தமது சொந்த மண்ணுக்கு திரும்ப ஆரம்பித்தனர்.

இந்த மீள்குடியேற்றத்திற்கு பல்வேறு தடைகளும் ஏற்பட்டு வருகின்றதையும் நீங்கள் நன்கறிவீர்கள்.

இதனடிப்படையில் சிலாவத்துறை கடற்படை முகாம் நகரத்தின் மத்தியில் அமைந்திருப்பதால் வர்த்தகங்கள் மற்றும் பொதுமக்கள் இதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டியுள்ளதையும் தங்களது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

எனவே, இந்த கடற்படை முகாமை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்து அம்மக்களது மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்த தேவையான உதவிகளை செய்யுமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் இந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# ஆளும்கட்சிக்குள் முரண்பாடு இல்லை

## பிரதி அமைச்சர் அஜித் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆளும் கூட்டணிக்குள் முரண்பாடுகள் எதுவும் கிடையாது என பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சிக்குள் சில மாறுபட்ட கருத்துக்கள் நிலவிய போதும் முரண்பாட்டு நிலைமை கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட பூரண சுதந்திரம் காணபபடுவதாகவும் அதுவே ஜனநாயகம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், அமைச்சரவையில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டால் அந்த தீர்மானத்திற்கு அனைத்து ஆளும் கட்சி உறுப்பினர்களும் மதிப்பளிப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு விடயம் பற்றி தங்களது கருத்தினை வெளிப்படுத்துவது ஒருவரின் ஜனநாயக உரிமையாகும்.

தேசிய அரசாங்கத்தில் அமைச்சர்கள் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென கோரவில்லை. அரசாங்கத்தின் ஒரு சில தீர்மானங்கள் பற்றி விமர்சனம் செய்வது பிழையானதல்ல.

ஊழல் மோசடிகள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காமையை தாம் விமர்சனம் செய்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்சியை பாதுகாப்பார், பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனது கட்சியை பாதுகாப்பார் இருவரும் கூட்டாக இணைந்து நாட்டை பாதுகாப்பர் எனவும் அவர் தெரிவிததுள்ளார்.

அரசாங்கம் தொடர்ச்சியாக கொள்கைகளை அமுல்படுத்தும் எனவும் தற்போது அரசாங்கத்தை விரும்பாதவர்கள் 2020-ம் ஆண்டு மாற்றத்தை உணர்ந்து கொள்வார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# முன்னாள் தளபதிகள் மீண்டும் ஆஜர்

(கொழும்பு)

ரக்னா லங்க பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய ஊழல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த முனனாள் கடற்படைத்தளபதிகள்ஜயந்த பெரேரா மற்றும் ஜயநாத் கொழம்பகே ஆகியோரை ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று மீண்டும் அழைத்துள்ளது.

இவர்களை தவிர பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் தமயந்த ஜயரத்ன மற்றும் அவன்கார்ட் நிறுவனத்தை பதிவு செய்தமை தொடர்பில் நிறுவன பதிவாளரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டனர்.-

ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய ஊழல் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு நடத்தும் விசாரணைகளில் கண்டறியப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காகவே இரண்டு முன்னாள் கடற்படை தளபதிகள் உட்பட 4 பேர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (எ-12)

# ஆட்சியில் இருந்த காலத்தில் மகிந்தவுக்கு எதிரியான பெண்கள்

## ஆங்கில ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது அவருக்கு பிடிக்காத நான்கு பெண்கள் பெயரிடப்பட்டுள்ளனர். கொழும்பின் ஆங்கில ஊடகம் ஒன்று தமது ஆய்வுக்கட்டுரையில் இதனை தெரிவித்துள்ளது.

இதில் முதலாமவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இரண்டாமவர் ஐக்கிய நாடுகளின் அமெரிக்காவுக்கான வதிவிடப்பிரதிநிதி சமந்தா பவர், மூன்றாமவர் ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, நான்காமவர் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் மிச்செய்ல் ஜே சிசன் ஆகியோராவர்.

இதில் மகிந்தவுக்கு மிகவும் பிரச்சினையை தரக்கூடியவராக சமந்தா பவர் கருதப்பட்டார். மகிந்த தமது ஆட்சிக்காலத்தில் அமைச்சரவை அங்கத்தவர்களை சந்திக்கும்போதெல்லாம், அந்த வெள்ளை மாளிகையின் ஒல்லியான (மெலிந்த) பெண்ணே தமக்கு பிரச்சினையை ஏற்படுத்துவதாக குறிப்பிடுவார் என்று ஆங்கில ஊடகம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை சமந்தா பவருக்கும், அமெரிக்காவின் முன்னாள் ராஜாங்க செய லாளர் ஹிலாரி கிளிங்டனுக்கும் இடையில் பிரச்சினையை ஏற்படுத்த மகிந்த ராஜபக்ஷ, அதிகளவான பணத்தையும் செலவிட்டார்.

2008ஆம் ஆண்டு பராக் ஒபாமாவின் தேர்தல் பிரசாரங்களின் போது மகிந்தவுக்கான ஆலோசனைகளை தமது வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு வழங்கியிருந்தார். எனினும் மகிந்த எதிர்பார்த்தப்படி ஹிலாரிக்கும் சமந்தா பவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்படவில்லை.

இதன்பின்னர் மகிந்த, ஹிலாரியின் பின்னர் ராஜாங்க செயலாளராக வந்த ஜோன் கெரிக்கு குறிவைத்தார். எனினும் அவர், சீனாவுடன் இலங்கை நெருங்கி செல்லுமானால், அந்த நாட்டுக்கு எதிரான போர்க் குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா முன்னெடுப்புக்களை மேற்கொள்ளும் என்று செனட்சபையில் வைத்து தெரிவித்திருந்தார.

இந்தநிலையில் சமந்தா பவருடன் ஒப்பிடுகையில், ஜோன் கெரி அதிகாரமுள்ளவர் என்பதை உணர்ந்தார். எனினும் சமந்தா பவர் இலங்கை தொடர்பான தமது இறுக்கமான நிலைப்பாட்டை தளர்த்தவில்லை. இதேவேளை, முன்னாள்இலங்கை தூதுவர் மிச்செல் ஜே சிசன், சமந்தாபவரின ஆலோசனையின் பேரிலேயே கோட்டே நாகவிஹாரைக்கு சென்று மாதுலுவாவே சோபித தேரரை சந்தித்தார்.

இதனைக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டை சோபித தேரரைக்கொண்டு தோற்றுவித்தார்.அத்துடன் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அப்போது சுகாதார அமைச்சராக இருந்தவேளையில் அவரை ஹவாட் பல்கலைக்கழக கௌரவிப்புக்கு உட்படுத்தினார்.

எனவே இதனை மையமாகக்கொண்டே மிச்செல் ஜே சிசன் இலங்கையில் இருந்து செல்லும் போது, சமந்தா பவரின் இரண்டாம் நிலை தளபதி இலங்கையில் இருந்து செல்வதாக மகிந்த தேர்தல் பிரசாரத்தின்போது தெரிவித்திருந்தார்.

மச்செல் சிசன் தற்போது ஐக்கிய நாடுகளின் அமெரிக்காவுக்கான பிரதி தூதுவராக பணியாற்றுகிறார். இதேவேளை அதிகாரம் மிக்க சமந்தா பவர் தற்போது இலங்கைக்கு வந்துசென்றபோது மகிந்த ராஜபக்ஷ, அவரின் அதிகாரம் மிக்க செயற்பாடுகளை சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து பார்க்கவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும் ஆங்கில ஊடகம் கருத்துக்கூறியுள்ளது. (எ-12)

# இரத்ததானம் செய்து இராணுவத்தினர் உதவி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாஞ்சோலை அரச வைத்தியசாலையில் குழந்தை ஒன்றை பெற்றெடுத்த 34 வயதான பெண்ணுக்கு இராணுவத்தினர் இரத்ததானம் செய்து காப்பாற்றியதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தை சேர்ந்த 34 வயதான பெண் கடந்த 19 ஆம் திகதி குழந்தை பெற்றெடுத்துள்ளார். அந்த பெண் மகப்பேறுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது இரத்தம் தேவைப்பட்டுள்ளது.

அப்போது இரத்தான வங்கியில சேவையாற்றும் மருத்துவர் அப்சரா, அருகில் உள்ள இராணுவ முகாமான 592-வது படைப்பிரிவின்கட்டளை அதிகாரியர்ன டப்ளியூ. எம்.ஜி.சீ.பீ. விஜேசுந்தரவிடம் உதவி கோரியுள்ளார்.



கோரிக்கைக்கு பதிலளித்த கட்டளை அதிகாரி, ஒரு அதிகாரி மற்றும் 7 இராணுவத்தினர் ஊடாக பெண்ணுக்கு தேவையான 750 மில்லி லீற்றர் இரத்தத்தை தானமாக பெற்றுக்கொடுத்துள்ளார்.

இரத்த தானத்தை அடுத்து பெண் பாதுகாப்பாக பிள்ளையை பெற்றெடுத்துள்ளதுடன், குறைந்த எடையுடன் பிறந்த குழந்தை மற்றும் தாய் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவ்வூடக பிரிவு தெரிவித்துள்ளது. (எ-11)

## ஜனவரியில்...

2016ஆம் ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி புதன்கிழமை முதல், 23ஆம் திகதி சனிக்கிழமை வரை 4 நாட்களுக்கு இம்மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டின் போது, விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் நிதிசார் உள்ளடக்கம், வேலைவாய்ப்பு, திறமை மற்றும் மனித வளம், சுற்றாடல் மற்றும் இயற்கை வளப் பாதுகாப்பு, உலகளாவிய நிதிமுறைமையின் எதிர்காலம், பாலின சமநிலை, இணையத்தின் எதிர்காலம், சர்வதேச வணிகம் மற்றும் முதலீடு, நீண்டகால முதலீடு, கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி ஆகிய பூகோள சவால்கள் மற்றும் அது தொடர்பான முன்னெடுப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

உலக பொருளாதார அமைப்பின் நிறைவேற்று அதிகாரிகள், பங்குதாரர்கள் மற்றும் நிறுவன உறுப்பினர்கள், ஜி-20 மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நாடுகளின் அரசியல் தலைவர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன், சர்வதேச அமைப்புக்களில் தலைவர்கள், இளம் உலகத் தலைவர்கள், தொழில்நுட்ப முன்னோடிகள், சமூக தொழில முனைவோர், ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், ஆன்மிக மற்றும் கலாசார தலைவர்கள் ஆகியோரும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-11)

## பட்ஜெட்டை...

சுதந்திரக்கட்சியின் 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

வரவுசெலவு திட்ட யோசனைகளிற்கு ஜே.வி.பி தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையிலேயே இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளிற்கு ஏற்ப வரவு செலவு திட்டம் காணப்படாததால் அதற்கு ஆதரவாக வாக்களிக்க முடியாத நிலையில் உள்ளதை தெரிவித்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார்.

வரவுசெலவுத்திட்ட யோசனைகளில் சில ஆபத்தானவை, அர்த்தமற்றவை என தாங்கள் கருதுவதால் அதனை விமர்சிக்காமலிருக்க முடியாது என தாங்கள் கருதுவதாக ஜனாதிபதியிடம் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்,

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி தான் அவர்களது உணர்வுகளை புரிந்துகொள்வதாகவும், விமர்சனம் செய்வதற்கு அவர்களிற்குள்ள உரிமையை மதிப்பதாகவும், தங்களை வரவுசெலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு மாத்திரம் கேட்டுக்கொள்வதாகவும், அழுத்தங்களை கொடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரவெல்கம தெரிவித்துள்ளார். (எ-11)

## மாவீரர் தின...

ஆதரவான வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வகையில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் ஏற்கெனவே அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## கிளிநொச்சியில்...

ட்ட துண்டுப் பிரசுரம், விஸ்வமடு, சுண்டிக்குளம் மற்றும் கிளிநொச்சி ஊடான ஏ9 வீதியில் வீசப்பட்டுள்ளன.

புலிகள் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தையொட்டி வடக்கு கிழக்கு பகுதிகளில் அதிகளவிலான இராணுவத்தினர் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள நிலையில் இவ்வாறு துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன.

இறுதிக்கட்ட போர் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் மற்றும் புதுமாத்தளன் பிரதேசங்களில் அதிகளவிலான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஜனாதிபதி...

யாற்றிய போதே அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வது தொடர்பாக பல கட்ட செயற்பாடுகளுக்கு இணக்கம் தெரிவித்தார்.

அரசியமைப்பு திருத்தத்திலும் அந்த விடயம் உள்வாங்கப்பட்டது.

உயர் நீதிமன்றமும் அதில் உள்ள பல விடயங்களை அகற்றியது.

திருத்தங்களின் ஊடாகவேனும் எஞ்சியுள்ள ஜனாதிபதி அதிகாரங்களை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது அவற்றை அகற்றுவதற்கு அர சியலமைப்பு சபையொன்றை கொண்டு வந்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். (எ-11)

## நிதியமைச்சருக்கு...

க்கையில்லா தீர்மானம் இன்று சபாநாயகரிடம் கையளிக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஒன்றிணைந்த எதிர்கட்சிகள், தமக்கு எதிராக கொண்டுவர உள்ள நம்பிக்கை இல்லா தீர்மானம் தொடர்பில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நிதியமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதற்கு முகங்கொடுப்பதற்காக முன் ஆயத்தங்களை மேற்கொள்ள அவசியமில்லை என கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அதற்கு ஆதரவு வழங்குவீர்களா? என்று ஜே.வி.பியின் அரசியல் சபை உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி கருத்து தெரிவிக்கையில்,

நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்து இதுவரையில் தமது கட்சிக்கு அறிவிக்காமையின் காரணமாக அது தொடர்பில் அறிந்திருக்க வில்லை என குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தீர்மானம் என்னவென்று அறிந்து கொள்வதற்கு கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான செல்வம் அடைக்கலநாதனிடம் வினவப்பட்டது.

இது தொடர்பில் நாளை கூடி ஆராயப்படுமென அவர் கூறினார். (எ-11)

## எத்தனை...

ன்றார்கள். ஆனால், வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் போராட்டத்தில் இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை தடை செய்யப்பட்ட ஒரு நிகழ்வாக காண்பிக்கின்றனர்.

உலகத்திலுள்ள அனைத்து மக்களும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமையினை எந்த சட்டத்தினாலும் தடுக்க முடியாது. உலகெங்கும் இருக்கக்கூடிய புலம்பெயர் உறவுகள் மற்றும் தொப்புள்கொடி உறவுகளும் நினைவுகூரும் அந்த நேரத்தில், தமிழர் தாயகத்திலுள்ள மக்களும் நினைவுகூர அச்சம் கொள்ளத் தேவையில்லை.

எனவே எந்த மதத்தவர்களாக இருந்தாலும், கோயில்களிலோ, தேவாலயங்களிலோ தீபமேற்றியோ, மெழுகுவர்த்தி ஏற்றியோ அஞ்சலி செலுத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். வீடுகளில் தீபமேற்ற அச்சுறுத்தல்கள் இருக்குமாயின் நல்லூர் கோவில் மற்றும் தூய மரியன்னை பேராலயத்திலும் அஞ்சலி செலுத்த முடியும்.

ஒரு விடயத்தினை மூடி மறைத்துவிட்டு பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. தமது உயிர்களை மாய்த்த மாவீரர்களுக்கும், போரில் கொல்லப்பட்டவர்களுக்கும் அஞ்சலி செலுத்தியே ஆகுவோம். எங்கள் உறவுகள் ஆயிரமாயிரமாய் கொன்று குவிக்கப்பட்டதனை நாம் என்றுமே மறக்க முடியாது. அவர்கள் என்றும் எமது நெஞ்சங்களில் இருப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நாளை கார்த்திகை இருபத்தி ஏழாம் திகதி மாவீரர் தினம் உலகெங்குமுள்ள தமிழர் தாயகங்களில் வெகு சிறப்பாக வருடாவருடம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## ஜனாதிபதி...

ள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவி மோல்டா நாட்டு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இலங்கையே தற்போது பொதுநலவாய நாடுகளின் தலைமைத்துவப் பொறுப்பை வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(எ-12)

## கோத்தபாயவுக்கு...

திபதி ஆணைக்குழுவின் எதிரில் இன்று முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரக்னா லங்கா மற்றும் அவன்கார்ட் சம்பவம் தொடர்பில் இன்று பொதுமக்களிடம் சாட்சியங்கள் கோரப்பட உள்ளன.

இந்த விசாரணைகளில் பங்கேற்குமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் சிலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ரக்னா லங்கா மற்றும் அவன்கார்ட் நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, முன்னாள் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார விடமும விசாரணை நடத்தப்பட உள்ளது. (எ-11)

## இலங்கையுடன்...

தினருக்கு வெளியுறவு இராணுவ விற்பனைகள் மற்றும் அனைத்துலக இராணுவக் கற்கைப் பயிற்சித் திட்டம் போன்றன வழங்கப்படுகின்ற போதிலும் இவற்றுக்கு அப்பால் மேலும் இலங்கையுடன் இராணுவ சார் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அமெரிக்கா தயாராக உள்ளது என்பதே சமந்தா பவரின் கருத்தாகும்.

அமெரிக்காவின் உறவானது இராணுவ உபகரணங்களை விற்பனை செய்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றுக்கு அப்பால், தமிழ்ப் புலிகளுடனான யுத்தத்தின் போது அமெரிக்காவால் இலங்கை இராணுவ உதவிகள் வழங்கப்பட்டது போன்று, தற்போதும் இந்த இராணுவ உறவுநிலை மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடகச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்கா இராணுவப் பயிற்சிகள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் போன்றவற்றை வழங்க வேண்டிய தேவை எழவில்லை. ஏனெனில் புலிகளுடனான யுத்தம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே வெற்றி கொள்ளப்பட்டது.

ஆகவே போர் முடிவடைந்த பின்னர் சாதாரண ஆயுதங்கள் தொடர்ந்தும் அமெரிக்காவால் இலங்கைக்கு விற்பனை செய்யப்பட்டன. இந்நிலையில் தற்போது மீண்டும் இராணுவ சார் உறவுநிலையை இலங்கையுடன் வலுப்படுத்துவதற்கு அமெரிக்கா எதிர்பார்ப்பதாக சமந்தா பவர் தனது வருகையின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கைஅரசாங்கமானது கருத்திற்கொண்டு அதன் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கான நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தும் அதேவேளையில், இலங்கையுடன் மேலும் உறவினை வலுப்படுத்துவதில் அமெரிக்கா ஆர்வமாக உள்ளதாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடனான சந்திப்பின் போது தூதுவர் சமந்தா பவர் தெரிவித்ததாகவும் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## தங்கப்...

மா. கணேசராஜா அனுமதியளித்துள்ளார்.

கடந்த வாரம் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களிடமும் மேற்கொண்ட விசாரணை அறிக்கையினை நீதிமன்றில் பொலிஸார் நேற்று சமர்ப்பித்தனர்

அறிக்கையினை கவனத்தில் எடுத்த நீதவான் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை வரையான காலப்பகுதிக்குள் தோண்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்

விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வலயத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ள புதையல் பகுதியினை மருதங்கேணி பிரதேச சபை செயலாளர், யாழ்ப்பாண பூகோள கனியவள அதிகாரிகள், மத்திய சுற்றுச்சூழல் அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மணற்காட்டு கிராமசேவையாளர் ஆகியோர் முன்னிலையில் தோண்டப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

இன்று காலை 8 மணியளவில் புதையல் பகுதி தோண்டப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் புதையல் தோண்ட முயற்சித்த சந்தேக நபர்கள் தங்கியிருந்த விடுதியின் சி.சி.ரிவி கமராவில் பதிவாகியுள்ள காட்சிகள் சிலவற்றை சேகரித்த பொலிஸார் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

குறித்த வீடியோ காட்சிகளை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி அறிக்கை சமர்ப்பிக்கமாறும் உத்தரவிட்டுள்ளார். (எ-12-60)

## முக்கிய பயணத்தை மேற்கொள்கிறது-ஐ.நா

இலங்கை பால் சமத்துவத்தில் முக்கியமான பயணத்தை மேற்கொள்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் பால் சமத்துவத்துக்காகவும் பெண்களின் அதிகாரங்களுக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை தம்மை அர்ப்பணித்து செயற்படுவதாகவும் சபை தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கும் சர்வதேச நாள் இன்று (நேற்று) அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு ஐக்கிய நாடுகளின் பெண்கள் பல்நாட்டு அலுவலக பிரதிநிதி ரெபேக்கா ரெய்ச்மான் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் இலங்கை உட்பட்ட பல நாடுகள் 1993ஆம் ஆண்டு பெண்கள் சாசனத்தை ஏற்றுக்கொண்டமையை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இலங்கை உட்பட்ட பல நாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்கின்றன. இதில் பெரும்பாலானவை மனித உரிமை மீறல்களாகும்.

இதன் தாக்கமானது, சமூகத்தின் அபிவிருத்தியை பாதிக்கிறது.

இதேவேளை பெண்கள், வாழ்நாள் முழுவதும் பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்பங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே மாநகர சபைகள் மற்றும் சமூக அங்கத்தவர்கள் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பாதுகாப்பு தளத்தை உறுதிப்படுத்த முன்வரவேண்டும் என்று ரெபேக்கா கோரியுள்ளார்.

சர்வதேசத்தில் பால் சமத்துவ வளர்ச்சியை நிறுத்த முடியாது. இலங்கையை பொறுத்தவரை ஜனாதிபதி மைத்திரிபாலவின் முனைப்புக்கள், அரசியலிலும் பெண்களின் முக்கியத்துவத்தை மேம்படுத்த உதவும்.

இந்தநிலையில் 2030ஆம் ஆண்டில் பால் சமத்துவம் 50க்கு 50 என்ற நிலையை அடையும் என்று ரெபேக்கா குறிப்பிட்டுள்ளார். (எ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

விசேட கருத்தரங்கு O/L- தமிழ்
ஆசிரியர்
K.M. நித்தி
இடம்
அறிவாலயம், இணுவில்.
(கந்தசுவாமி கோயில் அருகில்)
காலம்
28-11-2015 - சனிக்கிழமை
நேரம்
8.30 - 1.00
கட்டணம் -200/=
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
* கடந்த ஆண்டுகளில் பல மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள்.
(2587)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.